

24864

# எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது!

(1959)

வைக்கம் முஹம்மது பஷீர்

# எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது

வைக்கம் முஹம்மது பஷீர்

# எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது

*தமிழாக்கம்:*

கே. சி. சங்கரநாராயணன்

சாஹித்ய அகாதெமிக்காக

கலைமகள் காரியாலயம் சென்னை-4.

**Engal Tattavukku Oru Yanai Irundadu.** Tamil translation of the Malayalam novel, **Enruppappakkoranentarnu,** by Muhammad Basheer. Sahitya Akademi, New Delhi (1959), Price Rs. 1.50.

உரிமை:
சாஹித்ய அகாதெமி
*முதல் பதிப்பு 1959.*

வெளியிடுபவர்:
கலைமகள் காரியாலயம்,
*சென்னை-4.*

அச்சிட்டவர்:
சென்னை லா ஜர்னல் அச்சகம்
*(பிரைவேட் லிமிடெட்)*
*சென்னை-4.*

விலை: ரூ. 1.50

# முன்னுரை

புதிய மலையாளக் கதை அரங்கு, மேல் வகுப்பினரின் வாழ்க்கை என்னும் சிறையிலிருந்து விடுபட்டு வெளியே வந்துகொண்டிருக்கிறது. சிறந்த இலக்கியம் என்பது சாதாரண மனிதர்களின் வாழ்க்கையோடு இணைந்ததாக இருக்கவேண்டும். உண்மையும், பெரும்பான்மையான மக்களின் அன்றாட வாழ்க்கையில் காணுவதும் ஆகிய பொருள்கள், இலக்கியத்தின் அடிப்படையாகும். இதை இன்றைய எழுத்தாளர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வார்கள், இந்திய மக்களிடை இன்று காணப்படும் புத்துணர்ச்சியே எழுத்தாளர்களின் இந்தக் கொள்கைக்குக் காரணம். நம்முடைய எழுத்தாளர்கள் இந்தியாவின் சுதந்தரப் போர் என்ற நெருப்பில் ஸ்புடம் போடப்பட்டவர்கள். ஆதலின், நம் மக்களுடைய ஆசைகளையும் மன எழுச்சிகளையும் பொதுமக்களைக் காட்டிலும் அவர்கள் நன்கு அறிவார்கள். ஸ்ரீ வைக்கம் முஹம்மது பஷீர் இவ்வகை எழுத்தாளர்களின் முன்னிலையில் நிற்கிறார்.

நவீன எழுத்தாளர்களை இருவகையாகப் பிரிக்கலாம்: ஒரு சாரார் வெளியுலகைப்பற்றி எழுதுவோர்; மற்றவர் உள்ளுணர்வைப்பற்றி எழுதுவோர். ஸ்ரீ பஷீர் இரண்டாம் வகையைச் சேர்ந்தவர். அவருடைய கதைகளில் - கற்பனையில் - வெளியுலகின் பிரதிபலிப்பைச் சித்திரித்திருக்கிறார். ஸ்ரீ பஷீர் இந்த ரீதியில் பிரசித்தி பெற்ற ஆங்கில எழுத்தாளர் ஸ்ரீ. டி. எச். லாரன்ஸைப் பின்பற்றுகிறார்.

"இப்போது தமிழில் வெளியிடப்படும் புத்தகம், மலையாள இலக்கியத்தில் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அதில் பஷீர், ஒரு முஸ்லிம் குடும்பம், வாழ்விலிருந்து தாழ்விற்கு வருவதைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். அதன் கடைசி வாரிசான கதாநாயகியைப் பழங்காலத்தைக் கனவாகக் காணச் செய்திருக்கிறார். தம் தனிப் பாணியை உபயோகித்து, அவளுடைய கதையை, நம் எல்லோருடைய குடும்பங்களின் கதையாவும் காட்டியிருக்கிறார்.

சாதாரணமாகப் பேசப்படும் கொச்சைமொழியை, தைரியமாகக் கையாண்டு, பஷீர், புதிய எழுத்தாளர் தலைமுறைக்குக் கதையெழுதுவதில் ஒரு புதிய வழியைத் தேடிக்கொடுத்துள்ளார்.

—ஜோஸப் முண்டசேரி

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ''இது பாக்கிய மறுவாக்கும் | .. | 1 |
| 2. | இபிலீஸ் என்ற பகைவன் | .. | 8 |
| 3. | ''நான் நான் என்றவர்கள் எங்கே?" | ... | 15 |
| 4. | பழைய இரண்டு மிதியடிகள் | .. | 22 |
| 5. | காற்று வீசியும் இலை உதிரவில்லை | .. | 31 |
| 6. | ஒரு குருவியின் அழுகை | .. | 39 |
| 7. | திருட்டு முட்டாள்! | .. | 49 |
| 8. | 'பொய்ச் சாட்சி சொல்லமாட்டேன்!' | | 60 |
| 9. | நெஞ்சில் ஒரு வேதனை | .. | 73 |
| 10. | கனவுகளின் காலம் | ... | 84 |
| 11. | புதிய தலைமுறை பேசுகிறது | ... | 89 |

# 1

## "இது பாக்கிய மறுவாக்கும்"

குஞ்சுப்பாத்துமாவுக்குத் தன் குழந்தைப் பருவத்தைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் ஏதோ அநேக ஆயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்ட மாதிரி தோன்றும். அன்றைக்கும் இன்றைக்கும் எத்தனை வேற்றுமை! என்னவெல்லாமோ நடந்துவிட்டன. நினைத்துப் பார்த்தால் நடந்ததெல்லாம் ஒரு வேடிக்கை போலத்தான் இருக்கிறது. அதை நினைத்தால் அவளுக்குச் சிரிப்பு வரும். அதுவும் நல்லதுதான். அழுகையைக் காட்டிலும் சிரிப்பு நல்லதல்லவா?

அவள் பரம சாது. ரப்புல் அல் அமீனுகிய[1] ஆண்டவனின் படைப்பில் ஒரு சிறிய எறும்புக்குக்கூட அவள் துன்பம் தந்ததில்லை. உயிரினங்கள் எல்லாவற்றின்மீதும் அவளுக்கு அன்பு. அவளுடைய முதல் விளையாட்டுத் தோழன் ஒரு யானை! அவள் அதைப் பார்த்ததுகூட இல்லை. இருந்தாலும் அதன்மேல் மிகவும் அன்பு. அவள் வேறு குழந்தைகள் யாருடனும் விளையாடக் கூடாதென்று உம்மா கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தாள். அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலுங்கூட விளையாடக் கூடாது. "நீ யார் தெரியுமா? யானை மக்காருடைய அருமைப் பெண்ணின் அருமந்தப் பெண்ணடி! உங்கள் தாத்தாகிட்டே ஒரு யானை இருந்தது. யானை! எப்பேர்ப்பட்ட யானை தெரியுமா? பெரிய கொம்பனுனை!" குஞ்சுப்பாத்துமா அந்த யானையோடு மானசிகமாக விளையாடி வளர்ந்தாள்.

குஞ்சுப்பாத்துமா ஆடையாபரணங்கள் கலையாமல் வீட்டு முற்றத்தில் உட்கார்ந்துகொண்டு, தன் முன்

யானையொன்று இருப்பதாகப் பாவனை செய்துகொள்வாள். ''என் அருமையான யானை!'' என்று கொஞ்சுவாள். அந்தக் காலத்தில் அவள் தலைமுதல் கால் வரையில் ஒரே தங்கமயந்தான். பட்டைத் தவிர வேறு துணி உடுக்கிறதில்லை. தலைமேல் இட்டிருக்கும் முட்டாக்கில் அழகான சரிகை வேலைகள் செய்திருக்கும். அவள் நல்ல வெளுப்பு. ஆனால் ஒரே ஓர் இடத்தில் மட்டும் கறுப்பு. அந்தத் துக்கத்தை யாரிடம் சொல்லி அழுவது? அவளுடைய பதினான்காவது வயசில் யாரோ சொன்னார்கள், 'இடது கன்னத்தில் உள்ள பெரிய மறு, பாக்கியத்தின் அடையாளம்' என்று. அதற்குப் பின் ஒரு மாதிரி சமாதானம் அடைந்தாள்.

அந்த வயசில் அவளுடைய கல்யாண ஏற்பாடுகள் மும்முரமாக இருந்தன. வரப்போகும் மாப்பிள்ளை யார் என்று யாருக்கும் தெரியாது. யாரானால் என்ன? 'அப்படியானால் நான் `வெற்றிலை போட்டுக்கொள்வேன்' என்று அவள் சொல்லிக்கொண்டாள். விவாகமாகாத முஸ்லிம் வனிதைகள் வெற்றிலை போடக்கூடாது. அதைப்பற்றி வேதப் புத்தகத்தில் ஏதாவது சொல்லியிருக்கிறதா என்று அவளுக்குத் தெரியாது. அது வழக்கத்துக்கு விரோதம்; அவ்வளவுதான். அதுமாதிரி இன்னும் எத்தனையோ! முஸ்லிம் பெண்கள் அந்நிய புருஷர்கள் மத்தியில் போகக்கூடாது. அவள் மிகவும் சின்னப் பெண்ணாக இருந்தபோது போயிருக்கிறாள். ஆனால் அது ஒரு கணக்கோடு சேர்த்தியல்ல. அவளுடைய இளமை நினைவுகளில் புருஷர்களுக்கு இடம் இல்லை. பார்த்திருந்தால்தானே நினைவு இருக்கும்?

அவள் கண்டிருந்த பெண்கள் பெரும்பாலும் காபிரிச்சிகள்: அதாவது முஸ்லிம் அல்லாதவர்கள்: உலகில் இரண்டே இரண்டு சாதிகள்தாம் உண்டு. ஒன்று இஸ்லாம்; மற்றொன்று காபிர். செத்துப் போனால் இஸ்லாமியர் சொர்க்கத்துக்குப் போவார்கள்; மற்றவர்கள் நரகத்துக்கு. காபிர்கள் தப்புச் செய்த சாதி;

முஸ்லிம்களும் உண்மையான மார்க்கத்தை விட்டுத் தவறினல் அவர்களுக்கும் அதே கதிதான்.

அவள் கண்டிருந்த காபிரிச்சிகள் எல்லாரும் அநேகமாய்ப் பள்ளிக்கூடத்து டீச்சரம்மாக்கள். வாப்பாவின் தோளில் சவாரி பண்ணிக்கொண்டு ஆற்றங்கரைக்குப் போனல் அங்கெல்லாம் அவர்கள் கூட்டந்தான். அவர்கள் பட்டணத்துக்குப் போய் நாகரிகம் கற்றுக்கொண்டு வந்தவர்கள், ஆனல் அவர்களில் ஒருத்திக்குக்கூடக் குஞ்சுப்பாத்துமாவின் நகைகளில் கால் பகுதி கூட இல்லை. அவர்கள் அவளோடு கொஞ்சுவார்கள். ''அந்தப் பெண் யாரடி?'' என்று ஒருத்தி கேட்பாள், மற்றொருத்தி பயபக்தியுடன். ''உனக்குத் தெரியாதா? நம்ம பட்டனடிமை காக்காவின் மகள் குஞ்சுப்பாத்துமா: யானை மக்காரின் பெண்வயிற்றுப் பேத்தி'' என்பாள். ஒருத்தி சுவாதீனத்தோடு, ''நம்ம குஞ்சுத்தாச்சுமா பெண்ணல்லவா?'' என்பாள். எல்லாரும் சூழ்ந்து கொண்டு, ''எங்கே கொஞ்சம் சிரி, பார்ப்போம்'' என்பார்கள். அவர்களுடைய உடம்பெல்லாம் நல்ல மணம்: உடையெல்லாம் ஒரு தினுசு, விதவிதமாக 'ஸாரி' உடுத்துக்கொண்டு, பிளவுஸ், பாடிஸ் என்றெல்லாம் சட்டைகள் போட்டுக்கொண்டிருப்பார்கள். அவளையும் உம்மாவையும்போல முண்டு உடுத்துக்கொண்டு குப்பாயம்[2] தரித்திருப்பதில்லை. தலையில் பூ. வேறு. சிலர் அவள் தலையிலும் பூச்சூட்டி விடுவார்கள். கன்னத்து மறுவைக் கிள்ளிவிடுவதுபோல் பாசாங்கு செய்வார்கள். அவர்களைப்போல் இவளும் ஏன் பிளவுஸூம் பாடிஸூம் போட்டுக்கொண்டு பூ வைத்துக்கொள்ளக் கூடாது? அதைக் கேட்டு எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஒருத்தி, ''அதெல்லாம் நீ பெரியவளான பிறகு பார்க்கலாம்'' என்ருள். அன்று முதல் அவள், தான் பெரியவளாக வேண்டும் என்ற ஒரு பிரார்த்தனையையும் தினசரி வழிபாட்டில் சேர்த்துக்கொண்டாள். அதோடு விடவில்லை, உம்மாவிடம் போய், ''ஏன் அம்மா! நான்

எப்போது பெரியவளாவேன்?'' என்று கேட்டாள். உம்மா இதென்ன என்று வாப்பாவிடம் விசாரித்தாள். ஏன் அவளுக்கு இத்தனை கோபம் வரவேண்டும். ''போதுமடி, போதும்; காபிரிச்சி உடுப்பு நமக்கு என்னத்துக்கு? நாம் இஸ்லாமியர்கள்! நாம் அவர்களுக்கு நேர் எதிர் காண்பிக்க வேணும்'' என்றாள். ஏன் அப்படி என்று கேட்க முடியாது. வாப்பாவும், ''ஆமாம் குழந்தே! அப்படித்தான்'' என்று சொல்லிவிட்டார். வாப்பா சொன்னால் அதற்கு மேலே அப்பீல் இல்லை.

முஸ்லிம்களுடைய வாழ்வு இஸ்லாம் வகுத்த வழியேதான் போகவேண்டும். அப்படி வாழ்வதனால் தான் ஊர்க்காரர்கள் வாப்பாவைப் பட்டனடிமைக் காக்கா என்று மதிப்போடும் கௌரவத்தோடும் கூப்பிடு கிறார்கள். வாப்பா ஊருக்குப் பெரியதனக்காரர்; பள்ளி வாசல் தர்மகர்த்தா. அவருடைய தலை, சமய வழக்கப் படி மொட்டையாக இருக்கும். தாடியையும் மீசையை யும் ஒழுங்காகக் கத்தரித்து விட்டிருப்பார். இடுப்பில் ஒரு முண்டு மட்டும். நீண்ட அங்கவஸ்திரமொன்று தோளில் புரண்டுகொண்டிருக்கும். அதன் முனை, தரை யில் படர்ந்து உரசுவது, அவருக்குத் தெரியாது. அதை யாராவது குனிந்து சரிசெய்து விடுவார்கள். ஒரு வேளைத் தொழுகை தவறுவதில்லை. ரம்ஸான் மாதத்தில் முப்பது நாளும் பட்டினி. ஸக்காத்து (வரி)க் கொடுப்பது உண்டு. ஹஜ்ஜுக்குப்[3] போய் வரவேண்டும் என்ற எண்ணமும் உண்டு. அதெல்லாம் பெண்ணின் கல்யாணத்துக்குப் பிறகுதான் பார்க்க வேண்டும்.

கல்யாணக் காரியம் மும்முரமாகி வந்தது. வீட்டில் தினம் ஒரு கல்யாணம் மாதிரி ரகளை. ஏழெட்டுக் கவுளி வெற்றிலை செலவாகும். வாப்பா வெற்றிலை போடுவ தில்லை; உம்மா அதற்கு நேர் எதிர், அவளுக்கு ஒரு கவுளி வெற்றிலையாவது வேண்டும். வெற்றிலை போடுவ தும் வம்பு பேசுவதுந்தான் அவள் ஜோலி, தாழ்வாரத் தில் விரித்திருக்கும் பட்டுப் பாய்க்கு அருகே எப்போதும்

வெற்றிலைப் பெட்டி கிடக்கும். உம்மாவின் உடுப்பும் பட்டுத்தான். சர்வாபரண பூஷிதையாக இருப்பாள். மெத்தைப் பாயை விட்டுக் கீழே இறங்க வேண்டியதில்லை. சில்ட் வேலை செய்த மிதியடிகளைப் போட்டுக்கொண்டு தான் வீட்டுக்குள் நடமாடுவாள். அது சாதாரணப் பாதக் குறடு அல்ல. அதன் குமிழ்கள் இரண்டும் அசல் யானைத் தந்தத்தால் செய்தவை; அவளோடு பேசவும் வெற்றிலை போடவும் எப்போதும் ஒரு கூட்டம் பெண்கள் உண்டு. பேசுவதற்கு விஷயங்கள் அதிகம் இல்லை. ஒன்று குஞ்சுப்பாத்துமாவைப்பற்றி, இல்லாவிட்டால் பிறந்தகத்துப் பெருமையாக இருக்கும். அதுவும் போனால் உம்மாவின் ஏழு நாத்திமார்களைப்பற்றி இருக்கும்.

''உனக்குத் தெரியுமாடி, கதீஜா? என் பெண்ணின் மறு, பாக்கிய மறு!''

''இல்லாது போனால் சும்மா வருமா? யானை மக்காருடைய பேத்தியாச்சே!''

''நானும் அஞ்சு பெற்றேனடி யம்மா! அந்த ஆண்டவனும் நேர்ச்சை[4]க்காரர்களும் செய்த கிருபை; இந்த ஒருத்தி தக்கியிருக்கிறாள்'' என்று உம்மா சொல்வாள். பிறகு பெண்ணின் கைகளைத் தடவிக்கொண்டு, ''ஹூம். இவளுடைய நிக்காஹ்[5] கிடக்கிறது மலைபோலே. நன்றாக நடக்க வேணுமே!'' என்பாள். அடுத்த வார்த்தையில் நாத்திமார்களுடைய ஞாபகம் வந்துவிடும். ''இருக்கட்டும், இவள் நிக்காஹ்வுக்கு இவள் அப்பன் வீட்டுக்காரர்கள் வராது போனால்கூட நன்றாகத்தான் நடக்கும்'' என்பாள்.

மேற்படி மாதர் சங்கத்தினிடமிருந்துதான் குஞ்சுப் பாத்துமா தன் உலக ஞானத்தைக் கற்றுக்கொண்டாள். அதில் கேள்விப்பட்ட ஒரு சங்கதி மட்டும் அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. கோபமும் அழுகையுமாக வந்தது. எல்லார் வீட்டிலும் அவள் வயசில் குழந்தைகள் உண்டு. ஒரு புதிய தலைமுறை வளர்ந்துகொண்டு

வந்தது. அது இருக்கட்டும். அதில் அவளுக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் அவர்களுடைய பெயர்கள்! அட கடவுளே! சுமை கூலிக்காரன், மீன் பிடிக்கிறவன், பெட்டிக் கடைக்காரன். இப்படிப்பட்ட மகா மட்டமான ஜனங்கள் வீட்டிலுங்கூட ஒரு குஞ்சுப்பாத்துமா இருக்கிறாள்! இதென்ன விபரீதம்? அது மட்டும் அல்ல. ஒவ்வொரு குஞ்சுத்தாச்சுமாவும் மக்காருங்கூட உண்டு. இவர்களுக்கெல்லாம் யார் அநுமதி கொடுத்தது? வேறு ஏதாவது பெயர் வைக்கக்கூடாது? அன்று குஞ்சுப் பாத்துமா உலகறியாக் குழந்தை. எந்தப் பிச்சைக் காரனும் தன் பெண்ணுக்கு எந்த மகாராணியின் பெயரையும் வைக்கலாம். அதற்குத் தடை ஏதும் இல்லை. அந்தப் பெயர் மூலமாகவாவது அவர்களுக்கு ராஜ யோகம் அடிக்கட்டுமே! குஞ்சுப்பாத்துமாவுக்கு அந்த வாதம் விளங்கவில்லை. அவள் வரைக்கும் இந்த உலகில் ஒரு குஞ்சுப்பாத்துமாவும், ஒரு குஞ்சுத்தாச்சுமாவும், ஒரு பட்டனடிமையும், ஒரு மக்காருந்தான் உண்டு. அது அவளும் அவளுடைய தாய் தந்தையரும், பாட்டனு மன்றி வேறல்ல. அப்படி இருக்க அதை எப்படிச் சகிப்பாள்? ''அவர்களெல்லாம் ஏன் நம்முடைய பேரை வைத்துக்கொள்ள வேணும் உம்மா''' என்று கேட்டாள். உம்மா சிரித்தாள். மற்றவர்கள் என்ன நினைத்தார் களோ, யாருக்குத் தெரியும்? ''நாளைக்கு நிக்காஹ் பண்ணிக்கொள்ளப்போகிற பெண் கேட்கிற கேள்வியைப் பார்!'' என்று உம்மா, மகளின் கன்னத்து மறுவைத் தடவிக்கொடுத்தாள். உடனே குஞ்சுப்பாத்துமாவுக்கு ஞானோதயம் ஆகிவிட்டது. ஆம், அவளைப் போல வேறு எந்தக் குஞ்சுப்பாத்துமாவுக்குக் கன்னத்தில் மறு இருக்கிறது? உம்மா மற்றவர்களிடம் விசாரித் தாள். ஊஹூம், கிடையாவே கிடையாது! ''ஏன் அப்படி!'' அந்தக் கேள்விக்குப் பதிலாக உம்மா இன்னொரு கேள்வி கேட்டாள்.

''உன் மறுவின் நிறம் என்ன!''

''கறுத்த மறு; கறுப்பாகத்தான் இருக்கும்.''

''உங்கள் தாத்தாவின் யானை என்ன நிறம்.''

குஞ்சுப்பாத்துமா யோசித்தாள். சாதாரணமாக யானையின் நிறம் கறுப்புத்தான்.

''உன்னுடைய நிறம் என்ன.''

அவள்தான் நல்ல வெளுப்பாயிற்றே!

''ஆமாம் வெளுத்த உடம்பில் கறுத்த மறு எப்படி வந்தது.''

அப்போதுதான் குஞ்சுப்பாத்துமாவுக்குத் தன் கறுத்த மறுவின் ரகசியமும் அதன் அந்தஸ்தும் விளங்கின. அவளுடைய பிஞ்சு மனத்தில் ஒரே குதூகலம். அவள், ''நம்ம தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது'' என்று ஆனந்தத்துடன் சொன்னாள். உம்மா பாதக் குறட்டின் குமிழை நெருடிக்கொண்டே, ''அப்படிச் சொல்லடி கண்ணு. எப்பேர்ப்பட்ட யானை? பெரிய கொம்பனானை!'' என்றாள்.

# 2

# இபிலீஸ் என்ற பகைவன்

கல்யாண ஏற்பாடுகள் நடந்துகொண் டிருந்த போது குஞ்சுப்பாத்துமா வேறு ஒரு விஷயத்தைத் தெரிந்துகொண்டாள். தாத்தாவின் யானை ஐந்து பேரைக் கொன்றுவிட்டதாம்! அதைக் கேட்டது முதல் அவளுக்கு ஒரே சங்கடம். யானையின் பேரில் கோபமுங் கூட. 'புத்தி கெட்ட யானை' என்று திட்டவும் திட்டினாள். கொல்லப்பட்ட ஆறு பேரும் காபிர்களாம். மாவுத்தர்கள் போலும்! 'அது ஒரு முஸ்லிமைக்கூடக் கொல்லவில்லை!' என்று உம்மா பெருமையடித்துக்கொண்டாள். முஸ்லிம் யாராவது மாவுத்தன் வேலைக்குப் போவாரோ என்பது அவளுக்குத் தெரியாது. உம்மா சொன்னாள்; ''அது எவ்வளவு புத்திசாலி, தெரியுமா? தாத்தா கிட்டேயிருந்து பழமும் வெல்லமும் வாங்கித் தின்னும். என்னைக் கட்டிக்கொடுக்கும்போது வாப்பாவை அதுமேலே உட்கார வைத்துத்தான் ஊர்கோலமாகக் கூட்டிக்கொண்டு வந்தார்கள்!'' ஒரு வேளை அவளை நாளைக்கு நிக்காஹ் செய்துகொள்பவனும் அதன் மேல் ஏறித்தான் வருவானோ?

தன்னை யாருக்கு எதற்காகக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்கவே அவளுக்குத் தோன்றவில்லை. அவளுடைய நிக்காஹ் கழிந்தால் வாப்பா, ஹஜ் யாத்திரைக்குப் போவார். முகம்மது நபிநாயகம் ஜனித்த புண்ணியஸ்தலம் அல்லவா மக்கா? அங்கே காபா என்ற சிரேஷ்டமான தேவாலயம் இருக்கிறது. அதுதான் இந்த உலகிலேயே மிகப்பழமையான கோயில். அதைக் கட்டியவர் இப்ராஹிம் நபி. வாப்பா அந்த மாதிரி பள்ளி வாசல் ஒன்றும் கட்டவில்லை. இருந்தாலும் எவ்வளவு தர்மம் செய்திருக்கிறார்! அவர் மக்காவுக்குப் போய்த் திரும்பி வந்தால், 'ஹாஜி பட்டனடிமை' என்றே

'பட்டனடிமை ஹாஜியார்' என்றே அழைப்பார்கள். அவளுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. உம்மாவிடம், ''ஏனும்மா, நீ கூட ஹஜ்ஜுக்குப் போவாயா?'' என்று கேட்டாள்.

''அவர் போனால் நானும் கூடத்தான் போவேன்.''

அது அவளுக்கு ஒரு புதிய சங்கதி. குஞ்சுப்பாத்துமா திகைத்தாள். ''அப்படியென்றால் என்னையும் கூட்டிக் கொண்டு போவீர்கள், இல்லையா?''

உம்மா சிரித்தாள். ''அதையெல்லாம் உன்னைக் கட்டிக்கொள்கிற புருஷன்கிட்டே சொல், ''குஞ்சுப் பாத்துமாவை நாணம் பிடுங்கித் தின்றது. அவள் ஒன்றும் பேசவில்லை. அவளைக் கட்டிக்கொள்ளப் போகிற வன் யார்? வாலிபனா கிழவனா? கறுப்பா, சிவப்பா. ஒன்றுமே தெரியாது. யாரோ ஒருத்தன் எங்கிருந்தோ வரப்போகிறான்; அவ்வளவுதான்.

பெண்ணாய்ப் பிறந்தால் ஆணாய்ப் பிறந்தவனைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். இன்றைக்கு நேற்றைக்கு அல்ல; முகம்மது நபி, அவருடைய தோழர்கள் அஸ்ஹாபிமார்கள் காலம் முதல் இப்படித்தான் உலக நியதி. அவர்களுக்கு முந்தி....பல பல நாளைக்கு முந்திக்கூட அப்படித்தான். ஆதம் நபி, ஹவ்வா பீபீயைக் கல்யாணம் செய்துகொண்டார். அவர்களுக்குத் தாயார் தகப்பனார் இல்லாததனால் அல்லாஹ்வே அவர்களுடைய திருக்கல்யாணத்தை நடத்திவைத்தார். இந்த உலகில் உள்ள சர்வ மானிடர் களுக்கும் அவர்கள்தாம் முதல் தாயும் தந்தையும். அவர் களுக்கு முன்னால் பூமியில் மனிதப் பூண்டே இல்லை. ஆதம் நபிக்குப் பிறகு எத்தனையோ நபிகள் தோன்றி யிருக்கிறார்கள். நூஹ், இப்ராஹீம், தாவூத், மூஸா, ஈஸா, முகம்மது. முகம்மது நபிதான் கடைசியாக அவதரித்த நபிநாயகம். இனிமேல் நபிகள் உண்டாக மாட்டார்கள். இனிமேல் உலகம் முடிவடைய வேண்டிய கட்டத்தில் இருக்கிறது.

முகம்மது நபியின் மூத்த பெண் ஹாத்தீம்; அதையே பாத்திமா என்ற பெயராக வைத்திருக்கிறது. முகம்மது நபி, தம் பெண்ணைக் கலிபா ஆலிக்கு விவாகம் பண்ணிக்கொடுத்தார். ஆலி மகா தீர பராக்கிரமசாலி. ஆலியிடம் துல்பஹாார் என்ற பெயருள்ள வாள் ஒன்று இருந்தது. தம் கடைசிக் காலத்தில் ஆண்டவன் ஆக்ஞைப்படி அந்த வாளை ஆலி கடலில் எறிந்துவிட்டார். அந்த வாள், கடலில் உள்ள எல்லா மீன்களின் கழுத்தையும் அறுத்துவிட்டதாம். அதனால்தான் இன்று எல்லா மீன்களின் கழுத்திலும் வாள்கொண்டு வெட்டிய மாதிரி ஒரு வடு இருக்கிறது. அன்று முதல்தான் முஸ்லிம்களுக்கு மீன் ஹலாலாக - அநுமதிக்கப்பட்ட உணவாக-இருந்து வருகிறது. அவளைக் கல்யாணம் செய்துகொள்பவன் ஆலியைப்போல் ஒரு வீரனாக இருப்பானோ? யார் கண்டார்கள்? யாரையும் கேட்கக்கூடாது. சொன்னதைச் செய்யவேண்டும். கொடுத்ததை வாங்கிக் கொண்டு திருப்தியடைய வேண்டும். அதுதான் ஒரு முஸ்லிம் யுவதிக்கு ஏற்பட்ட தர்மம்.

இதைப்பற்றியெல்லாம் இறைவனும் அவருடைய ரஸூலாகிய[6] முகம்மது நபிநாயகமும் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று அவளுக்குத் தெரியாது. ஒன்றும் புரியாமற்போனாலும் குர்ஆன் அவளுக்கு மனப்பாடம், அவளுடைய வாப்பாவுக்கும் பாட்டனுக்குங்கூட அதன் அர்த்தம் தெரியாது. இந்த உலகிலுள்ள எல்லா மரங்களையும் பேனவாக்கிக் கடல்களையெல்லாம் மசியாக்கினால் கூட, திருக் குர்ஆனின் ஓர் அத்தியாயத்தின் பாஷ்யத்தை எழுதி முடிப்பதற்குள், மரமெல்லாம் முடிந்து போகும்; கடலெல்லாம் வற்றிப்போகும். பரிசுத்தமான அந்தக் கிரந்தத்தில் சொல்லாத விஷயம் இல்லை. இல்லாத பொருள் இல்லை! அது கேவலம் மனிதனால் எழுதப்பட்டதல்ல. கருணைக்கடலாகிய ஆண்டவன், தன் தேவ தூதர்களில் ஒருவனான ஜிப்ரீல் என்பவன் மூலம் நபிநாயகத்துக்குச் சொல்லிக்கொடுத்ததாகும். நபிநாயகத்துக்கு

எழுதவும் படிக்கவும் தெரியாமல் இருந்தது. என்றாலும் அவருடைய தாய்மொழியாகிய அரபியில்தான் அது எழுதப்பட்டது. அரேபியா என்று ஒரு ராஜ்யம் உண்டு என்று அவள் கேள்விப்பட் டிருக்கிறாள். மக்காவும் மதினாவும் அங்கேதான் உள்ளன என்றும் தெரியும். மக்கத்தில் நபிநாயகம் பிறந்தார். மதினத்தில் அடக்கம் செய்யப் பட்டிருக்கிறார். உம்மாவும் வாப்பாவும் இரண்டு இடங்களுக்கும் போவார்கள். குஞ்சுப்பாத்துமாவைக் கட்டிக் கொள்ளப் போகிறவன்: அவனும் அவர்களோடு போவதற்குச் சம்மதிப்பானோ? இதுதான் இரவும் ப்கலும் அவள் விசாரம்.

ஒரு நாள் வழக்கம்போல மாலையில் வாப்பா வீட்டிற்குத் திரும்பி வந்தார். அவருடைய கண்கள் கோவைப்பழம்போலச் சிவந்திருந்தன. முகம் கோபத்தால் ஜிவ்வென்றிருந்தது. அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே, ''நமக்கு விளையாட்டுக் காண்பிக்கிறார்களாக்கும், விளையாட்டு! இந்தப் பட்டனடிமைக்கு விளையாட்டொன்றும் வேண்டியதில்லை. ஆண்டவனும் நபியும் நேர்ச்சைக்காரர்களும் இருக்கிறவரையில் இவர்களுக்கு நான் படித்துக் காண்பிக்கிறேன், விளையாட்டு!'' என்று இரைந்துகொண் டிருந்தார். அதென்ன விளையாட்டோ, அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. வாப்பாவின் பேரில் ஒரு கேஸ் தாக்கலாகி யிருக்கிறதாம். அவருக்குப் பள்ளி வாசல் முத்தாவல்லியாக[7] இருக்க உரிமை. இல்லையாம். பின்னே யாருக்கு உரிமை? எப்போதும் ஊருக்குப் பணக்காரன்தானே கோயில் தர்மகர்த்தா? அவளுடைய தகப்பனைரப்போல அங்கே யாருக்குப் பணம் இருக்கிறது? ஓர் ஊரில் இரண்டு பணக்காரர்கள் இருந்தால் போதும்; எப்போதும் ரகளைதான். அடிதடி, கொலை பாதகம், கோர்ட்டுக் கேஸ் எல்லாம் நடக்கும். கோயிலுள்ள இடத்திலெல்லாம் கேஸும் உண்டு.

இதெல்லாம் இபிலீஸ் என்ற சைத்தானின் வேலை என்பது அவளுக்குத் தெரியும். அந்த இபிலீஸ் மாத்திரம்

இல்லையானால் உலகம் ஒரு குழப்பமும் இல்லாமல் எவ்வளவு நன்றாக இருக்கும்! முதல் முதலாக அவள் இபிலீஸைப்பற்றிக் கேள்விப்பட்டது ஓர் 'இராப்பிரசங்கத்'தில். முஸ்லிம் பெண்கள் புருஷர்களைப்போல் மசூதிக்குப் போய்த் தொழுவதில்லை. 'பாவாஸ்' என்ற இரவுப் பிரசங்கங்களை மட்டும் கேட்கப் போவது உண்டு. அப்போதும் ஒரு புறம் மறைவாகப் படுதாப் போட்ட இடத்திலிருந்துதான் கேட்க வேண்டும். அங்கிருந்து பேச்சு மாத்திரம் கேட்கலாம்; ஒன்றையும் காண முடியாது. அதனால் பேசுபவர் நெடுங்குரல் எடுக்க வேண்டும். அன்று, ஒரு பிரசித்த முஸலியாரை[8] ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர் இபிலீஸைப்பற்றிச் சொன்னது குஞ்சுப் பாத்துமாவுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது.

இபிலீஸ் ஆதியில் ஒரு பிரதான தேவதூதனாக இருந்தானாம். அப்படி இருக்கிற காலத்தில் ஆண்டவர் இந்தப் பிரபஞ்சத்தை உண்டுபண்ணினார். முதல் முதலில் ஆண்டவர் முகம்மது நபியை உண்டாக்கினாராம். அதன்பின் பூமியும் சந்திரனும் சூரியனும் அனந்த கோடி நட்சத்திரங்களும் உண்டாயின. முகம்மது நபியின் மூன்று துளி வேர்வையிலிருந்து சகல ஜீவராசிகளும், அதோடுகூட முதல் மனிதனாகிய ஆதம் நபியும் உண்டானார்கள். சகல உயிர்களும் தேவ தூதர்களும், மலக்குகள் என்ற கந்தர்வர்கள் உட்பட எல்லாரும் ஆதம் நபியை வணங்க வேண்டுமென்று ஆண்டவன் கட்டளையிட்டார். இபிலீஸைத் தவிர மற்ற எல்லாரும் அந்த ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்தார்கள். தேவதூதர்கள் அக்கினி ஜ்வாலையில் உண்டானவர்கள். மனித சிருஷ்டியில் மண் தாராளமாக உபயோகப்பட்டது. தீயிற் பிறந்தவன் வெறும் மண்ணாலானவனை வணங்குவதாவது? இதுதான் இபிலீஸின் கட்சி. கடவுளின் உத்தரவை மீறியதால் இபிலீஸ் சொர்க்கத்திலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்டான். அன்று முதல் பழம்பகையைப் பாராட்டி, இன்றுவரை இபிலீஸ், உலகில் குழப்பத்தை

விளைவித்து வருகிறான். அவன் எங்கும் எப்போதும் எப்படி வேண்டுமானாலும் தோன்றுவான். எல்லா மொழிகளிலும் பேசுவான். எப்படியாவது மனிதர்களைத் தெய்வத்தினிடமிருந்து பிரித்து, அவர்களை அழித்துவிட வேண்டும் என்ற ஒன்றே குறி அவனுக்கு.

வாப்பா சொல்வது மாதிரி இஸ்லாமானவர்களுக்கு ஒரு பிரத்தியேகச் சின்னம் ஏற்பட்டிருந்தது. ஆண்கள் முண்டு, இடது பக்கம் கொசுவம் வைத்து உடுத்துக் கொள்ள வேண்டும். தலையை மழுங்க மொட்டையடித்துக்கொள்ள வேண்டும். தோட்டத்தில் செடிகளைக் கத்தரித்துவிடுவது மாதிரி, தாடியை வளர்த்துக் கத்தரித்துவிட வேண்டும். பெண்கள், காதுகளில் அலஸ்ஸுகள் குத்திக்கொண்டு, குப்பாயம் என்ற முழுக் கைச் சட்டையை அணிந்துகொண்டு, முட்டாக்கால் முகத்தை மூடிக்கொள்ள வேண்டும். கூந்தலை வாரிக்கொள்ளலாம். ஆனால் வகிடு பிரித்துக்கொள்ளக் கூடாது. இதில் ஏதாவது ஒன்றை மீறினாலும் போதும்; இபிலீஸ் பிடித்துக் கொள்வான்.

ஊரில் . ஓர் இளம்பிள்ளை இதற்கெதிராகத் தலைமயிரை வளர்த்துக்கொண்டு, கிராப்பு வைத்துக்கொண்டான். அதோடல்லாமல் வகிடும் பிரித்துக்கொண்டான். வாப்பா அவனைப் பிடித்து இழுத்து வரச்சொல்லி, நாவிதனைக் கொண்டு மொட்டையடித்துவிட்டார். ''ஏய், இந்தப் பட்டனடிமைக்கு உயிருள்ளவரை, ஆண்டவனும் நபியும் துணையிருக்கிறவரை, நீங்களெல்லாம் நம்ம பழக்க வழக்கத்தை விட்டு, ஓர் இம்மிகூட அசைகிறதற்கு நான் சம்மதிக்கிற தில்லை'' என்று உறுமினார். இது போதாதா, வினையை ஆரம்பிக்க?

தலையை வளர்த்துக்கொண்டவர்களெல்லாரும் இபிலீஸின் கட்சி. அவன் அவர்கள் தலையில் ஏறி உட்கார்ந்து கொள்வானும்; அதற்காகத்தான் தொப்பியும் முக்காடும் ஏற்பட்டிருக்கின்றன. ஆண்கள், தொப்பியிடாவிட்டால் அவசியம் ஒரு முண்டாசாவது கட்டிக்

கொள்ள வேண்டும். இதையெல்லாம் வாப்பா சொல் வாரே தவிர அவர் தலையில் ஒன்றும் இராது. தொழுகை யின்போது மாத்திரம் தொப்பி இருக்கும். அப்படி யானால் அந்த வேளையைத் தவிர மற்றச் சமயங்களில் வாப்பாவின் தலையில் இபிலீஸ் உட்கார்ந்திருக்கிருனே என்று குஞ்சுப்பாத்துமாவுக்கு ஒரு சந்தேகம். சேசே! அப்படி இருக்காது. வாப்பாவின் பக்கத்தில் வருவதற்குக் கூடச் சைத்தான் பயப்பட மாட்டாளு? அவளைப் பொறுத்தவரையில் அவள் எப்போதும் தலையைக் கவன மாக மறைத்துக்கொள்வாள். உம்மாவும் அப்படித்தான். இந்த இபிலீஸிடமிருந்து தப்புவதற்கு என்னவெல்லாம் செய்யவேண்டி யிருக்கிறது!

''யா ரப்புல் அல் அமீன்! இபிலீஸின் சதியிலிருந்து எங்களைக் காப்பாற்று!''

## 3

## "நான் நான் என்றவர்கள் எங்கே?"

ருஞ்சுப்பாத்துமா சிலைபோல் அமர்ந்திருந்தாள். அவளுடைய கைகால்கள் மருதோன்றியிட்டுச் சிவந்திருந்தன. கண்கள் மையிட்டுக் கறுத்திருந்தன. பார்த்தால் ஏதோ ஓர் அப்ஸரஸ் மாதிரி தோன்றும். யாருக்காக இந்த அலங்காரம்? முதல் முதலில் கல்யாணம் ஒரு வேடிக்கை என்று அவள் நினைத்தாள். எவ்வளவு வேண்டுமானாலும் வெற்றிலை போட்டுக்கொண்டு உதட்டைச் சிவப்பாக்கிக்கொள்ளலாம். யஜமானி ஸ்தானத்தில் வீட்டுச் சாவிக்கொத்தை இடுப்பில் செருகிக் கொள்ளலாம். காதுகளில் பொன் அலஸ்ஸுகள் அணிந்து கொள்ளலாம். தாயார் தகப்பனுருடன் ஹஜ்ஜுக்குப் போகலாம்; அதாவது வரப்போகும் அந்த மனிதன் சம்மதித்தால்.

அவளை விவாகம் செய்துகொள்ளத் தயாராக இருந்த இளைஞர்களில் அநேகர், யானை மக்காரின் பேத்தியின் அந்தஸ்துக்குத் தகுந்தவர்களாக இருக்கவில்லை. சிலருக்குப் பணம் இல்லை. சிலருடைய குடும்பம் அவ்வளவு பழமையானதல்ல. இப்படியாகக் கழித்துக் கழித்து, நாட்கள் போய்க்கொண்டேயிருந்தன. அவளுடைய வயசும் அதிகமாகிக்கொண்டே வந்தது. அவளுக்கு உள்ளூற ஓர் ஆசை. அதை ஆசை என்று சொல்ல முடியாது; ஓர் எண்ணம் என்று வைத்துக்கொள்ளுங்களேன். தன்னை விவாகம் செய்துகொள்ளப்போகும் வரனை விவாகத்துக்கு முன் ஒரு முறை அவள் பார்க்கவேண்டும். கண்டால் போதும். வேறொன்றும் வேண்டாம். இதை யாரிடம் சொல்வாள்? அப்புறம் அதைவிட அபத்தம் வேறு ஒன்று உண்டோ? ஒரு முஸ்லிம் பெண்மணி செய்கிற காரியமா அது? என்றாலும் அவள் மனத்துள் அந்த ஆசை வளர்ந்துகொண்டே வந்தது. வெறுமென இருந்து வாடுவதன்றி அவள் என்ன செய்ய முடியும்?

வீட்டில் ஐந்தாறு வேலைக்காரர்கள் உண்டு. எப்போதும் ஒரே சத்தமும் ஆர்ப்பாட்டமும். நடுநடுவே உம்மாவின் மிதியடிக் கட்டைகள் டக்டக்கென்று ஒலிக்கும். வெளியே தகப்பனாரின் குரல். புறத்தில் எப்போதும் ஒரு கூட்டம் ஆட்கள். அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று அவளுக்குப் புரிவதில்லை. கோர்ட்டு, வக்கீல், வாதி, பிரதிவாதி, சாட்சி, இப்படி என்னவெல்லாமோ! நடுநடுவே அவள் கல்யாணப் பேச்சும் அடிபடும். அதை அவள் தன் ஒவ்வோர் அணுவாலும் சிரத்தையுடன் கேட்க முயல்வாள். ஆனால் அவளால் ஓர் அணுவும் நகர முடியாது. லேசாக அசைந்தால் கூட ஜல் ஜல்லென்று சப்தம் கிளம்பி, உலகுக்கெல்லாம் தெரிந்துவிடும். அப்புறம் வெட்கக்கேடு! மூச்சுவிட்டால் புல்லாக்கு அசையும். நடந்தால் அதைவிட மோசம். அத்தனை ஆபரணங்கள். இவையெல்லாம் எதற்கு? சிலவற்றை எடுத்து வைத்துவிட்டால் என்ன? ஆனால் பெண் பார்க்க வரும் நாரீமணிகள் எந்த நிமிஷத்தில் முற்றத்து வாசலைக் கடந்து, இரண்டாம் கட்டுக்கு வருவார்கள் என்பது யாருக்குத் தெரியும்?

வருகிறவர்களும் அவளைப்போல் பொன்னாற் போர்த்தப்பட்டுத்தான் வருவார்கள். அவர்கள் அவளிடம் கேட்கிற கேள்விகள் எல்லாம் சந்தேகமயம். ஒரு மகராசி அவளுடைய வாயைத் திறந்து காட்டச் சொன்னாள். எல்லாப் பற்களும் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டாமா? ஏதாவது விழுந்திருந்து அல்லது சொத்தைப் பல்லாக இருந்தால்? நல்ல வேளை! அவளுடைய பற்கள் கேடின்றி வரிசையாக முத்துக்கோத்தாற்போல அமைந்திருந்தன. சிலருக்கு அவளுடைய அறிவைப்பற்றியும் பக்தியைப்பற்றியும் சந்தேகம். பிறகு பிள்ளையைச் சைத்தானின் கட்சியில் சேர்த்துவிட்டால் என்ன செய்வது? ஒருத்தி கேட்டாள், ''நம்மைப் படைத்தது யார்''? என்று.

''அல்லாஹ்.''

''உலகின் முடிவைக் குறிக்கும் அடையாளங்கள் எவை?''

''இவ்வுலகம் நிச்சயமாய் நசித்துப்போகும். அதற்குமுன்..'' - குஞ்சுப்பாத்துமா விஸ்தாரமாய்ச் சொன்னாள், ''தாழ்ந்தவர்கள் உயர்வார்கள்; உயர்ந்தவர்கள் தாழ்வார்கள். பொய்கள் வளரும், மதங்கள் நசிக்கும். பரஸ்பர அபிமானமும் நம்பிக்கையும் தொலையும். கற்புக் குறைந்து, பெண்கள் நாணம் இல்லாதவர்கள் ஆவார்கள். இன்பங் குறைந்து துன்பம் மலியும். ராஜாதிகாரம் குரூரமாகும். அப்போது மகா யுத்தங்கள் உண்டாகும். ஆனாலும் உலகம் அழியாது. உலகத்தை அழிக்க அல்லாஹ் ஒருவரால்தான் முடியும். அழிவிற்கு முன்னே மனிதர்கள் மறதியென்னும் மாயையில் மூழ்கி விடுவார்கள். கடைசி நாள் காலையில் ஒரு மாபெரும் சப்தம் அவர்கள் காதில் விழும். அதுதான் ஸூர் என்ற வாத்தியம்!

''அதை ஊதுபவன் இஸ்ராபீல் என்ற தேவதூதன். அதில், உலகத்தில் எத்தனை உயிரினங்கள் உண்டோ அத்தனை துவாரங்கள் உண்டு. அந்த ஓசை, கிரமப்படி அதிகமாகிக்கொண்டு வரும்போது, மனிதர்கள் மருண்டு, மயங்கி, மரித்துப் போவார்கள். பூமி அதிர்ச்சியினால் நிலம் பிளந்து, கடல் பொங்கி அதனுள் பாயும். மலைகளும் மகா பர்வதங்களும் லட்சோபலட்சம் துண்டுகளாய்ச் சிதறி உடையும். காற்றுப் புயலாகி வீசும். உலகை அக்கினி மறைத்துவிடும். வானம் இடிந்து, சூரியனும் சந்திரனும் தாரகைகளும் எரிந்து, கருகிக் கரித்துண்டுகளாய்ப் போய்விடும். நவக்கிரகங்களுக்கும் அண்ட சராசரங்களுக்குங்கூட இதே கதிதான். கடைசியில் எல்லாம் வல்ல இறைவன் மட்டுமே மிகுந்திருப்பார்! அப்போது, 'நான்', 'நான்' என்று அகங்காரங்கொண்டு அறைகூவி அழைத்த முடிமன்னர்களும் மற்றவர்களும் மண்ணோடு மண்ணாகப் போயிருப்பார்கள். கோடாநுகோடி யுகங்களுக்குப் பின் மீண்டும் சிருஷ்டி. பூமியும் வானும்,

கடலும் மலையும், சூரிய சந்திரர்களும் உயிரினங்களும் உண்டாகும். நல்லவரை ரட்சிப்பதும் கெட்டவர்களை ஒறுப்பதும் மீண்டும் தொடரும்!''

'வந்திருந்த வனிதைகள் இதைக் கேட்டுவிட்டுக் கை தட்டுவார்கள். நல்ல வேளையாக இதெல்லாம் அவளுக்கு மனப்பாடம். கேள்விக்குப் பதில்; பிறகு பரிசோதனை; மீண்டும் கேள்விக்குப் பதில் - இப்படியாக எத்தனை பேர்! வருபவர்கள், ஒன்று பிள்ளைக்காக, இல்லாவிட்டால் சகோதரர்களுக்காக வருவார்கள். அவளுக்கு ஓர் அண்ணன் இருந்தால் எப்படி இருக்கும்! அப்போது அவளும் சில வீடுகளுக்குப் போய், அந்த அந்த வீட்டுப் பெண்களை இப்படிக் கேள்வி கேட்டு மடக்கலாம் அல்லவா?

ஒருத்தி, ''ஆயிஷா பீபி யார்?'' என்று கேட்டாள்.

''நபிநாயகத்தின் தர்ம பத்தினி.''

''அவளுக்குக் காது குத்தியிருந்ததோ?''

''ஓ! இரண்டு காதும் குத்தியிருந்தார்கள்.''

''அதில் எத்தனை ஆலிக்குத்துகள் மாட்டியிருந்தன?''

இப்படி ஒரு கேள்வி! அதற்கும் அவள் தயாராகப் பதில் சொன்னாள்.

''ஜீப்ரீல் தேவதூதன் சொர்க்கத்திலிருந்து ஒரு முத்துக்குலையைக் கொண்டு வந்து, ரஸுல் அல்லாஹு அலைஹிஸல்லமின்[3] கையில் கொடுத்தார். அதை நபிநாயகம் அப்படியே ஆயிஷாவின் காதில் அணிவித்தார்.''

குஞ்சுப்பாத்துமாவின் காதில் முத்துக்குலை ஒன்றும் காய்த்துத் தொங்கவில்லை. ஆனால் இரு காதுகளிலும் சேர்த்து இருபத்தொரு பொன் வளையங்கள் இருந்தன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் இலை போன்ற ஓர் அலஸ்ஸு கோத்திருந்தது. சிறு காற்று அடித்தாலும் அவையெல்லாம் சேர்ந்து ஒலிக்கத் தொடங்கும். இதைத் தவிர நுனிக்காதுகளில் தோடுகள் வேறு. கழுத்தில் தங்கச் செயின்களுடன் காறையும் உண்டு. உம்மாவுடையது போலத் தாலிச் சரடு இல்லை. அதற்கு நிக்காஹ்

கழிய வேண்டும். கைகள் இரண்டிலும் நிறையத் தங்க வளையல்கள். இடுப்பில் ஒரு தங்க ஒட்டியாணம். அதிலும் அலஸ்ஸுகளும் கடுக்காய்களும் கோத்திருக்கும். கால்களில் சிலம்புகள். அதனுள் அரிசி போன்ற பரல்கள் அடக்கப்பெற்றிருந்தன. அவள் நடந்தால் அவை ஜல் ஜல்லென்று சப்தமிடும்.

அவளுக்கு வேலை ஒன்றும் இல்லை. சும்மா இருந்தால் போதும் என்று தாய் தந்தையர் நினைத்தார்கள். பசிக்காமலே சாப்பாடு; தூக்கமின்றியே உறக்கம். எப்போதாவது சில சமயம் அவள் வீட்டு முற்றத்தில் நின்றுகொண்டு நிலவு வீசும் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருப்பாள். மனத்தினுள் ஏனோ உள்ளூற ஒரு கலக்கம். அதற்கு என்ன காரணம், அவளுக்கு இவ்வுலகில் இல்லாதது ஒன்று உண்டோ, அப்போது? ஏதோ பிரமை என்று நினைத்துக்கொண்டு மறுபடியும் வானத்தை அண்ணாந்து பார்த்து முறுவலிப்பாள். அதற்குள் உள்ளேயிருந்து உம்மாவின் குரல் கேட்கும்: ''இந்த முட்டாள் பெண்ணு இப்படியா நடுமுற்றத்தில் நிக்கும்! யாராவது பார்த்தால்!''

''வானத்திலே யாரும்மா இருக்கிறார்கள்?''

''போடி பைத்தியக்காரி! இப்ரீத்தும் ஜின்னும் அப்படித்தான் உலாத்தும்.''

நம் கண்ணுக்குத் தெரிவதுபோல் ஆகாயம் அத்தனை சூனியம் அல்ல. மலக்குகள், ஜின்னுகள், இப்ரீத்துகள், இவையெல்லாம் போதாவென்று இபிலீஸுங்கூட ஆகாயத்தில்தான் சதா திரிந்துகொண்டிருப்பான். போகிற போக்கில் பெண்ணைப் பார்த்து வைத்தால்? அவ்வளவுதான், காரியம் கெட்டுப்போகும். குஞ்சுப்பாத்துமா, பதில் பேசாமல் உள்ளே போவாள். அவளுக்குத் தன்னை மனிதர்களோ மலக்குகளோ[10] பார்ப்பதில் விரோதம் இல்லை. ஆனால் அவள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஒரு குடும்பப் பெண்!

அவள் ஒரு கைதி. காற்றும் ஒளியும் அவளுக்கு

ஏற்பட்டவை அல்ல. அவள் வளர்ந்துகொண்டே வருகிறாள். அவளுடைய உடைகள் சிறுத்துக்கொண்டே வருகின்றன. அவள் என்ன என்னவோ கனவுகள் காண்கிறாள். அவை யாரிடமும் சொல்லக்கூடியவை யல்ல. அவை அவளுடைய ஒவ்வோர் அணுவையும் சூடு பிடிக்கச் செய்கின்றன. கனவுகளுக்கிடையே அவளுக்கு இருபத்தொன்றும் வயசும் தாண்டிவிட்டது. அப்போதுதான் அவளுடைய வாழ்க்கையில் என்றும் இல்லாத புதிய மாறுதல்கள் ஏற்பட்டன.

அவளுடைய தங்க நகைகளையும் உம்மாவுடைய நகைகளையும்-எல்லாம்-வாப்பா கழற்றி வாங்கிக்கொண்டார். எல்லாவற்றையும் விற்று வியாச்சியம் நடந்தது. குஞ்சுப்பாத்துமாவின் உடலில், நகைகளின் பாரம் வர வரக் குறைந்துகொண்டே வந்தது. எந்நேரமானாலும் வாப்பாவையும் அவருடைய பரிவாரங்களையும் கச்சேரி வாசலில் பார்க்கலாம். கேஸ் கடைசியில் விபரீதமாக முடிந்தது. தீர்ப்பு வாப்பாவுக்கு விரோதமாயிற்று. அவர்கள் இனி அவமானத்தோடும் தோல்வியோடும் வறுமையோடும் வெளியேற வேண்டியதுதான்.

எங்கே போவது?

ஒரு நாள் மாலை: அன்று நிலா, நேரத்திலேயே வானவீதியில் புறப்பட்டுவிட்டது. தான் பிறந்தது முதல் வளர்ந்து வந்த வீட்டுடன் குஞ்சுப்பாத்துமா விடைபெற்றுக்கொண்டாள். எல்லாரும் படியை விட்டு இறங்கியாகிவிட்டது. முன்னால் எப்போதும்போல் நீண்டு நிமிர்ந்தபடி வாப்பாவும், அவருக்குப் பின் தலையைக் குனிந்துகொண்டு கண்ணீர் பெருக்கியபடி உம்மாவும். குஞ்சுப்பாத்துமாவின் முகம் வெளிறிப்போய் உணர்ச்சியற்றிருந்தது. அவள் எல்லாருக்கும் பின்னால் நடந்தாள். ஊர் ஜனங்கள் எல்லாரும் மௌனமாக அவர்கள் தெரு வழியே செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கடைசியில் பள்ளிவாசல் வழியாக ஆற்றங்கரையை நோக்கிப் போக வேண்டும்.

உலகம் என்னவோ தன்பாட்டுக்கு ஏற்பட்ட ரீதியில் தான் போய்க்கொண்டிருந்தது. ஆனால் அந்த மூன்று பேருக்கு மட்டும் பழமை, நிகழ்ச்சி, எதிர்காலம் - எல்லாம் தகர்ந்து போய்விட்டன! இருந்தாலும், நிலவின் ஒளியில் ஆறும் மணலும் தெளிந்து, பரந்து, எவ்வளவு அழகாகக் கிடக்கின்றன! தூரத்தில் சிலர் ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் மணலில் உட்கார்ந்தபடி வம்பு பேசிக்கொண்டிருந்தார்கள். இதிலெல்லாம் ஒரு மாறுதலையும் காணோமே!

குஞ்சுப்பாத்துமா தன் தாய்தந்தையருக்குப் பின்னால், எங்கே போகிறோம் என்ற நினைவே இல்லாமல் நடந்து போனாள். அவளுடைய நடந்தறியாத கால்கள் உளைந்தன; உடல் தளர்ந்தது. இந்த வெளியுலகம் எவ்வளவு பயங்கரமான அழகுடன் இருக்கிறது! அவர்கள் முன், ரஸ்தா ஜன சூனியமாக நீண்டு கிடந்தது. நிலவு வெளிச்சத்தில் அவர்கள் நடந்துகொண்டே இருந்தார்கள். அவர்கள் எங்கே போக வேண்டும்? இந்த இரவுக்கும் ஓர் முடிவு உண்டோ?

## 4

# பழைய இரண்டு மிதியடிகள்

ஆஞ்சுப்பாத்துமாவுக்குத் தன் புதிய வாழ்க்கை மிகவும் பிடித்திருந்தது. நடந்தது என்னவோ மிகவும் மோசந்தான். ஆனாலும் இப்போது அவளுக்குக் கிடைத்திருக்கும் புதுமையான சுதந்தரம் எவ்வளவு இனிமையானது! நாலு பேரைப் பார்க்கலாம்; நல்ல காற்றை உட்கொள்ளலாம்; கதிரவனின் வெளிச்சத்திலும் நிலவின் ஒளியிலும் நிற்கலாம். ஆடவும் பாடவும் ஓடவுங்கூட ஓடலாம். எதற்கும் அவளுக்கு உரிமை உண்டு. மலக்கு, ஜின், இப்ரீத் இன்னும் யார் வேண்டுமானாலும் வரட்டுமே! அற்புதந்தான்! ஒருவரும் வரக் காணவில்லை. பணம் இல்லாதவர்களிடம் சைத்தானுக்குக்கூட வேலை இல்லை. ஆனால் அப்படி ஒரேயடியாக மூலையில் ஒதுக்கி விடப்பட்டதாகச் சொல்ல முடியாது. பணம் இல்லாவிடினும் இன்னும் அவளிடம் அழகும் இளமையும் உண்டு. ஆண்கள் சிலர், அவள்மீது ஒரு நோட்டம் வைத்திருந்தார்கள். மற்றும் சிலர் அவளை நோக்கிக் கண் அடித்தார்கள். வேறு சிலர் ஒன்றிரண்டு நோட்டுகளைக்கூடக் காண்பித்தார்கள். அது நல்லதற்கல்ல என்பதை அவள் அறிவாள். இந்தக் காலிகளை என்ன செய்வது? யார் கண்ணிலும் படாமல் வீட்டின் பின்புறத்தில் உள்ள புளியமரத்தடியிலோ; இல்லை, இன்னும் சற்றுத் தூரத்தில் உள்ள அல்லிக் குளத்தின் கரையிலோ போய் நிற்கலாம். குளத்தில் ஜலம் பச்சையும் நீலமுமாக இருக்கும். ஜலமட்டத்தில் வெள்ளையும் இளஞ் சிவப்புமாகக் கொள்ளைப் பூக்கள்; அகலமும் வட்டமுமான இலைகள். குளிர்ந்த தென்றல் விரிந்து கிடக்கும் பூக்களைத் தாலாட்டும்.

அவர்களுடைய வீடு, சுண்ணும்பு பூசாமல் வெறும் செங்கல்லும் களிமண்ணும் கொண்டு கட்டியது; பார்த்

தால் வீடென்று சொல்ல முடியாது. ஏதோ தோல் உரித்த பிராணியின் சவம் என்று சொன்னால் தகும். இரண்டு அறைகள், ஓர் அடுக்குள். வைக்கோலால் வேய்ந்த கூரையில் இடைக்கிடை, விளைந்த நெற்கதிர்கள் தொங்கும். சாமான்கள் அதிகம் இல்லை; இரண்டு மூன்று பாய்களும் தலையணைகளும். துணிகள் வைத்துக் கொள்ள ஒரு டிரங்குப் பெட்டி, சில மண்ணெண்ணெய் விளக்குகள். அடுக்குள்ளில் சமைப்பதற்காகச் சில மண் பாண்டங்கள். சாப்பிடுவதற்குப் பீங்கான் தட்டுகள், வேறு சில தட்டு முட்டுச் சாமான்கள். அன்றாடச் சாப்பாட்டுக்கே கஷ்டந்தான். பழைய வீட்டிலிருந்து ஒன்றும் கொண்டுவர இயலவில்லை. உடுத்த உடை யோடும் வீசிய கையோடும் வெளியேறியதுதான். உம்மா மட்டும் எப்படியோ தன் மிதியடிகள் இரண்டை யும் கொண்டுவந்து விட்டாள்! உம்மா எப்போதும் அந்த மிதியடிகளைத் தன் அருகிலேயே வைத்துக்கொண் டிருந்தாள். இப்போதும் அவளுக்கு யாருடனாவது கலகல வென்று பேச வேண்டும். வாய் நிறைய வெற்றிலை போட வேண்டும். வாப்பாவுக்கு மாத்திரம் எத்தனை மாற்றம்! பட்டென்று தலையெல்லாம் நரைத்துப் போய் விட்டது. யாருடனும் அவர் அதிகம் பேசுவதில்லை. எங்கோ கிட்டாத லட்சியத்தைப் பார்ப்பதுபோல ஒரு பார்வை. 'உம்! ஆண்டவனும் நபிநாயகமும் நேர்ச்சைக் காரரும் வகுத்த விதிப்படிதானே நடக்கும்? நான் ஒரு நேரத் தொழுகை தவறினதில்லை. ஒரு நோன்பு நோற் காமல் விட்டதில்லை. ஆண்டவனுக்கு இதுதான் இஷ்ட மென்றால் நடக்கட்டும்.'

அப்படியானால் இது எப்படி நேர்ந்தது? இதற்கு யார் பொறுப்பாளி? குஞ்சுப்பாத்துமா யோசித்தாள். வாப்பா, குற்றவாளி என்று அவள் மனம் ஒப்பவில்லை. உம்மாவும் அத்தைமார்களுங்கூட அதற்கு உத்தரவாதி கள் அல்ல. திருக் குர்ஆன்மீது சத்தியஞ்செய்து பொய்ச்சாட்சி சொன்ன பெரிய மனிதர்கள்கூடப்

பொறுப்பாளிகள் அல்ல. உண்மையில் அதற்கு ஜவாப் தாரி இபிலீஸ் என்ற சைத்தான்தான்! ''ஆண்டவனே, இனிமேலாவது எங்களை இபிலீஸிடமிருந்து காப்பாற்று!'' என்று அவள் வேண்டிக்கொண்டாள். அதைத் தவிர வேறு என்ன செய்வது?

சைத்தான் செய்த கூத்து இதுதான். வாப்பாவின் கைவசம் இருந்த தென்னந்தோப்புகளும் நன்செய் நிலங் களும் அவருடைய ஏகபோக பாத்தியதை அல்ல. அந்தப் பெரிய வீடும் மற்றச் சொத்துக்களும் அவருக்கும் அவருடைய ஏழு சகோதரிகளுக்கும் கூட்டுப் பாத்தியதை யாகும். ''இரவோடு இரவாக எங்கள் உம்மாவைக் காக்கா,[11] மாட்டு வண்டியிலே ரீஸ்தராபீசுக்குக் கூட்டிப் போய், எல்லாவற்றையும் எழுதி வாங்கிக்கொண்டார்'' என்று அத்தைமார்கள் புகார் செய்தார்கள் ''உம்மா அவள் அருமைப் பிள்ளைக்கு எழுதிவைத்தது'' என்பது வாப்பாவின் வாதம். வழக்கு, வருஷக்கணக்கில் நடந்தது. இரண்டு கட்சிக்கும் ஏகப்பட்ட செலவு. அசகாய சூரர்களான வக்கீல்கள் இரண்டு கட்சிக்கும் வாதித்தார்கள். வழக்கு ஜயிப்பதற்காகப் பெரிய பெரிய மசூதிகளில் விசேஷப் பிரார்த்தனைகளுக்கும் நேர்ச்சை களுக்கும் ஏற்பாடு ஆயிற்று. எத்தனையோ பள்ளிவாசல் களில் கொடியேறிச் சந்தனக் கூட்டு உற்சவம் நடந்தது. இரு தரப்பாரும் ஊரில் பரம யோக்கியர் என்று பெயர் படைத்த பெரிய மனிதர்களைப் பொய்ச்சாட்சி சொல்ல அழைத்தார்கள். இப்படியாக வாப்பாவுக்குச் சாதகமாக வரும்போல் இருந்த சமயத்தில் அசம்பாவிதம் நடந்து விட்டது.

'பட்டனடிமையின் தாயாருக்குப் பைத்தியம். ரிஜிஸ்தர் பத்திரத்தில் கைநாட்டு இடும்போது அவளுக் குப் புத்தி ஸ்வாதீனம் இல்லை' என்று யாரோ சொன்னார்கள். அதற்கு ருஜு? கிழவி செத்துப்போய் அவளைப் புதைத்த இடத்தில் மண் மேடுகூட இட்டு விட்டது. அவளுக்குப் பைத்தியம் என்று சத்தியஞ்

செய்ய நாலு பேர் முன்வந்தார்கள். சிலர், "கிழவிக்குப் பைத்தியம் இல்லை, ஆனாலும் பெண்களுக்குச் சொத்தில் பங்கு உண்டு" என்று வாதித்தார்கள். இந்தச் சிக்கல் பிடித்த வழக்கின் விவரம் ஒன்றும் குஞ்சுப்பாத்துமாவுக்குப் புரியவில்லை. எல்லாம் இபிலீஸின் சூத்து என்று மட்டும் தெரியும். தீர்ப்பு, வாப்பாவுக்கு விரோதமாக ஆயிற்று. பள்ளிவாசல் தர்மகர்த்தாக் கேசிலும் இதிலுமாக எத்தனையோ சொத்துக்கள் கடனுக்குப் போய் விட்டன. எஞ்சியவை ஆற்றங்கரை ரோட்டிலுள்ள அந்த வீடும் சுற்றிலும் உள்ள தோட்டமுமே.

தோட்டத்தில் நாலு கமுக மரங்கள், ஒன்பது தென்னமரங்கள், மறைவில்லாத ஒரு கிணறு, ஒரு கொறுக்காப்புளி மரம்; தவிர ஒரு கோடியில் அல்லிக் குளம். அந்தக் குளத்தை முதல் முதலாகப் பார்த்த போது குஞ்சுப்பாத்துமாவுக்குப் புளகாங்கிதம் எடுத்தது. அவள் அன்றுதான் முதல் முதலாக ஓர் ஆம்பல் பொய்கையைக் காண்கிறாள். வெள்ளையும் சிவப்புமாக எத்தனை பூக்கள்! அவற்றையெல்லாம் எண்ணத் தொடங்கினாள். ஆனால் ஒரு நாளும் முழுவதும் எண்ணியதில்லை. பாதியில் யாராவது எதற்காவது கூப்பிடுவார்கள். அவளுடைய வீட்டுக் கிணற்றைச் சுற்றிலும் மறைவே இல்லை. ஆற்றங்கரையில் போய்க் குளிப்பதானால் பாதைவழியே நெடுந்தூரம் நடக்க வேண்டும். கல்யாண வயசை அடைந்திருக்கும் ஒரு பெண் தெருவழியே எப்படிப் போவாள்? ஒரு நாள், 'அல்லிக்குளத்தில் குளித்தால் என்ன?' என்று அவளுக்குத் தோன்றியது. அப்போது நல்ல உச்சி வேளை. முதல்தரமான வெயில் காய்ந்து கொண்டிருந்தது. சுற்றுமுற்றும் வெகு தூரத்துக்கு யாரையும் காணவில்லை. அவள் துண்டும் கையுமாகக் குளக்கரைக்குப் போனாள். உடைகளைக் கழற்றிப் புல் தரையில் வைத்துவிட்டு, வெறும் முண்டுடன் மெதுவாகத் தண்ணீரில் இறங்கினாள். அப்பப்பா! எவ்வளவு ஜில் லென்று இருக்கிறது! மார்பளவு தண்ணீரில் அவள்

முங்கினாள். தொடர்ந்து இரண்டு மூன்று முழுக்குகள் போட்டுவிட்டு உடம்பைத் தேய்த்துக்கொண்டாள். என்ன சுகம்! இன்ப லாகிரியில் அசிரத்தையாகத் தண்ணீருக்குள் பார்த்தபோது—ஆ! ஏதோ ஒரு கறுப்பான வஸ்து அவளை நோக்கி விரைவாக நீந்தி வருகிறது. மாறி மாறிச் சுருங்கியும், விரிந்தும் நீந்துகிறது. கன்னங் கறேலென்று அட்டைக்கரி; என்ன வேகம்! ''அட கடவுளே! பெரிய அட்டை!''

குஞ்சுப்பாத்துமா இரண்டே எட்டில் கரையை அடைந்து, துண்டால் உடலைத் துவட்டிக்கொண்டாள். 'ஆ! இதென்ன!' துடையில் கறுப்பாக ஏதோ ஒட்டிக் கொண்டிருக்கிறது. அதைப் பார்த்ததும் அவள் பயத்தால் விறைத்துப்போனாள். ஓர் அட்டை எப்படியோ அவளுடைய துடையைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறது. 'ஐயோ! உம்மா! வாப்பா! ஓடிவாயேன். என்னைக் கடித்துக் கொல்லுகிறதே! ஐயோ! எல்லாரும் வாருங்களேன்!' என்று வீரிட்டுக் கதற வேண்டுமென்று தோன்றியது. ஆனால்? அவள் கன்னிப் பெண்! எல்லா உடைகளும் உடுத்திருக்கவில்லை. ஒரு முண்டு மட்டும். நாசமாய்ப் போச்சு! என்ன செய்வது? அவள் தனக்குள் வெந்து, நீருகிக்கொண்டு அங்கேயே நின்றாள். அட்டை பெரிதாகிக்கொண்டே வந்தது. பெரிதாக ஆக உபத்திரவமும் அதிகரித்தது. கொஞ்சம் அசைந்தால்கூட அட்டை, அவளுடைய தோலின்மேல் உரசியது. அப்பப்பா! அவள் பல்லைக் கடித்துக்கொண்டாள். அட்டை வேண்டிய மட்டும் ரத்தத்தைக் குடித்த பின் பொத்தென்று தரையில் விழுந்தது. குஞ்சுப்பாத்துமா துள்ளிக் குதித்தாள். கடிபட்ட இடத்தில் ரத்தம் உறைந்து கனிந்து போயிருந்தது. அவள் கரையோரத்தில் உட்கார்ந்து, கைகளினால் ஜலத்தை வாரி எடுத்துத் துடைத்து விட்டுக்கொண்டாள்.

அவளுக்கு ஆத்திரமும் அழுகையும் பொங்கிக் கொண்டு வந்தன. அதை நன்றாகத் திட்ட வேண்டு

மென்று நினைத்தாள். ''சைத்தான்! என் ரத்தம் பூராவையும் குடிச்சுத் தொலைத்தாயே!'' என்று சொல்லிக்கொண்டு, அட்டையை நோக்கிக் குனிந்தாள். 'அதைக் கொன்றுவிட்டால்? அந்தப் பாவம் நமக்கு ஏன்? சனியன், போய்த் தொலையட்டும்.' ''ஏ அட்டை!• நீ இப்படியெல்லாம் பிறத்தியாரை வம்பு பண்ணினுல், நிச்சயம் அல்லாஹ் உன்னை நரகத்துக்கு அனுப்பிவிடுவார். பத்திரம்!'' என்று புத்தி சொல்லிக்கொண்டே அந்த அட்டையை ஒரு குச்சியால் தட்டி எடுத்து ஜலத்துக்குள் தள்ளிவிட்டாள். அது பொத்தென்று விழுந்ததுதான் தாமதம். அதற்கென்றே காத்திருந்தாற்போல் ஒரு வரால் மீன் அதை லபக்கென்று விழுங்கிவிட்டது! குஞ்சுப் பாத்துமா குனிந்து ஜலத்தினுள் நோக்கினுள். ஒன்று, இரண்டு, மூன்று மீன்கள். கணவன், மனைவி, அதோடு ஒரு குழந்தையும் என்று அவள் கற்பனை செய்துகொண்டாள். வரால் மீன் குஞ்சுகள் சிவப்பு மைத்துளிகள் மாதிரி இங்கும் அங்கும் துள்ளித் துள்ளி நீந்தின. ''வராலே, நீ எப்படித்தான் அந்த அட்டையை விழுங்கினுய்? பெரிய பாவமாச்சே!'' அப்படியானுல் அந்த வராலை மனிதர்கள் தின்பதும் பாவந்தானே? இது ஏனோ அவளுக்குத் தோன்றவில்லை. அவள் அந்த மீன் குடும்பத்தையே பார்த்துக்கொண் டிருந்தாள். அவற்றின் கண்களில் துளிகூடச் சிநேகபாவத்தையே காணவில்லை. அவற்றின் செதிள்கள் வழியாக நீர் வந்துகொண்டே இருந்தது. அவளுக்கு ஆலியின் துல்பஹார் என்ற வாளின் ஞாபகம் வந்தது. அந்த வரால் மீன்கள் அவளைப் பார்க்கிற பார்வை, 'தப்பித் தவறி நீயும் குளத்தில் விழுந்தால் உன்னையும் ஒரே வாயில் லபக்கென்று விழுங்கிவிடுவோம்!' என்கிற மாதிரி இருந்தது.

கூந்தலைக் கோதி உலர விட்டுக்கொண்டு, அவள் குளத்தை மேலும் சாவதானமாக ஆராய்ந்தாள். எப்போதும்போல் சிவப்பும் வெள்ளையுமாகப் பூக்கள், பச்சை இலைகள். ஆனுல் அவற்றுக்கு அடியில் மனிதர்

களின் ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளும், அட்டைகளைப் பட்டென்று விழுங்கும் வரால்களும் இருந்தன, ஆனால் அவற்றால் அல்லிப் பூக்களுக்கு யாதொரு கேடும் இல்லை. பூக்கள் அவளைப் பார்த்துக் கேலி பண்ணிச் சிரிக்கின்றனவோ? அதோ மற்றொரு பெரியவர் வருகிறார். பராக்! பராக்! பராக்! வந்தவர் யார்? வேறு யாரும் இல்லை. ஸ்ரீமான் நீர்க்கோலிப் பாம்பு, தண்ணீர்ப் பாம்பு வம்சத்தைச் சேர்ந்தவர். உடம்பின் அடிப் பாகம் வெண்மையாக இருக்கும். மேலே விதவிதமான நிறங்கள். ஓர் அல்லி இலையின் மேல் ஏறித் தலையைப் பட்டும் படாமலும் தண்ணீருக்குள் ஆழ்த்திப் படுத்துக் கொண்டு நிஷ்டை செய்கிறார். கொஞ்ச நேரம் சென்ற பின் சடாரென்று ஒரு பாய்ச்சல்; எதையோ பிடித்துத் தின்றாகிவிட்டது. மீண்டும் நிஷ்டை. பாவம்! ஒரு வரால் மீனுக்கு ஆயுசு கம்மி, அந்த மீன் தன் பாட்டுக்கு வளைந்து வளைந்து போய்க்கொண்டிருந்தது. கொழுத்த பாம்பு, அதைத் தின்றுவிட்டுப் படுத்துக் கிடக்கிறதைப் பார்! அவள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, எத்தனையோ ஒண்டுக் குடித்தனக்காரர்கள், தோன்றித் தோன்றி மறைந்தார்கள்: ஆமை, பள்ளத்திமீன், கரிமீன், தவளை முதலியன. அந்தக் குளத்தின் ஜீவராசிகளில்தான் எத்தனை வகை! அல்லிப் பூக்கள் மீண்டும் சிரித்தன. எல்லாமாய்க் கூடி, அந்தக் குளத்தினுள் எத்தனை சௌந்தரியமும் பயங்கரமும் கலந்திருந்தன! இதற்குப் பின் குஞ்சுப்பாத்துமாவுக்குக் குளக்கரை ஒரே சமயத்தில் விருப்பத்தையும் வெறுப்பையும் கிளறிவிடும் ஒரு தோழியாயிற்று.

அதன்பின் குளிக்க வேண்டுமானால் அவள் அடுத்த வீட்டுக் கிணற்றங்கரைக்குத்தான் போவாள். அந்த வீடு பூட்டிக் கிடந்தது. எப்போதாவது யாராவது தனிமையில் குளிப்பதற்காக வருவதன்றி வேறு நடமாட்டம் இல்லை. அந்தக் கிணற்றுடன் குளிப்பறையும் சேர்த்துக் கட்டியிருந்தது. அதன் தண்ணீர் பனிபோலக் குளிர்ந்

திருக்கும். அடுத்திருந்த பந்தலில் முல்லைக்கொடிகள் தாராளமாக மண்டிக் கிடந்தன; நிறையப் பூக்கள். வேண்டுமானால் ஒரு கூடை பூவைப் பறித்துத் தலையில் சூடலாம். துரதிருஷ்ட வசமாக முஸ்லிம் ஸ்திரீகள் தலைக்குப் பூ வைத்துக்கொள்ளக் கூடாதாம். ஆனாலும் அவளுக்கு மல்லிகைப்பூ என்றால் மிகப் பிரியம். புதர் மறைவில் இருந்துகொண்டு வாழைநாரில் நீள நீளமாய்ச் சரங்கள் தொடுப்பாள். அங்கே அமர்ந்திருப்பதே ஓர் இன்பம், எவ்வளவு அமைதி! கிணறு கழிந்தால் பூட்டிக் கிடக்கும் வீடு. வீட்டுக்கு முன், சற்றுத் தாழ்ந்து, ஆற்றங் கரைக்குப் போகும் பாதை. பாதைக்கும் அடிவானத்தின் அருகே உள்ள நதிக்கும் நடுவே நெல் வயல்கள். பச்சைப் பசேலென்று கம்பளி விரித்தமாதிரி காணும்; அறுவடைக் காலத்தில் பொன்போன்ற கதிர்கள்.

அவளுக்கு வீட்டில் வேலை ஒன்றும் இல்லை, முக்கால் வாசி வேலைகள் உண்டென்றாலும் செய்யத் தெரியாது. என்றும் இல்லாத சுதந்தரத்தை எப்படிப் பயன்படுத்து வது? அவள் சமைக்க ஆரம்பித்தாள். அடுப்பை எப்படி மூட்டுவது என்றே தெரியவில்லை. அவளுடைய அம்மா வுக்குத் தெரிந்தால்தானே அவளுக்குத் தெரியும்? ஆகவே வாப்பாதான் சாமான்களையும் வாங்கிக்கொண்டு வந்து, சமைக்கவும் வேண்டும். சில சமயங்களில் வாப்பா கோபத்தோடு, ''பொண்ணாய்ப் பிறந்தால் அடுப்பு மூட்டவாவது தெரியவேண்டாம்?'' என்பார். அப் போது அவளுக்கு வெட்கமும் வருத்தமும் தோன்றும். ஆனால் அது அவளைப் பார்த்துச் சொல்வதல்ல; உம்மா வைப் பார்த்து. உம்மா, தன் பழைய மிதியடிக் குமிழ்களை நெருடிக்கொண்டே. ''எனக்கென்ன? நான் யானை மக்காருடைய பெண்ணாக்கும்! எனக்குச் சமைக்கத் தெரியவேண்டிய அவசியம் இல்லை'' என்பாள். அதற்கு மேல் என்ன சொல்வது? உம்மா சாப்பிடுவதற்கு முன்னால் கைகழுவத் தண்ணீர்கூட வேறு யாராவது தான் எடுத்துவைக்க வேண்டும். இல்லாவிட்டால்

அவள் சாப்பிட எழுந்திராமல் இருந்த இடத்திலேயே இருப்பாள். வாப்பா முறைத்துப் பார்ப்பார். பெண் எழுந்திருந்து கைகழுவத் தண்ணீர் விட்டால் உம்மா சாப்பிட உட்காருவாள். சாப்பிடும்போதும் பிறந்தகத்துப் பெருமைதான். ''உங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்ததடி, யானை! பெரிய கொம்பனானை!'' என்பாள். வாப்பா மௌனமாக இருப்பார். ஆனால் அவருடைய மார்பு ஏறி ஏறி இறங்கும். பேச்சு நீடித்தால் சூறுவளி அடிப்பதுமாதிரி ஒரு கர்ஜனை:

''ஏட்டி, குஞ்சுத்தாச்சுமா! உன் நாவைக் கொஞ்சம் அடக்கு!''

''ஏன்? இல்லாட்டிப்போனால் என்னைத் தூக்கிலே மாட்டிவிடுவீர்களோ? நான் யானை மக்காருடைய அருமைப் பெண்ணுக்கும்! எனக்கு லயிஸென்ஸு உண்டு.''

ஆம்! அவளுக்கு எதுவும் சொல்வதற்கு லைஸென்ஸ் உண்டு. ''உம்மா, நீ கொஞ்சம் சும்மா இரேன்'' என்று குஞ்சுப்பாத்துமா சொல்வாள். ''ஆமாமடி! நாசமாய்ப் போனவளே! எல்லாம் நீ பிறந்த வேளைதான்!'' என்று உம்மா பதிலுக்குச் சொல்வாள். அப்படியானால் அந்த இபிலீஸ் குற்றவாளி அல்லவா? குஞ்சுப்பாத்துமா தன் வேதனையை மறைக்க லேசாகச் சிரிப்பாள். ஆனால் அப்படி வெகு நாட்களுக்கு மந்தகாசத்துடன் அவளால் இருக்க முடியவில்லை. அவளுடைய மனத்தில் ஒரு பீதி, நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. என்றுவது ஒரு நாள் வாப்பா உம்மாவைக் கொலை செய்துவிடுவாரோ?

# 5

## காற்று வீசியும் இலை உதிரவில்லை

மனிதர்கள் ஏன் இப்படி விபரீதமாக நடக்கிறார்கள்? இதைப்பற்றி எவ்வளவு யோசித்தும் குஞ்சுப் பாத்துமாவுக்கு ஒரு பிடியும் கிட்டவில்லை. கொஞ்சம் வயசாகி விட்டால் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஒருவரை ஒருவர் காணக்கூட மாட்டாமல் அத்தனை வெறுப்பு வளர்ந்துவிடுகிறதே! ஏன்? ஒருவேளை எல்லா வீடுகளிலும் எல்லாத் தம்பதிகளுடைய வாழ்க்கையும் இப்படித்தானோ? ஒருவரை ஒருவர் கடித்துத் தின்று விடுவார்கள்போல் இருக்கிறதே! அப்பப்பா! சரியாகச் சொல்லப் போனால் வாழ்க்கை, சீர்கேடு அடைந்துவிட்டது. குறித்த வேளைக்குச் சரியான சாப்பாடு இல்லை. துணிமணிகளைப்பற்றியோ கேட்கவே வேண்டாம். போட்டதையே போட்டுக்கொண்டு பழந்துணியையே அலசி அலசி, எல்லாத் துணிகளும் ஒரே மாதிரி பழுப்பு நிறம் ஆகிவிட்டன.

இதில் ஒரு விசேஷம். இந்தப் பரந்த உலகில் இந்த மூன்று ஜீவன்களுக்கு இரங்கி ஒருகை கொடுத்துத் தூக்கிவிட யாருமே இல்லை. ஒரு காலத்தில் வாப்பா, காலால் இட்ட வேலையைத் தலையால் ஏற்றுச் செய்ய எத்தனை ஆட்கள் வேண்டுமானாலும் காத்துக்கொண்டிருந்தார்கள். யாரெல்லாமோ, எவன் எவனோ, அவர்களுடன் உறவு கொண்டாடினார்கள். 'நான் ஒரு முறைக்கு மாமனாக வேண்டும்.' 'நான் உனக்கு ஒன்று விட்ட சிற்றப்பா வாகவேண்டும்.' இப்போது மாமனும் சிற்றப்பனும் அந்தப் பக்கமே 'வருவதில்லை' அவர்கள் மூன்று பேர் மட்டும்; அந்த மூன்று பேருக்குள் வாப்பாவைக் கண்டால் உம்மாவுக்கு ஆகாது. எடுத்ததற்கெல்லாம் குற்றச்சாட்டுக்களும் திட்டுகளும். அவளுக்குத் தாழ்ந்த குரலில் பேசத் தெரியாது. எல்லாம் தெருவோடு போகிறவர்களுக்கும் வருகிறவர்களுக்கும் கேட்

கும்படியாகத்தான். அப்போதுதானே அவர்களும் பரிகாசத்தில் கலந்துகொள்ளலாம்.

வாப்பாவுக்கு உம்மா ஒரு செல்லப் பெயர் சூட்டியிருந்தாள். 'செம்மீனடிமை' என்று. அவர் செம்மீன் வியாபாரி அல்ல. அத்தனைக்குப் பணம் முடக்க அவருக்கு முடியாது. நடுவில் ஒரு சமயம் கருவாட்டு வியாபாரம் செய்யவேண்டி யிருந்தது. அது அவருக்கு விருப்பம் இல்லை. ஒரே நாற்றம் அடிக்கும். ஆனாலும் பிழைக்க வேண்டுமே? உலர்ந்த மீன்களைச் சுமையாகக் கட்டிக்கொண்டு போய்ச் சந்தையில் விற்றுவிட்டுத் திரும்பி வருகையில் அரிசியும் மற்றப் பொருள்களும் வாங்கிவர வேண்டும். முன்னெல்லாம் குஞ்சுப்பாத்துமா மீன், இறைச்சி எல்லாம் தின்பாள். வரவர இரண்டும் இல்லாமற் போயின. அல்லிக்குளத்தில் வரால்மீன், அட்டையை விழுங்கியதைப் பார்த்த பின் அவள் மீன் தின்பதை நிறுத்திவிட்டாள். வாப்பா, கருவாட்டு வியாபாரத்தை விட்டுக் கசாப்புக் கடைத் தொழில் ஆரம்பித்தபோது இறைச்சியும் போய்விட்டது. கசாப்புக் கடையில் அறுத்தபின் மாட்டி வைத்திருக்கும் ஆட்டுத் தலையில் உள்ள சலனமற்ற கண்கள்! அது சர்வ சாதாரணந்தான். இருந்தாலும் அவள் மனத்தில் ஒரு சங்கடம். அதையெல்லாம் சமைப்பதற்கு அவள் ஆட்சேபிக்க வில்லை. எந்த விதத்தில் வேண்டுமானாலும் சமைத்துத் தருவதில் அவள் இப்போது கெட்டிக்காரி. 'நீயும் சாப்பிடு' என்று மட்டும் சொல்லக்கூடாது. வாப்பா, கிழக்கு வெளுக்கும்போது எழுந்து, பல் தேய்த்துக் காலைத்தொழுகையை முடிக்கும் போது குஞ்சுப்பாத்துமா ஒரு போகணி நிறையத் தேத் தண்ணீர் தயார் செய்து வைத்திருப்பாள். வாப்பா, அதைக் குடித்துவிட்டு, 'பிஸ்மில்லா'[12] ஓதிக்கொண்டே பிழைப்புக்காக வெளியே போவார். கையில் இரண்டு ரூபாய்க் காசு. அந்த மூலதனத்துடன் எங்காவது போய் எதையாவது வாங்கி வேறு எங்கேனும் விற்றால் அதில்

ஏதாவது கிடைக்கும் - வாழைக்குலை, கிழங்கு சேனை, பாக்கு, தேங்காய் முதலிய வியாபாரம்.

உம்மா எழுந்திருக்கும்போது காகங்கள் கரைவது எல்லாம் நின்று, வெயில் சுள்ளென்று அடிக்கும். 'என்னடி, செம்மீனடிமை பவுன் மாற்றுகிறதற்குப் போயாயிற்று?'' என்று கேட்டுக்கொண்டே வருவாள். அவளுக்குப் படைத்தவனோடு தீராத கோபம். அதனால் தொழுகை, நேர்ச்சை ஒன்றும் இல்லை. ''ஆமாம்! எவ்வளவோ பள்ளியிலே எவ்வளவோ தொழுதாச்சு. எதைக் கண்டது. ஏட்டி! நாசமாய்ப் போனவளே! வெந்நீர்த் தண்ணீர் போட்டிருக்கிறாயா?'' குஞ்சுப் பாத்துமா வெந்நீரைத் தயாராக வைத்திருப்பாள். ''போட்டாச்சும்மா.'' வெந்நீரின்றி உம்மாவுக்குக் குளிக்கத் தெரியாது. தினசரி வெந்நீர் போடுவது பெண்ணின் ஜோலி; அதிலும் ஆயிரம் குற்றம். குளித்தாயிற்றானால் வெளுத்த முண்டு உடுக்கவேண்டும். தாராளமாய்ப் பாலும் சர்க்கரையும் சேர்த்த தேயிலையும், நெய்யில் சுட்ட பத்திரியும் வேண்டும். குஞ்சுப்பாத்துமா முந்திய நாள் மாலையே எல்லாத் துணிகளையும் தோய்த்து, அலசி, உலர்த்தியிருப்பாள். அதைக் கட்டிக்கொண்டபின் சாப்பாடு. தேநீருக்குப் பனவெல்லந்தான் இட்டிருக்கும். சீனிக்குப் பதில் உப்பைச் சேர்த்துக்கொண்டால் ருசி அதிகம் என்பது குஞ்சுப்பாத்துமா அநுபவத்தில் கண்டறிந்த உண்மை. உம்மாவுக்கு ஒன்றும் பிடிக்காது. ஆனால் வேறு வழி? ''துடைகாலி! நீ பிறந்த வேளையைச் சொல்லு!'' என்று சபித்துக்கொண்டே குடித்துத் தீர்ப்பாள். ஆரம்பத்தில் அடிக்கடி கோபத்தில் சட்டியைத் தூக்கித் தூர எறிந்துவிடுவாள். ஆனால் தினசரி யார் பணங்கொடுத்துச் சட்டி வாங்குவது? வாப்பா, ''இனிமேல் அவளுக்குச் சிரட்டையிலே கொடுத்தால் போதும்'' என்று சொல்லிவிட்டார். அன்றைக்கு உம்மா வாய்விட்டு அழுதேவிட்டாள். ''மொய்தீனே[13], கேட்டீரா? நேர்ச்சைக்காரரே, கேட்

டீரா? முத்து நபியே, கேட்டீரா? யானை மக்காருடைய பெண்ணுக்குச் சிரட்டையில் கொடுத்தால் போது மென்று சொல்கிறார்களே!''

அதற்குப்பின் குஞ்சுப்பாத்துமாவுக்குத் 'திட்டுகள் அதிகரித்தன. ''நீ பாக்கியங்கெட்டவளடி! உன்னுடைய மறு துர்ப்பாக்கியத்தைத்தான் காட்டுகிறது!'' யாராவது அவளுடைய கன்னத்து மறுவைக் கிள்ளி எறிந்து விடக் கூடாதோ! அதைக் கேட்டால் வாப்பாவின் கண்கள் சிவந்து கலங்கும். பல்லைக் கடித்துக்கொண்டு, ''ஏட்டி! குஞ்சுத்தாச்சுமா!'' என்று ஓர் அதட்டல். உம்மா, அப்போதைக்குப் பேசாமல் இருப்பாள். வாப்பா வெளியே இறங்கினதும் மறுபடியும் அர்ச்சனை ஆரம்பிக்கும்: ''நாசமாய்ப் போனவளே!'', ''எம்போக்கி!'', ''உன்னைப் பாம்பு பிடுங்க!'', ''நீ பிறந்த வேளை அப் பேர்ப்பட்ட வேளை!'' முதலியன. தெருவில் போகும் சிறு பிள்ளைகள் இதைத் திருப்பித் திருப்பிச் சொல்வார்கள். பெண், ''கொஞ்சம் மெதுவாய்ப் பேசும்மா'' என்பாள். ''ஏண்டி, நான் உரக்கத்தான் பேசுவேன். எனக்கு லயிஸேன்ஸ் உண்டடி உரக்கப் பேசறதுக்கு!'' அப்படி ஒருநாள் சொல்லிக்கொண் டிருக்கும்போதே வாப்பா வந்துவிட்டார். உம்மா அதைப் பொருட்படுத்தாமல் சொல்லிக்கொண்டே போனாள். வெகு சிரமப்பட்டு அவர் கோபத்தை அடக்கிப் பார்த்தும் உம்மா விடவில்லை. ''செம்மீனடிமை யானை மக்காருடைய பெண்ணைப் பயமுறுத்திப் பார்க்கிறா ராக்கும்!'' என்றாள். சொல்லி வாய் மூடவில்லை. அந்தப் பயங்கரச் செயல் நிகழ்ந்து விட்டது.

வாப்பாவின் வலது கை, உம்மாவின் கழுத்தைச் சுற்றியிருந்தது. உம்மாவின் தொண்டை இடறியது. கண்கள் பிதுங்கின. வாப்பா, பயங்கரமாகப் பற்களைக் கடித்துக்கொண்டு, ''நீ ஒழி! செத்துப் போய்விடு!'' என்று உறுமினார். பிறகு ஒரு குழந்தையைத் தூக்குவது போல் லாகவமாய்க் கழுத்தை அமுக்கிப் பிடித்துத்

தரையில் படுக்க வைத்தார். அவளுடைய தந்தக் குமிழிட்ட இரண்டு மிதியடிகளையும் காலால் உதைத்து வெளியே தள்ளினார். உம்மாவின் உடம்பில் ஓர் அசைவையும் காணவில்லை.

இவ்வளவும் ஒரு விநாடிக்குள் நடந்துவிட்டது. குஞ்சுப்பாத்துமா தூணோடு தூணாய் நின்றாள். 'உலகமே இருண்டுவிட்டதோ? ஆழம் காணாத ஒரு பிலத்துவாரத்துக்குள் தலைகீழாக விழுந்துகொண்டிருப்பதுபோல் தோன்றியது. வாப்பா, உம்மாவைக் கொலை செய்துவிட்டார்! குஞ்சுப்பாத்துமாவின் நாக்கு அசைய மறுத்தது. அவள் மௌனமாகக் கண்ணீர் சிந்தினாள்.

''அழாதே, மகளே!''

அப்போது அவளுக்கு என்றும் இல்லாத அழுகையெல்லாம் பொத்துக்கொண்டு வந்தது. அவள் தூண் மீது சாய்ந்துகொண்டு, நெஞ்சு வெடித்துவிடும்போல் அழுதாள். 'ஐயோ கடவுளே! இன்னும் என்னவெல்லாம் நடக்கப்போகிறது? அடிக்கு ஒரு விபத்து; நொடிக்கு ஒரு துன்பம்! துணைக்கு யாரும் இல்லை. உம்மா செத்துப் போய்விட்டாள். இனிமேல் வாப்பாவையும் போலீஸ்காரர்கள் விலங்கு மாட்டி ஜெயிலுக்கு அழைத்துப் போய்விடுவார்கள். இனி அவளுக்கு யாருமே கதி இல்லை; அம்மா மவுத்[14]தாகிவிட்டாள். யாராவது வந்து சவத்தைக் குளிப்பாட்டி 'ஸந்தோக்'கில்[15] வைத்து, 'லா இல்லாஹ, இல்லல்லாஹு'[16] என்று சொல்லிக்கொண்டே பள்ளிவாசலுக்கு அடுத்த 'கபரிஸ்தானி'ல்[17] அடக்கம் செய்வார்கள்.' அப்புறம் ஒன்றுமே தோன்றவில்லை. அவளால் அதற்கு அடுத்த நிலையைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. அவள் வாய்விட்டுக் கதறினாள்.

''ஐயோ! வாப்பா! இருந்தாலும் இப்படிச் செய்துவிட்டீர்களே?''

'அழாதேம்மா, மகளே! கொஞ்சம் வெளித் திண்ணையிலே சாய்ந்துகொண்டு உட்கார்ந்திரு.'' அவன் எப்ப

டியோ தட்டுத்தடுமாறி வெளியேபோய் வெளித்திண்ணையில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தாள். முகத்தை முட்டாக்கால் மூடிக்கொண்டு மனமார அழுதாள். மனவேதனைக்கு ஓர் அளவில்லை. அவளுக்கு 'ஷஜரத்துல் முத்தஹா'வின் கதை நினைவுக்கு வந்தது. சொர்க்கத்தில் ஓர் அற்புதமான மரம் உண்டு. அதன் பெயர், 'ஷஜரத்துல் முத்தஹா'. அதைப்பற்றிப் பள்ளி வாசல் இராப் பிரசங்கத்தில் யாரோ பேசினார்கள். அதன் இலைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஜீவனைக் குறிக்குமாம். அந்தப் பிராணியின் பெயர் அந்த இலையில் எழுதியிருக்குமாம். உலகில் இருக்கும் சகல உயிர்களுடைய இலைகளும் அதில் உண்டு. காற்று அடிக்கும்போது அந்த இலையின் பெயருள்ள ஜீவன் இறந்துபோகும். சில உதிர்ந்த இலைகள் பழுத்தவை. சில பச்சை, மற்றவை சின்னஞ்சிறிய கொழுந்துகள். உம்மாவுடைய பெயர் எழுதிய இலை..! அந்தச் சமயத்தில் உள்ளேயிருந்து மெல்லிய குரலில் உம்மா முனகும் சப்தம் கேட்டது. ''ஆண்டவனே! எனக்கு ஆரும் இல்லை.'' குஞ்சுப்பாத்துமாவின் துயரமெல்லாம் எங்கேயோ ஓடிப் போய்விட்டது. 'உம்மா பிழைத்துவிட்டாள்! காற்று வீசிற்று; ஆனால் இலை உதிரவில்லை!'

அவள் உள்ளே போனாள். எழுந்து உட்கார்ந்திருந்த உம்மா, அவளைப் பார்த்ததும் கைகளால் நெஞ்சில் அடித்துக்கொண்டு, பிலாக்கணம் பாட ஆரம்பித்தாள். ''சும்மா இரும்மா!'' என்று சொல்லிக்கொண்டே, குஞ்சுப்பாத்துமா அருகே போய் உட்கார்ந்தாள். உம்மா விடவில்லை. அழுகைப் பாட்டுத் தொடர்ந்தது.

''தடவடியோ தடவு! முத்து நபியோ தடவு! தடவடியோ தடவு!''

எங்கே தடவ வேண்டுமென்று குஞ்சுப்பாத்துமாவுக்குத் தெரியவில்லை.

''எங்கே உம்மா தடவுகிறது?''

''கழுத்திலேயும் காலிலேயும் கையிலேயும்.''

''நீ நகர்ந்துகொள் அம்மா.'' வாப்பா இப்போது உம்மாவின் அருகில் உட்கார்ந்து, தடவிக் கொடுத்தார். ''நீ போய்க் கொஞ்சம் திண்ணையிலே இரு. நான் கூப்பிடுகிறேன்.'' அவள் மறுபடியும் திண்ணைக்கு வந்தாள். உள்ளே உம்மா பேசுவது லேசாகக் காதில் விழுந்தது. ''என்னைக் கொன்றுவிட்டு, வேறே நிக்காஹ்வுக்குத்தானே?'' அதற்கு வாப்பா என்ன பதில் சொன்னாரென்பது தெரியவில்லை, அவள் தோட்டத்தில் இறங்கி அங்கும் இங்கும் நடந்தாள். 'இன்றைக்கு நாம் எல்லோரும் தௌபா[18] செய்யவேணும்.'

ஆம்! நாம் செய்த தவறுகளுக்கெல்லாம் கருணைநிதியாகிய தெய்வத்தின் மன்னிப்பைக் கோரவேண்டும். இனித் தவறு செய்யக்கூடாது. அரபு எழுத்துக்களில் குர்ஆன் வாக்கியங்கள் அச்சடித்த படங்கள், சாதாரணமாய் எல்லா வீடுகளிலும் இருக்கும். அவர்கள் வீட்டில் மட்டும் இல்லை. வாப்பா எங்கிருந்தாவது கடன் வாங்கிக்கொண்டு வருவார். வீட்டுக்குள்ளிருந்து வாப்பாவும் உம்மாவும் வெளியே வந்தார்கள். ''எனக்குக் குளிக்க எண்ணெயும் தாளிப்பொடியும் வேண்டும். பின்னே கொஞ்சம் இஞ்சியும்.'' உம்மாவின் பேச்சுக்கு ஊம் கொட்டிக்கொண்டே வாப்பா, பெண்ணைக் கூப்பிட்டார். ''உம்மாவுக்குக் குளிக்கவேண்டும். கொஞ்சம் வெந்நீர்த் தண்ணீர் போடம்மா.'' அவள் வெந்நீர் போட்டுக்கொண் டிருக்கும்போது, வாப்பா கடையிலிருந்து வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வந்தார்.

''உம்மா, நானும் குளித்துவிட்டு வரட்டுமா?''

உம்மா தலையை ஆட்டினாள். குஞ்சுப்பாத்துமா தோளில் துண்டும், ஒரு கையில் புதிய உடைகளும், மற்றொன்றில் பானையும் கயிறுமாகப் பக்கத்து வீட்டுக் கிணற்றடிக்குப் புறப்பட்டாள். அந்தப் பிரயாணம் அவளுடைய வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்திற்குக் காரணமாகும் என்பதை அவள் அறியாள்.

,'அதிக நேரமாக்காதே. சீக்கிரம் வா. கேட்டாயா?''

''இல்லை அம்மா, இதோ வந்துவிட்டேன்.''

அவள் மனத்தினுள் மீண்டும் மீண்டும், 'படைத்தோனே! காற்று வீசினால் பரவாயில்லை. இலை மாத்திரம் உதிரக்கூடாது, ஆண்டவனே!' என்று' பிராத்தித்துக் கொண்டாள்.

# 6

# ஒரு குருவியின் அழுகை

அவள் முற்றத்தை விட்டு இறங்கும்போதே அந்தக் குருவியின் குரல் கேட்டுவிட்டது. கொஞ்ச தூரம் போனதும் பார்த்தும் விட்டாள். இரண்டு சிட்டுக்குருவிகள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொண் டிருந்தன. அதில் ஒன்று, அடியின் வலி தாங்காமல் கீச்சுக் கீச்சென்று கத்திக்கொண் டிருந்தது. அவைகளுக்குள் என்ன சண்டையோ? குஞ்சுப்பாத்துமா, 'டுர்ர்', 'டுர்ர்!', 'ஆச்புச்!' என்று என்னவெல்லாமோ ஓசை உண்டாக்கி விரட்டிப் பார்த்தாள். ஒன்றும் பயன் இல்லை. குருவிகள் இரண்டும் வேறு ஒரு கிளைக்குப் பறந்து சென்று, மறுபடியும் சண்டையிட ஆரம்பித்தன.

அவள் அலுத்துக்கொண்டு, இரண்டு வீட்டுக்கும் நடுவேயுள்ள வெள்ளவாரியின் மீதுள்ள தென்ன மரப் பாலத்தைக் கடக்க ஆரம்பித்தாள். அப்போதும் அந்தக் குருவிகள் ஒரு புளியங் கொம்பின்மேல் உட்கார்ந்து சண்டை இட்டுக்கொண் டிருந்தன. முதல் குருவி இன்னும் பரிதாபமாகக் கத்தியது; ஏதோ ஒரு பருந்து தூக்கிக்கொண்டு போகிறமாதிரி. குஞ்சுப்பாத்துமாவுக்குப் பொறுக்கவில்லை; தீனமான அந்த வேண்டுகோள்! பானையையும் கயிற்றையும் கீழே வைத்துவிட்டு அவள் புளியமரத்தடிக்கு வந்தாள்.

''இதென்ன இது? சும்மா இருக்கிறதில்லே?'' குருவிகள் அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. ஆவேசமாக ஒன்றை ஒன்று கொத்தின. இத்தனை சிறிய பறவைகளுக்கு எத்தனை கோபம்? யதேச்சையாகத் திரியும் பட்சிகள், தமக்குள் சண்டையிடுவதை அவள் அன்று தான் பார்த்தாள். வீட்டுப் பறவைகள் சண்டையிடுவது இயல்புதான். அப்போது யாராவது போய் விலக்கி

விடுவார்கள். இல்லாவிட்டால் ஏதாவது ஒன்று சாகும் வரை சண்டை நடந்துகொண்டே இருக்கும். ''சொன்னால் கேட்கிறதில்லே? சும்மா இரு. ஏன் அதைப் போட்டுக்கொல்கிறாய்?'' குருவிகளுடைய வழக்கில் இப்போது ஓர் அணில் தடை போட்டது. அந்தக் கிளையருகில் வந்து, 'சுக் சுக்' என்றது. அதனிடம் புகார் செய்வது போல் மீண்டும் ஒரு தரம், ''சும்மாருக்க மாட்டே?'' என்றாள். பட்சிகளின் விவகாரத்தில் மற்றவர் தலையிடுவது சரியல்ல என்பதுபோல் கிளைமேல் இருந்த ஒரு மரங்கொத்தி, தலையை ஒரு சிலிப்புச் சிலுப்பிவிட்டுப் போய் விட்டது. ஒரு குருவி பறந்து போய்விட்டது. மற்றது, அதுதான் அடிபட்ட குருவி, பரிதாபமாகக் கத்திக் கொண்டே சிறகுகளை அடித்துகொண்டு பறக்க முயன்றது. ஆனால் முடியவில்லை. கடைசியில் காய்ந்த சருகுகள் நிறைந்து, மெத்தைபோல் கிடந்த வெள்ளவாரியில் போய் விழுந்துவிட்டது. அங்கே இரு சிறகுகளையும் விரித்துக்கொண்டு, சாவதற்குமுன் பூமியைத் தழுவுகிற மாதிரி கிடந்தது. குஞ்சுப்பாத்துமா வெள்ளவாரியின் கரையருகே ஓடிப்போய்ப் பார்த்தாள். அவளுக்குச் சகிக்கவில்லை. ''ஐயோ பாவம்! நன்றாகத்தான் போட்டார்கள் சண்டையை!'' என்றாள்.

குருவி செத்துப் போயிருக்குமோ? ஒருவேளை யாராவது கீழே இறங்கி, அதன் வாயில் ஒரு துளி ஜலம் விட்டால் அது பிழைத்துக்கொள்ளுமோ என்னவோ? ஆனால் கீழே இறங்குவதற்கு வழி ஒன்றையும் காணவில்லையே! ஒருவேளை அந்தக் குருவியின் பெயர் எழுதிய, 'ஷஜரத்துல் முத்தஹா'வின் இலை காற்றில் உதிர்ந்திருந்தால்..? அந்த மரம் எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும்! அதன் இலைகள் எப்படி இருக்கும்? எல்லா இலைகளும் ஒரே மாதிரி இரா. எறும்பின் பெயர் எழுதியது மிகச் சிறிய இலையாக இருக்கும். குருவியுடையது அதைவிடப் பெரியது. யானையின் பெயர் எழுதியதுதான் எல்லாவற்றையும்விடப் பெரிதாக இருக்க வேண்டும்! அவ

ளுடைய தாத்தாவின் யானையின் பெயர் எழுதப்பட்ட இலை ஒருகால் அந்த மரத்தடியில் விழுந்து கிடக்குமோ? ஒருவேளை சொர்க்கத்தின் மண்ணோடு மண்ணாய்க் கலந்து மட்கிப் போயிருந்தாலும் இருக்கலாம். சொர்க்கத்தில் மண் உண்டோ? யார் கண்டார்கள்? அவள் தாழ்ந்து படர்ந்திருந்த ஒரு கொம்பைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்க முயன்றாள். அடாடா! கால், பாசியில் வழுக்கிக் கொம்பு முறிந்து போய்விட்டது. இமைப் பொழுதுக்குள் அவளும் கொம்பும் எல்லாம் தொப்பென்று வாரிக்குள் விழுந்தாகிவிட்டது.

''அட கடவுளே!'' என்று சொல்லிக்கொண்டே அவள் எழுந்தாள். எங்கெங்கெல்லாமோ அடியும் சிதைவும். இடக்கை முட்டின் அருகில் நன்றாகச் சிராய்த்திருந்தது. ஆனால் அதை அவள் அப்போது கவனிக்கவில்லை. கீழே விழுந்து கிடந்த குருவியை முதலில் தன் கையில் எடுத்து வைத்துக்கொண்டாள். அது செத்துப் போயிற்றோ என்று சந்தேகம். அப்போதுதான் இடக்கையில் ரத்தம் வழிவதைக் கண்டாள். ''உன்னாலே என் கையெல்லாம் சிராய்த்துவிட்டது, போ'' என்று அலுத்துக்கொண்டே இடக் கைவிரல்களினால் குருவியின் அலகை லேசாக விரித்தாள். வலக் கைச் சுண்டு விரலால் இடது முட்டியிலிருந்து ஒரு துளி ரத்தத்தை எடுத்து, அதன் வாய்க்குள் சொட்டவிட்டாள். பிறகு சிறகுகளைத் தடவிச் சரிப்படுத்திக்கொடுத்தாள். அதன் வயிற்றுப் பக்கம் தடவியபோது அதற்கு லேசாக ஒரு நடுக்கம். ''அட பாவமே! பெண்குருவி!'' அதன் வயிற்றருகிலுள்ள தோல் லேசாகச் சிவந்திருந்தது. அதனுள் இரண்டு முட்டைகளின் வடிவம் தெரிந்தது. ஒருவேளை வாப்பா, உம்மாவைக் கொல்லப்போன மாதிரி..! ''ஆமாம்! ஏதுக்கு அந்த ஆண்குருவி உன்னைக் கொல்ல வந்தது?'' என்று அதைக் கேள்வி கேட்டாள்.

பெண்குருவி சாகவில்லை. நிச்சயம். அதன் கண்கள் லேசாகத் திறந்தன. அதன் வழியே அந்தக் குருவியின்

ஆன்மாவையே அவள் கண்டாள். மெதுவாகச் சுற்று முற்றும் பார்க்கும்போது வாரியின் எதிர்க்கரையில் ஒரு வாலிபன் தன்னைப் பார்ப்பதை அவள் கவனிக்கவில்லை. மேலே ஏறுவதற்கு வழியொன்றும் காணுமல் அவள் திகைத்தாள். வாரி, போகும் போக்கிலேயே போனுல் கடைசியில் வயல்வெளிக்குக் கொண்டுவிடும். ஆனுல் அப்படிப் போவது சரியல்ல. பிறகு ஊர்வழியாகத்தான் வரவேண்டும். வேறு என்ன செய்வது? அவள் திகைத்து நிற்கும்போதுதான் அந்தக் குரலைக் கேட்டாள். அவள் பயந்து போகவில்லை; ஆனுல் புகைந்து போனுள். முன் பின் அறியாத ஓர் ஆண்மகனின் கேள்வி!

''குருவி உயிரோடு இருக்கிறதா?''

அவள் பதில் பேசவில்லை. அவளுக்குக் காது கேட்க வில்லை என்று நினைத்துக்கொள்ளட்டுமே! என்ன அசம் பாவிதம்? அவள் குனிந்துகொண்டு நிலத்தை நோக்கிய வாறு நின்ருள். காலடியில் சொட்டிய ரத்தத் துளிகளைச் சுற்றி அதற்குள் ஒரு கூட்டம் எறும்புகள் மொய்த்தன.

''கரைக்கு ஏற முடியவில்லையா?''

மீண்டும் மேலேயிருந்து குரல். ஏறுவது கடினந் தான். இருந்தாலும் அதை எப்படிச் சொல்வது? கடைசி யில் அவள் உண்மையை ஒப்புக்கொண்டாள். ''ஆமாம்.'' அவள் பதில் சொன்னது சரியோ? உலகத் தார் அப்புறம் என்ன சொல்வார்கள்? 'கல்யாண வயசாகி யிருக்கும் ஒரு பெண் அதற்குமுன் கண்டும் கேட்டும் இராத ஓர் ஆணுடன் வார்த்தை பேசினுள்!' என்பார் களே? அதை நினைத்தபோது அவள் உள்ளூற மனம் நொந்து போனுள். எதிர்க் கரையில் சில சருகுகள் உதிர்ந்தன. ஐயையோ! இறங்கி வருகிருற்போல் இருக் கிறதே! வெளுத்த முண்டும் சட்டையும் தரித்த ஒரு யுவன். இடக்கை மணிக்கட்டில் ஒரு கைக்கடிகாரம், தலையில் கிராப்பு, அவ்வளவுதான் அவளால் காண முடிந்தது. அவன் செடிகளை லாகவமாகப் பிடித்துக் கொண்டு மெதுவாக இறங்கினுன். அவள் விழுந்த

மாதிரி விழாமல் இருக்க வேண்டுமே? அதோ, அங்கே பார்த்து இறங்க வேண்டும். அவள் துடிதுடிப்புடன் நின்ருள்.

''நானும் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். உன்னைப்போல ஒரு பெண்ணைப் பார்த்ததில்லை! குருவியுடைய பேர் என்ன?'' அந்த இளைஞன் பேசுகிருன். அவன் கண்கள் சிரித்தன. உதட்டின்மேல் லேசாக அரும்பிய பொடி மீசை. அவளைப்போல அத்தனை வெளுப்பல்ல. தன் பெயரைத்தான் கேட்கிருனென்று நினைத்து அவள், ''குஞ்சுப்பாத்துமா'' என்ருள்.

''ஓஹோ! குஞ்சுப்பாத்துமாவின் ரத்தமா இங்கே சிந்திக் கிடக்கிறது?''

''ம்ம்.'' அப்போதுதான் தன் முட்டின்மேல் விண் விண்ணென்று தெறிப்பதை அவள் உணர்ந்தாள். கையைத் திருப்பிப் பார்த்தால் நன்ருகச் சிராய்த்திருந்தது. ஏதோ கல்லோ முள்ளோ நன்ருகக் கீறிவிட்டிருக்கிறது. ரத்தம் இன்னும் வந்துகொண் டிருந்தது. ''எங்கே பார்க்கலாம்? கையைக் கொஞ்சம் உயர்த்திப் பிடித்துக்கொள். அப்போது ரத்தம் ஒழுகாது.'' அதன்பின் அந்த வாலிபன் தன் சட்டையிலிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்து, நீள வாட்டத்தில் மூன்ருகக் கிழித்துச் சேர்த்து முடிபோட்டான். பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டின் காகிதத்தைக் கிழித்துப் புகையிலையை மட்டும் உள்ளங்கையில் சேர்த்துக்கொண்டான். ''கையைக் கொஞ்சம் தாழ்த்திக்கொள்.'' அவள் தாழ்த்தினுள். அவன் அடிபட்ட இடத்தில் புகையிலையை வைத்து நன்ருகக் கட்டிவிட்டான். தன் மார்பின்மீது அவன் விரல்கள் உரசிவிடுமோ என்று பயந்து, அவள் உடல், நாணத்தால் சற்றே கூசியது. உடலை ஒடுக்கிக்கொண்டாள். அப்போது தற்செயலாகக் கண்டது..! மனத்துக்கு ஒரே கலக்கம்! அவனுடைய இடக் கையில் கட்டை விரலைக் காணவில்லை! அதை நன்ருக

வெட்டி யெடுத்த மாதிரி தோன்றியது! அது எங்கே போயிற்று? - அவன் மேன்மேலும் ஏதோ கேட்டுக் கொண்டே போனான்.

''இப்போது நீட்ட முடிகிறதோ?''

''ஊஹூம்.''

''என்ன, நீட்டவே முடியவில்லையா?''

''கொஞ்சங் கொஞ்சம்.''

''அது பரவாயில்லை. தானே சரியாகப் போய் விடும். கையை நனைக்க வேண்டாம். இரண்டு மூன்று நாளில் தானே ஆறிப்போய்விடும்.''

பிறகு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு, அவன் சிரித்துக்கொண்டே, ''இனிமேல் குஞ்சுப் பாத்துமா கரைக்கு எப்படிப் போவதாக உத்தேசம்.'' என்று கேட்டான். அவளுக்கு வழியொன்றும் தெரிய வில்லை. 'ஆனால், அதிசயந்தான். பயம், திகைப்பு ஒன்றை யும் காணவில்லை. குளிர்காலத்தில் நெருப்பினருகே நிற்பதைப்போன்ற ஓர் உணர்ச்சி மட்டும்....

''எங்கே, குருவியைப் பார்ப்போம்.''

அவள் கைகளை விரித்தாள். உடனே குருவி - நன்றியோ அல்லது நட்போ? என்னவென்று சொல்லத் தெரியாது - கீச்கீச்சென்று நாலு வார்த்தைகளைப் பொரிந்து தள்ளிவிட்டு, மேலே பறந்து போய்விட்டது. அவன் சிரித்தான். ''குஞ்சுப்பாத்துமாவும் மேலே பறக் கிறதுதானே.''

''ஊஹூம்.

''மிகவும் சரி, அப்படியானால் நமக்குச் சிறகுண் டாக்குவோம்'' என்று சொல்லிக்கொண்டு அவன் அவ ளுடைய வலக் கையை லேசாகப் பிடித்துக்கொண்டே, சரிவின்மேல் ஜாக்கிரதையாக ஏறினான். நடுநடுவே, ''பயப்பட வேண்டாம்; இதோ ஆச்சு'' என்றெல்லாம் ஆறுதல் வார்த்தைகள். இப்படித் துளிகூடக் கஷ்ட மில்லாமல் எப்படித்தான் ஏறினோம் என்று அவளுக்கு ஒரே வியப்பு! மேலே போனதும், ''சரி, இனிமேல்

குஞ்சுப்பாத்துமா தானே போய்க்கொள்'' என்று சொல்லிவிட்டு அந்த இளைஞன் சிரித்தவாறே கீழே இறங்கி மறைந்துவிட்டான். அதற்கு முன்னும் பின்னும் நடந்ததெல்லாம் கனவோ என்று பிரமித்தாள். தன்னுடைய ஒவ்வோர் அணுவும் ஓர் அலாதிச் சுகம் அநுபவிப்பது போலவும், உடலெல்லாம் மயிர்க்கூச் செறிவது போலவும் அவளுக்குத் தோன்றியது.

பானையையும் கயிற்றையும் துணிகளையும் வைத்த இடத்திலிருந்து எடுத்துக்கொண்டு, அடுத்த வீட்டுக் கிணற்றங்கரைக்குப் போனாள். குளிக்குமுன் கொஞ்சம் மல்லிகை மலர்களையும் பறித்து, ஓர் இலையில் பொதிந்து கொண்டாள். அதைக் குளிப்பறையில் ஒரு புரையில் வைத்துவிட்டு, முண்டு நீங்கலாக மற்ற உடைகளை அவிழ்த்து வைத்தாள். வாரிக் கட்டியிருந்த கூந்தலை அவிழ்த்துக் கோதியபடி கயிற்றில் கட்டியிருந்த பானையைக் கிணற்றில் இறக்கினாள். பானை ஜல மட்டத்தை எட்டியதும் அவள் மறுபடியும் அந்த இளைஞனை நினைத்துக் கொண்டாள்.

''கையை நனைக்கவேண்டாம்.''

அதிசயமென்றே சொல்லவேண்டும். அவள் திடீரென்று நாணத்துடன் குனிந்து பானையையும் கயிற்றையும் போட்டது போட்டபடி விட்டுவிட்டு, வேகமாக உடைகளை இழுத்து, மார்போடு அணைத்தபடி தரையை நோக்கிக் குனிந்து நின்றாள்! அந்த ஆணாய்ப் பிறந்தவன், வெறுமனே மூடியிருந்த குளிப்பறைக் கதவைத் திறந்து கொண்டு நின்றான்!

''ஓ! குஞ்சுப்பாத்துமா குளிப்பது எனக்குத் தெரியாது. என்னை மன்னித்துவிடு. கொஞ்சங் குடிக்கத் தண்ணீர் கொடுத்தால் போதும். நான் உடனே போய் விடுவேன்.''

குஞ்சுப்பாத்துமா மெல்ல, ''பானை கயிற்றோடு கிணற்றில் விழுந்துவிட்டது'' என்றாள். ''என்ன! பானை கயிற்றோடா?''

''கிணற்றில் விழுந்துவிட்டது.''

அவன் நகைத்துக்கொண்டே கிணற்றினுள் பார்த்தான். அவள் ஒன்றும் பேசவில்லை. பானையும் கயிறும் இல்லாமல் வீட்டுக்குப் போனால் உம்மா என்ன சொல்லுவாள்? அவன் முண்டை இறுகக் கட்டிக்கொண்டு ஒரு நொடியில் கிணற்றுக்குள் இறங்கிவிட்டான். மேலே வந்தபின் ஒரு முறை தண்ணீர் மொண்டு குடித்துவிட்டு, ''நீ குளித்துக்கொள். அந்தக் கையை மட்டும் நனைக்க வேண்டாம்'' என்று சொல்லிப் போய்விட்டான். அவளுடைய முகம் குங்குமமாகச் சிவந்திருந்தது. உடம்பெல்லாம் ஜ்வரம் போலச் சூடு. அவன் யார்? பூட்டிக் கிடந்த அந்த வீட்டுக்கு அவன் ஏன் வந்தான்?

அன்றிரவு அவளுக்கு உணவு செல்லவில்லை. கேட்டதற்கு, ''எனக்குப் பசியில்லை'' என்று சொல்லிவிட்டாள். வாப்பா வற்புறுத்தியதற்கு, ''எனக்கு நெஞ்சுவலி'' என்றாள்.

அன்று இரவு எல்லோரும் 'தௌபா' செய்யும் போதும் அவளுக்கு அவன் நினைவுதான். ராத்திரி வாப்பா, மண் எண்ணெய் விளக்கின் முன்னால் 'கித்தாபை'[19] வைத்துவிட்டு எல்லாருக்கும் தௌபா சொல்லிக் கொடுத்தார். உம்மாவும் அவளும் அவர் சொன்னதைப் பயபக்தியோடு திருப்பிச் சொன்னார்கள்.

''எங்கள் ஆண்டவனே! நாங்க ளெல்லோரும் உன்னுடைய மேலான பொறுமையை வேண்டி மன்றுடுகிறோம். தம்பிரானே! நாங்கள் செய்த எல்லாப் பெரிய குற்றங்களையும், சிறியவைகளையும், வெளிப்படையாகச் செய்தவைகளையும், மறைவாகச் செய்தவைகளையும் குறித்து மனங் கலங்கிப் பயப்பட்டு, தௌபா செய்து மண்டியிடுகிறோம், தம்பிரானே!'' இப்படி ஆரம்பித்து. இனிமேல் தவறு செய்வதில்லை என்றும், உலகில் குழப்பங்களை விளைவிக்கும் இபிலீஸின் சல்யத்திலிருந்து தங்களை விடுவிக்க வேண்டுமென்றும். ''எங்களை ஹிர்தௌஸ் என்ற சொர்க்கத்தில் சேர்த்துக்கொண்டு

தங்கள் திவ்ய சௌந்தரியத்தையும் தங்கள் நபிநாயக மாகிய முகம்மதுவின் திருக்கல்யாணக் கோலத்தையும் எங்கள் இரு கண்களாலும் காணக் கருணை புரிய வேண்டும். ஆண்டவனே!'' என்றும், தொழுது, 'ஆமென்' சொன்னார்கள்.

அதன்பின் சில தினங்களுக்கு உம்மா சும்மா இருந்தாள். ''ஆற்று, நோற்றுப் பெற்ற பெண்ணடி நீ!'' என்றுகூடச் சொன்னாள். ஆனால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. திட்டும் வசவும் வாக்குவாதமும் தொடர்ந்தன. ''நீ பாக்கியம் கெட்ட வள். அதுதான் உன்னை யாரும் கட்டிக்கொண்டு போக வில்லை: நீ இருந்த இடம் புல் முளைத்துப் போகும். எனக்குக் கல்யாண மாகிறபோது பதினாலு வயசு; இப் போது உனக்கென்ன? குட்டிச்சுவர் மாதிரி இருபத்தி ரெண்டு வயசடி! இருபத்திரண்டு!''

''ஏய்! நீ கொஞ்சம் சும்மா இருக்கமாட்டாய்? எல்லாம் படைத்தவன் கண் திறந்தால் அவளுக்கும் இந்த வருஷமே நிக்காஹ் ஆகிவிடும், நான் மாப்பிள்ளை பார்த் துக்கொண்டுதான் இருக்கிறேன்'' என்று வாப்பா பதில் சொல்வார்.

''ஆமாம்! இவளைக் கட்டுகிறதற்கென்று டில்லி பாதுஷா வரப்போகிறான்!'' அவளுடைய அபிப்பிராயத் தில் குஞ்சுப்பாத்துமாவுக்குப் புருஷன் இந்த உலகி லேயே இல்லை. ''அவன் இங்கே எதைக் கண்டுவிட்டு வரப்போகிறான்?''

ஆம்! ஒன்றுமில்லை. பரிசம் கொடுப்பதற்கு ஏதாவது உண்டோ? தங்க நகை, தட்டுமுட்டுச் சாமான் கள் ஏதாவது உண்டோ? ஒரு சல்லிக் காசுகூட இல்லை. வாப்பாவுக்கு மட்டும் அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை. எவனாவது வருவான் என்று. யார் வருவார்கள்? யார் வந்தால் என்ன? வீட்டில் ஒரு துரும்பும் இல்லை. எப்போதும் சண்டையும் சச்சரவுந்தான். ஏன் இப்படி யெல்லாம் நடக்கிறது?

அவள் வாசல் திண்ணையில் சாய்ந்துகொண்டு அந்த வாலிபனை நினைத்துக்கொள்வாள். அவன் எங்கே? எங்கே போய்விட்டான்? எங்கிருந்து வந்தான்? பெயர், சாதி, மதம். உற்றார் ஒன்றுமே தெரியாது! வாழ்க்கையில் அவள் கண்ட ஒரே ஒரு நல்ல மனிதன்! அந்த முகமும், அந்த மாறாத புன் சிரிப்பும்! வெட்டுப்பட்ட அந்த விரல்! என்ன ஆயிற்றோ என்னவோ? பாவம்! சூனியமான அந்த வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்தில், பூத்துச் சொரியும் முல்லைக்கொடிகளைத் தவிர வேறொன்றும் இல்லை. எங்கிருந்தோ வந்த அவன் கட்டிய கட்டை அவள் அவிழ்த்துப் பார்த்தாள். ரணம் நன்றாக ஆறியிருந்தது.

அதெல்லாம் ஒரு பழைய நினைவாகிவிட்டது. கொஞ்ச நாளைக்குப் பின் யாரோ அந்தத் தோட்டத்தையும் வீட்டையும் விலைக்கு வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள். யாரோ? அதுவும் உடனே தெரிந்துவிட்டது. அதில் அவளுக்குக் கொஞ்சம் வருத்தந்தான். யாரோ தூரதேசத்துக்காரர்களாம். மூன்று பேர்கள்: வயசான கணவனும் மனைவியும்; அப்புறம் மிகவும் ராங்கிக்காரி மாதிரி தோன்றிய ஒரு பெண். எல்லோரும் காபிர்கள்! குஞ்சுப்பாத்துமாவின் மனத்தில் இன்னதென்று சொல்ல முடியாத ஓர் ஏக்கம். அவளுக்கு இவ்வுலகில் யாரும் இல்லை. அவள்தான் பாக்கியம் கெட்டவளாயிற்றே! அவளைப் போன்றவர்களுக்குக் கடவுள்தான் கதி; 'யாரப்புல் ஆலமீன்! பிரபஞ்சங்களுடைய சிருஷ்டிகர்த்தாவே!' கண்களில் நீர் மல்க அவள் பிரார்த்தித்தாள்; அவளுடைய ஆசைதான் என்ன?

# 7

## திருட்டு முட்டாள்!

ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணி இருக்கும்: பக்கத்து வீட்டு ராங்கிக்காரப் பெண், குளிப்பதற்குத் தயாராக அல்லிக்குளத்தில் கரையருகே சட்டைத் துணிகளை அவிழ்த்துக்கொண் டிருப்பதைக் குஞ்சுப் பாத்துமா பார்த்துவிட்டாள். 'ஓஹோ; சட்டைக்கு அடியில் பாடி: ஸாரிக்குள்ளே பாவாடை; அப்படியா!' என்று தனக்குள் முனகிக்கொள்ளும்போது ஒரு விஷயம் திடீரென்று ஞாபகத்துக்கு வந்தது. உடனே ஒரு பதற்றம். 'அட பாவமே! அந்தச் சின்னக் காபிரிச்சி குளித்துக் கிளித்து வைக்கப்போகிறுள். அட்டை கடித்துக் கொல்லும்!'

குஞ்சுப்பாத்துமா ஓரடி எடுத்து வைக்கும்போதே அவளுடைய கூந்தற் கட்டு அவிழ்ந்து தொங்கியது. அதையும் பாராமல் அவள் ஓடினுள். ''வேண்டாம்! வேண்டாம்!'' என்று கத்திக்கொண்டே அந்தப் பெண்ணருகில் மேல் மூச்சுக் கீழ்மூச்சு வாங்க நின்றுள். அந்தப் பெண் கொஞ்சங்கூடத் தயங்காமல், ''முட்டாள்! குளிக்க வேண்டாம், குளிக்க வேண்டாம் என்று! முழுவதும் சொல்லுவதற் கென்ன?'' என்று கடிந்துகொண்டாள். குஞ்சுப்பாத்துமா ஒன்றும் பேசவில்லை. 'அம்மாடி! இவள் பேசுகிறதைப் பார்! குளிக்க வேண்டாமென்று சொல்ல வேண்டுமாம். ஏன்? வேண்டாம் என்று மட்டும் சொன்னுல் அதில் என்ன தப்பு? அவளுடைய ராங்கியைப் பார்த்தாயா? ஒரு வேளை காபிரிச்சிகள் எல்லாரும் இப்படித்தானே? ஆனுல் அந்தக் காலத்தில் குளக்கரையில் அவள் பார்த்த காபிரிச்சிகள் எவ்வளவு சிநேகமாக இருந்தார்கள்! இவளும் அவர்களைப்போல 'ஸாரிக்காரி'

யானாலும் எத்தனை ராங்கி, பார்! சரி, வந்தது வந்தோம். வரால் மீன்களையாவது பார்ப்போம்' என்று அவள் குளத்தின் அருகே போய் நின்றாள்.

அந்த வனிதை, "ஆகா! எவ்வளவு அழகான கூந்தல்; கறுத்த மறு வேறு; அழகிதான். சந்தேகமே இல்லை" என்றெல்லாம் சொல்லிக்கொண்டே தன் உடைகளை எடுத்து அணிந்துகொண்டாள். பிறகு குஞ்சுப் பாத்துமாவினிடம் போய் வெகு தோரணையாக, "ஹே சுந்தரி! இந்த ஆம்பல் பொய்கையில் பொதுஜனங்கள் குளிக்கக் கூடாதென்று ஏதாவது தடையுத்தரவு உண்டோ?" என்றாள். குஞ்சுப்பாத்துமா திரும்பி, "என் பேர் ஒன்றும் சுந்தரி இல்லை" என்றாள். அந்தப் பெண் கலீரென்று சிரித்தாள். பிறகு, "நான் உன் பெயரைச் சொல்லவில்லையடி. சரிதான், உன் பெயர் என்ன?" என்றாள்.

"குஞ்சுப்பாத்துமா."

"என்ன அழகான பெயர்! அது இருக்கட்டும். ஏன், இந்தக் குளத்தில் குளித்தால் என்ன?"

"அட்டை கடிக்கும்"

"எந்த அட்டை? பெண் அட்டையோ, ஆண் அட்டையோ?"

"எல்லாம் உண்டு இதற்குள்ளே! என்னை ஒன்று கடித்து என் ரத்தத்தை யெல்லாம் குடித்துவிட்டது. ஆனால் அப்புறம் அதை ஒரு வரால் மீன் விழுங்கி விட்டது. இதற்குள்ளே நீர்க்கோலிப் பாம்பும் ஆமையுங் கூட உண்டு!" என்றாள். பிறகு தன்னை அட்டை கடித்த கதையை விரிவாக வர்ணித்தாள். அவளைத் துடையில் அட்டை கடித்த கட்டம் வந்தபோது அந்தப் புதுப் பெண்ணுக்கு உடம்பெல்லாம் மயிர்க்கூச்சிட்டது. "ஐயோ! அப்பா!" என்று உடம்பைக் குலுக்கிக்கொண்டாள். பிறகு, "நானாக இருந்தால் சத்தம் போட்டுக் கத்தி, ஊர் முழுவதையும் வரவழைத்திருப்பேன். கடைசியில் மூர்ச்சைகூடப் போட்டிருப்பேன்" என்றாள்.

குஞ்சுப்பாத்துமா கூச்சலிடவும் இல்லை; மூர்ச்சை யாகவும் இல்லை. அதில் அவளுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. புளியமரத்தடிக்குப் போய் அங்கே விழுந்து கிடந்த புளியம்பழங்களில் ஒன்றைப் பொறுக்கி வாயில் போட்டுக்கொண்டாள். ராங்கிக்காரியும் அவளருகே போய், ''என்ன? புளியம்பழம் தின்கிருயா?'' என்ருள். ''ஆமாம்.'' 'எல்லாப் பெண்களுக்கும் புளியம்பழம் பிடிக்குமோ?' குஞ்சுப்பாத்துமாவுக்குச் சந்தேகம். இருந்தாலும் கேட்டு வைத்தாள்: ''வேண்டுமா?''

''ஒரு சின்னத் துண்டு கொடேன்.''

அப்போது அந்தப் பெண்ணின் வாயில் நீர் ஊறுவதைக் குஞ்சுப்பாத்துமா கவனித்தாள். உடனே ஒரு பெரிய துண்டாகப் பார்த்து உடைத்துக் கொடுத்தாள். அந்த ராங்கிக்காரி அதை வாங்கிக்கொண்டு தின்ன ஆரம்பித்தாள். சாதாரணமாக மற்ற எல்லாப் பெண்களையும் போல, உற்சாகமாக உறிஞ்சிக் கன்னங்களை உள்ளே இழுத்துக் கண்களை மூடிப் புளிப்பை அநுபவித்துச் சாப்பிடவில்லை. காபிரிச்சிகளைப்போல வாயில் போட்டுக்கொண்டவுடன் கடித்து விழுங்கிவிட்டாள். குஞ்சுப்பாத்துமா வியப்புடன், ''அப்படி விழுங்கப் படாது'' என்ருள்.

''ஏன், விழுங்கினல் என்ன!''

''வயிற்றுக்குள்ளே போய்ப் பெரிய மரமாக முளைக்கும்!''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. என் வயிற்றிலே கருங்கல் போனலும்கூட ஜரித்துவிடும். என் வயசுக்காரர்களுக்கெல்லாம் அப்படித்தானும்.''

குஞ்சுப்பாத்துமா மேலும் ஒரு பழத்தை நீட்டிக்கொண்டே, ''உனக்கு என்ன வயசு?'' என்று விசாரித்தாள்.

''பதினேழு.''

''எனக்கு இருபத்திரண்டு வயசாகிவிட்டதாம்! உம்மா சொன்னுள்.''

''வாப்பா என்ன சொன்னார்?''

இதற்கு என்ன பதில் சொல்வதென்று குஞ்சுப் பாத்துமாவுக்குத் தெரியவில்லை.

''என்னடி முட்டாள்! ஏன் ஒன்றும் பதில் பேச மாட்டேன் என்கிறாய்?''

''என்னை ஏன் முட்டாள் என்று கூப்பிடுகிறாய்?''

''ஏனோ? எனக்கே தெரியாதம்மா. என்னை எங்கள் காக்கா முட்டாள் என்றுதான் கூப்பிடுவான்.'' காக்கா! காபிரிச்சி, ஏன் அண்ணனைக் காக்கா என்று அழைக்கிறாள்? ''பெண் என்றால் முட்டாள் என்று பொருளா? சில சமயம் என்னை லுட்டாப்பி என்றும் கூப்பிடுவான்.''

''உன் காக்காவுடைய பெயர் என்ன?''

''நிஸார் அகம்மது''

''நிஸார் அகம்மது! உன் பெயர் என்ன?''

''ஆயிஷா.''

''நீங்கள் என்ன ஜாதி?''

''இஸ்லாம்!''

''யா ரப்புல் ஆலமீன்!'' அவள் மேலும் கேள்விகளைத் தொடர்ந்தாள். ''எங்களைப்போலவா நீங்களும்!''

''இல்லை இல்லை. நாங்கள் நேரான முஸ்லிம்கள்.?''

'நேரான முஸ்லிம்கள்! அப்படியென்றால்? அவளுடைய காதுகள் இரண்டிலும் அலுக்குகளோ, குத்தப்பட்டிருக்கும் அடையாளமோ ஒன்றையும் காணவில்லையே! நுனிக் காதில் இரண்டு தோடுகள் இருக்கின்றன. ஸாரியும் ப்ளவுஸும் வேறு உடுத்துக்கொண்டிருக்கிறாளே? இவர்கள் எப்படி இஸ்லாமானவர்கள்?'

''உன் பேர் என்ன சொன்னாய்?''

''ஆயிஷா; வேண்டுமானால் ஆயிஷா பீபீ என்றோ, ஆயிஷா பேகம் என்றோ கூப்பிடலாம். காலேஜில் என்னை ஆயிஷா பீபீ என்பார்கள். வீட்டில் அப்பாவும் அம்மாவும் ஆயிஷா என்று மாத்திரம் கூப்பிடுவர். காக்கா - நான்தான் சொன்னேனே, அதைப்போல்..படு முட்டாள் என்றோ லுட்டாப்பி என்றோ கூப்பிடுவான்.''

'ஆயிஷா! நபிநாயகத்தின் மனைவியின் பெயர்!' குஞ்சுப்பாத்துமாவால் வியப்புத் தாங்க முடியவில்லை. 'இவர்கள் எப்பேர்ப்பட்ட இஸ்லாமியர்கள்?' ''உங்கள் வீட்டில் தலையை வளர்த்துக்கொண்டு தாடியில்லாமல் இருக்கிற அந்தப் பெரியவர்..'' அந்தப் பெண் பதில் சொன்னாள்; அது குஞ்சுப்பாத்துமாவைக் கேலி செய்கிற மாதிரி இருந்தது. ''அவர் எங்கள் அப்பா. அப்புறம் 'ஸாரி' உடுத்துக்கொண்டு பெரியவளாக இருக்கிறாளே, அவள் என் அம்மா. ஆமாம். அந்தப் பல் இல்லாத கிழவர்தான் உங்கள் அப்பாவா?''

''ஆமாம்.''

''ஓஹோ! அப்புறம் ராத்திரியும் பகலும் எப்போது பார்த்தாலும் கூச்சல் போட்டுப் பேசுவது யார்?''

''உம்மா.''

''அப்படியா? அவள் ஏன் இத்தனை சத்தம் போட்டுப் பேசுகிறாள்; அக்கம் பக்கத்துக்காரர்கள் தூங்கக்கூட முடியவில்லையே! ஒரு முஸ்லிம் ஸ்திரீ இப்படி இருக்கலாமோ?'' குஞ்சுப்பாத்துமா ஒன்றும் பதில் சொல்லவில்லை. பிறகு பேச்சை மாற்றுவதற்காக, ''உங்கள் சொந்த ஊர் எது?'' என்றாள்.

''ஐயோடி! எங்களுக்கு வீடு உண்டு. ஆனால் அது சொந்த வீடு இல்லையம்மா. பட்டணத்தில் இருக்கிறது. அதை நாங்கள் குத்தகைக்கு எடுத்திருக்கிறோம். மிகவும் உழைத்துச் சிரமப்பட்டு நல்ல மாதிரி வைத்திருக்கிறோம். அதில் எப்பேர்ப்பட்ட மரங்களெல்லாம் இருக்கின்றன, தெரியுமா? ஒட்டுமா, பேரிக்காய், பேரீச்சை, மல்லிகை, ரோஜா இப்படி எங்கே பார்த்தாலும் பூவும் பழமுந்தான்!'' பிறகு வீட்டின் வர்ணனை. அது, ஓடு வேய்ந்த மாடக் கட்டிடம். வீட்டைச் சுற்றி மஞ்சள் வர்ணம் அடித்த மதில் சுவர். கேட்டுக் கதவுக்கு நீலச் சாயம் அடித்திருக்கும். வீட்டில் ஒவ்வோர் அறையிலும் மின்சார விளக்குகள் உண்டு. அப்புறம் ரேடியோப் பெட்டிகூட உண்டாம்.

"அது என்னது?" குஞ்சுப்பாத்துமாவுக்கு மற்றவை யாவும் விளங்கின. சுவரில் ஒரு பித்தானை அமுக்கினால் பளிச்சென்று எரியும் 'எல்டீக்' விளக்கைக்கூட அவள் பார்த்திருக்கிறாள். ரேடியோ என்றால் என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை. ஆயிஷா அது என்னவென்று விளக்கினாள். அது ஒரு பெட்டியாம். அதற்குள்ளிருந்து வேண்டிய பேச்சு, பாட்டு, எல்லாம் கேட்குமாம்!

"எங்கேயிருந்து கேட்கும்?"

அரேபியா, துருக்கி, ஆப்கனிஸ்தான், ஆப்பிரிக்கா, மதராஸ், கல்கத்தா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, டில்லி என்றெல்லாம் ஆயிஷா அடுக்கிக் கொண்டே போனாள். உலகம் முழுவதும் எங்கேயிருந்து வேண்டுமானாலும் கேட்கலாம். குஞ்சுப்பாத்துமாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'அடேயப்பா! இந்த ஆயிஷாவின் வீட்டில் என்னவெல்லாம் இருக்கிறது! இவளைக் கொஞ்சம் மட்டந்தட்ட வேண்டியதுதான். என்ன செய்யலாம்?'

"உங்கள் வீட்டிலே புளிய மரம் உண்டோ?"

"இல்லை"

சேசே! மற்றவை எல்லாம் இருந்து என்ன, போய் என்ன? புளிய மரம் அல்லவா முக்கியம்? அவள் மேலும் தொடர்ந்தாள். "உங்கள் வீட்டில் யானை இருந்ததோ?"

"கிடையாது."

குஞ்சுப்பாத்துமா கௌரவமாக, "எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது. எப்பேர்ப்பட்ட யானை தெரியுமா? பெரிய கொம்பனானை!? என்றாள்.

ஆயிஷா சொன்னாள்: "எங்கள் தாத்தாவிடம் ஒரு காளை வண்டி இருந்தது. அதில் அவர் கூலிக்குச் சாமான்களை ஏற்றிக்கொண்டு போவாராம். அந்த வண்டியிலிருந்து கிடைக்கும் சம்பாத்தியத்தைக்கொண்டே எங்கள் அப்பாவை எம். ஏ. வரையில் படிக்க வைத்தாராம். ஆமாம், உங்கள் வீட்டுக் கொம்பனானை எங்கே போச்சு?"

"அது மவுத்தாகிவிட்டது." அது இஸ்லாமிய

யானை அல்லவா? செத்துப் போகாது: மவுத்தாகி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

"ஓ! செத்துப்போய்விட்டதா?"

"ஆமாம். மவுத்தாகிவிட்டது. அது நாலு காபிர் களைக் கொன்றுவிட்ட தாக்கும்!"

"அப்படியானால் அதற்குச் சொர்க்கத்தில் மாணிக் கத்தால் செய்த அருக்கஞ்சட்டியில்தான் கஞ்சி வைப் பார்க ளாக்கும்?" என்ற ஆயிஷா கலகலவென்று சிரித் தாள். குஞ்சுப்பாத்துமா சொல்லிக்கொண்டே போனாள்; "எங்களுக்கு ஏகப்பட்ட சொத்து இருந்தது!"

"அதெல்லாம் எங்கே போச்சு?"

"போய்விட்டது" என்று மட்டுந்தான் அவளால் சொல்ல முடிந்தது.

இப்போது ஆயிஷா கேள்வி கேட்க லானாள்: "உன் வாப்பாவுக்கு என்ன உத்தியோகம்?"

"உத்தியோகம் இல்லை: வியாபாரம்."

"என்ன வியாபாரம்?"

"கண்டதும் கிடைத்ததும்."

"அவருடைய பேர்?"

"பட்டனடிமை."

"உம்மாவுடைய பேர்?"

"குஞ்சுத்தாச்சுமா."

"எங்கள் அப்பா காலேஜ் புரொபஸ ராக்கும்! அவர் பெயர் ஜெயினுலாபீதீன். உம்மாவின் பெயர் ஹஜாரா பீபீ, காக்கா, நிஸார் அகம்மது. காக்கா இருக்கிறானே, பெரிய கவி. ஆனால் அவன் கவி எழுதுவது பூமியில்: அவன் எழுதுகிற கவிதையெல்லாம் கடைசியில் பூவும் பழமும் காயும் கிழங்குமாய்த்தான் முடியும்." இன்னும் அவளுக்கு அண்ணனைப்பற்றிச் சொல்வதற்கு எவ் வளவோ உண்டு. அவன் ஒரு தத்துவஞானி. அவனுக்கு இவ்வுலகில் தெரியாத விஷயங்களே இல்லை. அவனுடைய ஆசைகளுக்கும் கொள்கைகளுக்கும் அளவே இல்லை; மொத்தத்தில் அவன் ஒரு பயங்கர மனிதன்!

குஞ்சுப்பாத்துமா அதைக் கேட்கவே இல்லை. அவள் மனம் அந்தப் பெயர்களில் லயித்திருந்தது. ஜெயினுலாபிதின், நிஸார் அகம்மது இப்படிப்பட்ட பெயர்களை அவள் கேட்டதில்லை. மக்கார், அடிமை, அந்து, அவரான், அபுல், குட்டி, குட்டியாலி, குஞ்சாலி, பக்கர். மீரான், மைதீன் - இப்படியெல்லாம் அவள் பெயர் கேட்டிருக்கிறுள். ஆனுல் நிஸார் அகம்மது! அவள் மனத்தில் ரத்தம்போல் சிவந்த கண்களும் விறைத்து நிற்கும் மீசையும் மார்பு முழுவதும் ரோமமும் நெடிய ஆகிருதியும் உடைய ஒரு ராட்சசன் தோன்றினுன். "ஆண்டவனே! இந்த ஆயிஷாவின் அண்ணன் இந்தப் பக்கமே வரக்கூடாது'' என்று வேண்டிக்கொண்டாள்.

''லுட்டாப்பியுடைய காக்கா எப்போது வரும்?"

"நாளைக்கோ இல்லாவிட்டால் மறு நாளோ; அதிருக்கட்டும். உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதோ?"

"ஊஹும். உனக்கு?''

"எனக்கு என்ன அவசரம்? நான் பி. ஏ. பாஸ் செய்த பிறகுதான் பண்ணிக்கொள்வேன். அப்போதும் என் அண்ணுவுக்குப் பிறகுதான். அந்த மகானுக்குப் பிடித்த பெண்ணையே இதுவரை காணவில்லை. எத்தனையோ பேர் வந்து கேட்டுப் போயாகிவிட்டது. நான்தான் சொன்னேனே, அவன் பெரிய வித்துவான். பெண் மட்டும் நன்ருக இருந்தால் போதாது. அவளுடைய சுற்றமும் வீடும் எல்லாம் நன்ருக இருக்க வேண்டும். பி. ஏ. படித்த ஒரு பெண்ணை ஒரு தரம் பார்க்கப் போனுன். அந்த வீட்டில் தண்ணீர் குடிப்பதற்கு வைத்திருந்த கண்ணுடிக் கிளாஸ் மீன்வாடை அடித்தது என்ற ஒரே காரணத்தால் அந்தக் கல்யாணம் நின்று போய்விட்டது."

"ஏன்? உன் காக்கா மீன் சேர்க்கிற தில்லையா?"

"அதை ஏன் கேட்கிருய், போ! அவன் சாதாரணமாய் ஒன்றும் சாப்பிடுகிறதில்லை. என்றைக்காவது இறைச்சி சேர்த்துக்கொள்வான். கையை அப்புறம்

தோலுரிந்து போகிற வரையில் ஸோப்புப் போட்டுக் கழுவுவான். அந்த வாடை மற்ற நேரத்தில் வீட்டில் வீசக் கூடாதாம். அவன் கல்யாணம் செய்துகொள்ளும் பெண்ணுக்கு என்னவெல்லாம் தெரிந்திருக்க வேண்டும், தெரியுமா? அவள் முக க்ஷவரம் செய்யக்கூடக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும்! வீட்டுத்துணி தோய்ப்பது முதல், சித்திரம், சங்கீதம் எல்லாவற்றிலும் நிபுணையாக இருக்க வேண்டும். சமையல் என்ருல் பத்திரி, பிரியாணி என்று மட்டுமல்ல; காளன். ஓலன், ஸாம்பார், அவியல் இப்படி இந்த உலகில் எத்தனை வகைத் தினி உண்டோ அத்தனையும் செய்யத் தெரிய வேண்டும். எல்லாவற்றுக் கும் மேலாகச் செடி, கொடி, மரம் இவைகளை எப்படி வளர்ப்பது, நடுவது, உரம் போடுவது என்றும் தெரிய வேண்டும். இத்தனையும் இல்லாத பெண்ணை அந்த மகானுபாவன் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாராம். அப்பாவும் அம்மாவும், 'உன் விருப்பம்' என்று சொல்லி யாகிவிட்டது.''

இதையெல்லாம் கேட்டதும் குஞ்சுப்பாத்துமாவின் கற்பனையில் நிஸார் அகம்மதின் உருவங்கூடக் கொஞ்சம் கொடூரமாய்த் தோன்றியது. அவளுக்கு அவன் மேலும் ஆயிஷாவின் மேலும் கோபங்கோபமாக வந்தது. இந்தப் பெண் எதற்கு எப்போது பார்த்தாலும் எங்கள் காக்கா இப்படி அப்படி என்றெல்லாம் சொல்கிருள். யாருக்கு வேண்டும் இதெல்லாம்? ஆயிஷாவுக்கு இதொன்றும் தெரியாது. அவள் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டே போனுள்.

''எங்கள் காக்காவைப்போல ஓர் ஆளை நான் பார்த்ததே இல்லே! என்ன, கேட்கிருயா? ஒரு நாள் ராத்திரி அவன் ஈஸிசேரில் படுத்தபடியே வாசித்துக் கொண் டிருந்தான். அவனுடைய இடக்கை திறந்த சாய்வு மேஜையின் விளிம்பில் கிடந்தது. நான் அதைப் பாக்கவில்லே. மேஜையின் மூடியைப் பலமாக அடித்துச்

சார்த்திவிட்டேன். ஐயோ! அதை ஏன் கேட்கிறாய்? ஏதோ சதைந்து போன மாதிரி சத்தம் கேட்டது. நான் என்ன விஷயமென்று பார்த்தபோது பதறிப்போய் மூர்ச்சை போட்டுவிட்டேன்! காக்காவுடைய இடக்கைக் கட்டை விரல் துண்டாகப் போய்விட்டது!''

என்ன! குஞ்சுப்பாத்துமாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது! அது மட்டுமல்ல; அவளுடைய உடலெங்கும் குளிர்ந்து விறைந்தது.

''அப்புறம்?''

''காக்கா அசையக்கூட இல்லை. அப்படியே என்னிடம், 'கத்தரிக்கோலை எடுத்துக்கொண்டு வா' என்றாள். நான் ஓடிப்போய்க் கொண்டுவந்து கொடுத்தேன். அவன் அப்படியே அந்தச் சதைந்துபோன விரலை வெட்டி எறிந்துவிட்டான்!''

கதையெல்லம் சொன்ன பிறகு ஆயிஷா எழுந்து, ''எனக்கு நேரமாகிவிட்டது. நான் போகிறேன். நீ எங்கள் வீட்டுக்கு வாயேன்'' என்றாள். குஞ்சுப்பாத்துமாவுக்கு அவள் கேட்டது காதில் விழவில்லை. அவள் அப்படியே ஸ்தம்பித்துப் போயிருந்தாள். ஆயிஷா அவளைக் குலுக்கினாள்.

''வருகிறாயா?''

''எங்கே?''

''போடி முட்டாள், எங்கள் வீட்டுக்கு வருகிறாயா என்று கேட்டேன்.''

''நான் எங்கள் உம்மாவிடம் கேட்டுவிட்டு வருகிறேன்'' என்று குஞ்சுப்பாத்துமா வீட்டுக்குள் ஓடினாள். ''உம்மா, பககத்து வீட்டுக்குக் குடி வந்திருக்கிறதுகூட முஸ்லிம்கள் தானும்மா! நான் அங்கே போய்விட்டு வரட்டுமா?''

''போடி, கேடு கெட்டவளே! அவர்கள் முஸ்லிம்கள் அல்ல: காபிர்கள்.''

''இல்லை உம்மா, அவர்கள் இஸ்லாந்தான்.

பாரேன், அவர்கள் வீட்டு ஆயிஷாகூட நம் வீட்டுப் புளியமரத்தடியில் நிற்கிறாள்.''

உம்மா பார்த்தாள். ஆயிஷா 'ஸாரி' உடுத்துக் கொண்டிருந்தாள். அப்படியானால் எப்படி முஸ்லிமாக இருக்க முடியும்? ''அட மொய்தீனே! இவர்களெல்லாம் இஸ்லாமா?''

''ஆமும்மா! நீ கொஞ்சம் மெதுவாய்ப் பேசேன். நான் அவர்கள் வீட்டுக்குப் போய் விட்டு வரட்டுமா?''

''ஒன்றும் கூடாது. என் பேச்சை மீறி இந்த வீட்டு எல்லையை விட்டு அங்கே போனால்; அவ்வளவு தான்! நீ என் மகள் அல்ல.''

குஞ்சுப்பாத்துமா தோழியிடம் திரும்பிப் போய், ''நான் நாளைக்கு வருகிறேன்'' என்றாள்.

''ஏன்? இன்றைக்கு என்ன?''

''இன்றைக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது; தண்ணீர் எடுக்க வேண்டும். நாளைக்கு வரும்போது நல்ல புளியம்பழம் கொண்டு வருகிறேன்.''

ஆயிஷா போனாள். அன்றிரவு வேகுநேரம் வரையில் குஞ்சுப்பாத்துமாவுக்குத் தூக்கம் வரவில்லை. அவள் ஆயிஷாவின் காக்கா அங்கே வரக்கூடாதென்று முன்பே ஆண்டவனிடம் பிரார்த்தித்துக் கொண்டாள். இப்போது நேர்மாறாக எப்படிப் பிரார்த்திப்பது? கடைசியில் அவள் வேண்டிக்கொண்டாள்: 'படைத்தோனே லுட்டாப்பியுடைய காக்கா...'

# 8

## 'பொய்ச் சாட்சி சொல்ல மாட்டேன்!'

உம்மா திர்மானமாகச் சொல்லிவிட்டாள், 'அவர்கள் முஸ்லிம்களே இல்லை!' என்று. குஞ்சுப் பாத்துமா அதற்கு வாப்பா என்ன பதில் சொல்கிறார் என்று கவனித்தாள். அவர் வாய் திறக்கவே இல்லை. உம்மா தொடர்ந்துகொண்டே போனாள்: 'நிச்சயமாக உலகம் அழிந்துதான் போகப்போகிறது! இதெல்லாம் அதற்கு அடையாளந்தான்.' ஆயிஷாவும் அவளுடைய தாய்தந்தைர்களும் இவ்வுலகின் அழிவு நெருங்குவதைக் குறிக்கும் சின்னங்களாம். 'அந்த வீட்டில் பெண்ணாய்ப் பிறந்தவள் ஒருத்தி இருக்கிறாளே. அவள் தலையிலே பூ வைத்துக்கொண்டிருக்கிறாள். பூ!' ஆயிஷாவின் தாயார் தலையைப் பின்னிப் பூ வைத்துக் கொள்வதும் உலக அழிவுக்கு ஓர் அடையாளம். 'அப்புறம் அந்தச் சின்னப் பெண்ணினுடைய அலங்காரம் சகிக்கவில்லை. தலையைப் பின்னி இரண்டு வால்மாதிரி மார்பின்மேலே போட்டிருக்கிறாள். வெட்கமில்லாமல்!'

ஆயிஷா சிகையலங்காரத்தில் மகா கெட்டிக்காரி. அவள் தினமும் ஒருவிதமாகத் தலையைப் பின்னிக்கொள்வாள். அவளுடைய குறும்புக்கும் துடுக்குத்தனத்துக்கும் ஓர் அளவே இல்லை. ஒரு நாள் அவளும் குஞ்சுப் பாத்துமாவும் வழக்கம்போல் அல்லிக்குளத்தின் கரையில் உட்கார்ந்திருந்தார்கள். ஆயிஷாவுக்குக் குஷி பிறந்துவிட்டது. உணர்ச்சியோடு ஒரு பாட்டுப் பாடினாள். குஞ்சுப்பாத்துமா அது ஒரு தோத்திரம் என்று நினைத்துக்கொண்டாள். பள்ளிவாசலில் பாடுவதுபோல ஒருவேளை 'பைத்து,[17] அல்லது 'கெஸ்ஸ'[18] மாதிரிப் போலும்! பாட்டு முடியும் வரையில் பயபக்தியோடு கேட்டுவிட்டு முடிந்ததும், 'ஆமென்' என்றாள்.

ஆயிஷா பொங்கி வந்த சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். குஞ்சுப்பாத்துமாவுக்குத் தான் ஏதோ தவறு செய்துவிட்டோம் என்பது புரிந்தது. ''நீ ஏன் சிரிக்கறே? அதென்ன பாட்டு?'' என்றாள்.

''அதை என்னிடம் கேட்டு என்ன பண்ண? எனக்குத் தெரியாதம்மா. காக்கா வரும்போது கேள். அந்த மேதாவிதான் அதன் சாகித்ய கர்த்தா. அதன் பாஷை என்னவென்றுகூட எனக்குத் தெரியாது. அதை எங்கேயிருந்து பிடித்தானோ, யார் கண்டது? எங்கள் காலேஜில் பெண்கள் எல்லாரும் ஒரு தரம் சைக்கிளில் ஏறி உல்லாச யாத்திரைக்குப் போனோம். அப்போது பாடுவதற்கு அவன் எழுதிக்கொடுத்தான். எனக்குப் பாதிப் பாட்டுக்குமேல் மறந்துவிட்டதடி! மறுபடியும் அவன் வருதற்கு முன்னுல் ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். இல்லாமல் போனுல் உதை விழும்.''

''உன் காக்கா உன்னை உதைக்கக்கூட உதைப் பாரா.''

''ஐயோ! உதை மாத்திரமா? அவன் வந்தவுடன் என்னைக் கூப்பிடுவான். 'லுட்டாப்பி, இங்கே வா; இந்தக் கோட்டின்மேல் நில், என்பான். நான் நின்று கொண்டு அவன் உத்தரவுப்படி பாடவில்லையோ, என்னை இரண்டாயிரம் துண்டாக வெட்டி, இரண்டாயிரம் கிளிகளுக்குப் போட்டுவிடுவான்! அப்புறம் அந்தக் கிளிகளையெல்லாம் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளி அவைகளைப் பொரித்துத் தின்றுவிடுவான்!''

''அதெப்படி? அறுத்தல்லவா தின்னவேண்டும்?''

''போடி முட்டாள்! என்னைப்போல நல்ல பெண்ணை ஒருத்தன் அறுத்துக் கிளிக்குப்போடுவானுக்கும்? நீ அதற்குக் கேள்விமேல் கேள்வி போடுகிருயே? நரமாம்சம் தின்கிறவன், 'பிஸ்மில்லா, சொல்லியா தின்னவேண்டும்? கோவில் சொத்தைத் திருடுபவன் ஆண்டவனுக்குக் கும்பிடு போட்டுவிட்டா திருட வேண்டும்?''

இப்படி வேடிக்கையும் விளையாட்டுமாகவே ஆயிஷா குஞ்சுப்பாத்துமாவுக்கு அநேக விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தாள். சில வேளைகளில் பத்திரிகைகளைக் கொண்டு வந்து அதிலுள்ள ருசிகரமான விஷயங்களைத் தன் தோழிக்குப் படித்துக் காண்பிப்பாள். எப்படி இவ்வளவு விஷயமும் அந்தப் பேப்பருக்குள் வந்ததென்று குஞ்சுப்பாத்துமா ஆச்சரியப்படுவாள். ஒரு நாள் ஆயிஷா அவளிடம், ''ஆமாம். ஒரு பாடு சொத்து இருந்தது என்று சொன்னாயே; அப்படியானால் ஏன் உனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கவில்லை?'' என்றாள்.

அன்றிரவு தூங்கப்போகும்போது பாயில் படுத்திருந்தபடியே இருட்டில் அவள் தன் வாப்பாவிடம், ''எனக்கு ஏன் எழுத்துச் சொல்லிக்கொடுக்கவில்லை?'' என்று கேட்டாள். வாப்பா, நீண்ட பெருமூச்சு விட்டார். உம்மா மட்டும், ''எழுத்துப் படிக்கவேணுமாக்கும் எழுத்து! அறு ஒன்றுதான் குறைச்சல்! ஏன் உன்னை நாங்கள் காப்பிராக்கவில்லை என்று கேட்கிறயாக்கும்!'' என்றாள். எழுதவும் படிக்கவும் தெரிந்தால், அறிவு உண்டானால், இஸ்லாம் வகுத்த வழிப்படி நடக்க முடியாது! இது சரிதானா? அடுத்த நாள் ஆயிஷாவிடம் இந்தக் கேள்வியைக் கேட்டாள். ஆயிஷா சிரித்தாள். அறிவின்மையின் போக்கைப் பார்! ''இதோ பார்! இஸ்லாமானவர்களுக்கும் அறிவு வேண்டியதுதான். அறிவில்லாதவன் கோவேறு கழுதைக்குச் சமானம். இப்போது சொல்: இஸ்லாம் கோவேறு கழுதையா?'' அப்படி அல்ல என்பது குஞ்சுப்பாத்துமாவுக்குத் தெரியும். அவள் பதிலுக்கு ஒரு கேள்வி கேட்டாள். ''நாம் காபிர்கள் மாதிரியா? அவர்கள் செய்கிற மாதிரி நாம் செய்யலாமா?'' என்றாள்.

''ஆமாமடி! நீ சொல்வது சரிதான்.'' இப்போது ஆயிஷாவுக்கு நல்ல கோபம் வந்துவிட்டது ''காப்பிர்கள் காலால் நடக்கிறதனால் நாம் தலையால் நடக்க

வேண்டும். அவர்கள் குளிக்கிறார்கள்; பல் தேய்க்கிறார்கள். அதனால் நமக்கு அதெல்லாம் வேண்டாம். அவர்கள் வாயால் சாப்பிடுகிறார்கள். அதனால். . .''-குஞ்சுப் பாத்துமா ஆயிஷாவின் வாயைப் பொத்தியவாறு, ''நீ சும்மா இரு, லுட்டாப்பி! என்னை ஏன் இப்படிக் கேலி பண்ணுகிறாய்?'' என்றாள்.

''முட்டாள்! நான் உன்னைக் கேலி பண்ணவில்லை; உன் சமுதாயத்தைத்தான் பண்ணுகிறேன். அல்லாஹ்வும் நபிநாயகமும் நமக்குக் காட்டிய மார்க்கத்தில் இப்படியெல்லாம் காபிர்களுக்கு மாறாக நடக்கவேண்டும் என்று சொல்லவில்லை. இஸ்லாமியர்கள் நல்ல மனிதர்களாக வாழவேண்டும். சுத்தமும் ஆரோக்கியமும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையில் அழகும் ஆனந்தமும் கலந்திருக்க வேண்டும். பிறரைக் கஷ்டப்படுத்தக் கூடாது. பொய்யாமை வேண்டும். அல்லாஹ்வின் பேரிலும், அவருடைய தீர்க்கதரிசியாகிய முகம்மதுவின் பேரிலும் நம்பிக்கை வேண்டும். இப்படி எத்தனை எத்தனையோ காரியங்கள் உண்டு. அதன்படி நடப்பவர்கள்தாம் உண்மை முஸ்லிம்கள். இன்னமும் இதற்குமேல் சந்தேகம் உண்டானால் எங்கள் காக்கா வரும்போது கேட்டுக் கொள்.''

ஆனால் நிஸார் அகம்மது வந்தபோது வாப்பா அவன் கழுத்தை வெட்டுவதற்குத் தயாராகக் கையில் பட்டாக்கத்தியை உருவிக்கொண்டு நின்றார். அதற்குக் காரணமும் உம்மாதான். நிஸார் அகம்மது வந்தபோது ஒரு காட்டையும் சுமந்துகொண்டு வந்தான். ஒரு வண்டி நிறையச் செடிகளும் கொடிகளும் விதைகளும் வந்து இறங்கின. அநேகமாக எல்லாம் பழமரங்களின் கன்றுகள். நிறையத் தென்னம்பிள்ளைகளும் இருந்தன. வெறுந் தரிசாய்க் கிடந்த அந்த வீட்டின் தோட்டம் ஒரே நாளில் வரிசை வரிசையாக நட்ட செடி கொடிகள் அடர்ந்து வனம்போலக் காட்சியளித்தது. அன்றைக்கு

அங்கே ஒரே கலாட்டா. நிஸார் அகம்மது, அவன் தந்தை, தங்கை மூன்று பேரும் வரிந்து கட்டிக்கொண்டு அங்கும் இங்கும் ஓடியாடி வேலை செய்துகொண்டிருக்கும் செய்தியை வியந்தவண்ணம் குஞ்சுப்பாத்துமா உம்மாவிடம் சொன்னாள். உம்மா டோக் டோக் என்று மிதியடிகள் சப்தித்தவாறு வந்து பார்த்தாள். பிறகு உதட்டைப் பிதுக்கிவிட்டு, ''ஹூம்! அவர்களுக்குப் பைத்தியம்!'' என்று சொல்லிப் போய்விட்டாள். குஞ்சுப் பாத்துமாவுக்கும் அது சரியாகத் தோன்றவில்லை. அவள் மண்ணைக் கொத்திக் களை பறிக்கும் ஒரு முஸ்லிமை இப்போதுதான் பார்க்கிறாள். முஸ்லிம்களுக்கென்று கடவுள் வியாபாரத்தை ஒதுக்கி வைத்திருப்பதாக அவள் நினைவு. மிகவும் அவசியமாக அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் வேளாண்மையைக் கூலிக்காரர்கள்தாம் செய்ய வேண்டும். அப்படியின்றித் தன் நிலத்தில் ஒரு முஸ்லிம் பாடு படுவ தாவது!

அவளுடைய மனத்தில் ஒரு கற்பனை. தங்கள் வீட்டுத் தோட்டமும் பாழாய்த்தான் கிடக்கிறது. எந்தச் செடி வேண்டுமானாலும் வைக்க இடம் உண்டு. அவளுக்கும் ஓர் அண்ணன் இருந்தால்..? நிஸார் அகம்மதின் வருகைக்குப் பின் அவள் தானாகவே சில காரியங்களைச் செய்ய ஆரம்பித்தாள். தோட்டத்தில் குவிந்து கிடந்த செத்தையையெல்லாம் வாரிக் கூட்டி, நெருப்பு வைத்தாள். அடுக்குள் வாசலுக்கருகே கிடந்த மீன் செதிள்களையும் எலும்புகளையும் வாரிப் பெருக்கி அப்புறப் படுத்தினாள். வீட்டுக்குள்ளேயும் தும்பு தட்டி, அழகு பண்ணினாள். வீட்டுத் திண்ணையில் மறைவுக்காகக் கட்டியிருந்த கிழிந்த பழைய கோணிப் படுதாக்களைத் தைத்து மறுபடியும் கட்டினாள். இதெல்லாம் தீர்ந்த பின் அவள் தன்னையும் சற்று அலங்காரம் செய்துகொண்டாள். இந்தக் கோலாகலங்களையெல்லாம் கண்ட உம்மா, ''இதென்னடி கூத்து! உனக்கு என்ன வந்து விட்டது?'' என்றாள்.

முதல் முறை நிஸார் அகம்மது அவளைக் கண்ட போது, ''கையில் காயம் ஆறிப் போய்விட்டதா?'' என்று மட்டும் விசாரித்துப் போய்விட்டான். அதை இவ்வளவு நாட்களுக்குப் பிறகும் மறக்கவில்லையே! குஞ்சுப்பாத்துமாவுக்கு என்றும் இல்லாத புத்துணர்வு தோன்றியது. அது அவனுடைய வருகைக்கு முன்போ பின்போ என்று மட்டும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. நிஸார் அகம்மது அடுத்தபடியாக அவர்கள் வீட்டுக்குப் பின்னால் ஒரு கக்கூஸ் கட்டினான். பன்னிரண்டு அடி நீளம், நாலடி அகலம், ஓர் ஆள் இடுப்பு வரை ஆழம். இப்படி ஒரு குழி. அதை நிஸார் அகம்மது வெட்டும்போது அவளுடைய வாப்பாவும் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் அவருக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியாததால் உதவி செய்ய முடியவில்லை. அது தோட்டத்தின் ஒரு மூலை. அதனால் அவர்கள் என்ன பேசிக்கொண்டார்களென்பதைக் குஞ்சுப்பாத்துமாவால் கேட்க முடியவில்லை. நிஸார் அகம்மதின் முதுகில் வேர்வை ஆறாக வழிந்துகொண்டிருந்தது, வாப்பா சமையலறைக்கருகே வந்து, ''மகளே, கொஞ்சம் அவனுக்குக் குடிக்கிறதற்குத் தண்ணீர் கொடம்மா'' என்றார்.

குஞ்சுப்பாத்துமா உள்ளே போய் யாருக்கும் தெரியாமல் இரண்டு பாத்திரங்களை லேசாக ஸோப்புப் போட்டுக் கழுவினாள். பிறகு மோந்து பார்த்தாள்: ஏதாவது நாற்றம் அடிக்கிறதோ? ஒன்றுமில்லை. வாப்பா அவள் கொடுத்த பாத்திரத்தை அப்படியே நிஸார் அகம்மதிடம் நீட்டினார். அவன் அதை யாருக்கும் தெரியாமல் மோந்து பார்த்துவிட்டுத்தான் குடித்தான் என்று ஆயிரம் பள்ளிவாசல்களில் சத்தியஞ் செய்ய அவள் தயார்.

வேலையெல்லாம் தீர்ந்தபின் குஞ்சுப்பாத்துமா அதைப் பார்வையிட்டாள். குழியைப் பாலமிட்டது போல் இரண்டு பனந்துண்டுகள். ஒரு புறம் மண்ணைக்

குவித்து அருகில் ஒரு தேங்காய்ச் சிரட்டையும் வைத்திருந்தது. 'ஒரு தரம் உபயோகித்தால் மண் போட்டு மூட வேண்டும். கொஞ்ச நாளானால் இது மேடிட்டுப் போகும். அப்போது புதிது' என்று ஆயிஷா சொல்லிக் கொடுத்தாள். இதற்குப் பின் வாப்பாவும் நிஸார் அகம்மதும் நெருங்கிய நண்பர்கள். 'இது நமக்கு முன் கூட்டியே தோன்றவில்லை. இப்படி ஒவ்வொரு வீட்டிலும் இருந்தால் நல்லதுதான்' என்றார் வாப்பா. அன்றுமுதல் அவருக்கு என்ன சந்தேகங்கள் வந்தாலும் அவனிடம் கேட்டுத் தெரிந்துகொள்வார். இரண்டு பேரும் பெரிய மதப்பிரச்னைகளைக் குறித்து வாக்குவாதம் செய்வார்கள்.

''இந்த ஜனங்கள் அகங்காரம் பிடித்து அலைவதெல்லாம் உலகின் அழிவுக்குத்தானே?''

''இருக்கலாம். எனக்குத் தெரியாது. பிறந்தவர்கள் எல்லாரும் ஒரு நாள் இறக்கவேண்டுமென்பது மட்டும் நிச்சயம். நீரும் நானும் எல்லாம் அதற்கு உள்பட்டுத்தான். அதுபோல இந்த உலகமும் ஒரு நாளைக்குப் போய்விடும். அதனால் என்ன? அழிவு வரும்போது வரட்டும். அதுவரை சந்தோஷமாக வாழவேண்டியது. நமக்கெல்லாம் அறிவில்லாமல் இருப்பதனால்தான் துஷ்டர்களும் அகங்காரிகளும் வாழ்கிறார்கள். அவர்களை நேர்மையான பாதைக்கு அழைத்துப் போக ஆட்கள் வேண்டும். பிறகு மற்றவர்கள் உயர்த்தி, தாழ்த்தி என்ற வித்தியாசங்கள் பாராட்டாமல் வாழ வேண்டும்.''

''அதெப்படி, விஷப் பாம்பை நல்ல வழிக்குத் திருப்புவது?''

''நீங்கள் சொல்வது புரியவில்லையே!''

''அப்படியும் சில மனிதர்கள் இருக்கிறார்களே! குரங்கு, ஓநாய், புலி, இவற்றினுடைய புத்தியும் சில மனிதர்களுக்கு வாய்த்துவிடுகிறதே?''

''அந்த மிருகத்தையே மனிதன் பிடித்துத் தன் சொல்படி ஆட்டி வைக்கும்போது இது என்ன பிரமாதம்?''

''இருந்தாலும்..'' பிறகு இருவரும் மௌனமாக ஆலோசனையில் மூழ்கிவிடுவார்கள்.

வேறு ஒரு சமயம் உம்மா, நிஸார் அகம்மதுடன் பேசிக்கொண்டிருந்தாள். ''ஆயம்மதே! இந்தக் காடெல்லாம் எதற்கு வளர்க்கிறாய்?'' குஞ்சுப்பாத்துமா வாசற்கதவின் திரைச்சீலை மறைவில் இருந்தபடியே, 'ஆயம்மது இல்லை; நிஸார் அகம்மது'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

''அதொன்றும் காடல்ல. இரண்டு மூன்று வருஷங்கள் கழித்துப் பாருங்கள். உங்களுக்கெல்லாம் நல்ல மாம்பழம், பேரிக்காய் எல்லாம் தருவேனே!''

''ஏன், ஆயம்மதினுடைய உம்மா இந்தப் பக்கம் வருகிறதில்லை!'' அதற்கு ஆயிஷா கணீரென்று பதில் சொன்னாள்: ''உம்மாவுக்கு முந்தாநாள் சண்டைக்குப் பிறகு ஒரே பயம்!'' - எல்லாரும் சிரித்தார்கள்.

அந்தச் சண்டை நிஸார் அகம்மது கக்கூஸ் கட்டியதற்குப் பிறகும், குஞ்சுப்பாத்துமாவின் வீட்டில் கக்கூஸ் கட்டுவதற்கு முன்பும் நடந்தது. நிஸார் அகம்மது வந்தாகிவிட்டது என்று தெரிந்தவுடன் குஞ்சுப்பாத்துமாவுக்குச் சேர்ந்தாற்போல் இனந்தெரியாத பயமும் மகிழ்ச்சியும் கலந்து தோன்றின. என்றும் இல்லாதபடி மனவியாகூலம் அதிகரித்தது. அது மட்டும் அல்ல. உணவு செல்லவில்லை. உறக்கம் கொள்ளவும் இல்லை. நாளுக்கு நாள் மெலிவு உண்டாயிற்று. அதற்கு நடுவேதான் அந்தச் சண்டை.

நிஸார் அகம்மதும் ஆயிஷாவும் அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் செடிகளுக்கு ஜலம் பாய்ச்சிக்கொண்டிருந்தார்கள். குஞ்சுப்பாத்துமா தன் வீட்டுத் தோட்டத்தில் களை பறித்துக்கொண்டிருந்தாள். மணி என்ன என்று தெரியாது. சூரியன் புளிய மரத்தின் உச்சியை அடையும் நேரம். வழக்கம்போல உம்மா வெள்ள வாரியிலிருந்து கரைக்கு ஏறிக்கொண்டிருந்தாள். ''..ஹே, கொஞ்சம் நில்லுங்கள். ஒரு வார்த்தை!''

நிஸார் அகம்மதின் குரல். உம்மா ரௌத்திராகாரமாகத் திரும்பினாள். அவன் விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னான். 'எல்லாரும் இங்கே இருக்கையில் ஒருவர் வெள்ளவாரியில் கக்கூஸ் செய்வது சரியல்ல.'

''என்னைச் சொல்ல நீ யாருடா? யாருடன் பேசுகிறாயென்று ஞாபகம் வைத்துக்கொள்!'' என்று உம்மா எதிர்த்தாள்.

"உம்மா, கொஞ்சம் பொறு" என்று குஞ்சுப் பாத்துமா ஓடி வந்தாள். நிஸார் அகம்மது லேசாகச் சிரித்தான். உம்மா விறைத்து நின்றாள். "பெண்ணாய்ப் பிறந்தவளை ஏறி மிதிக்கிறவனைப் பார்!" என்று இரைந்தாள். அன்று மாலை வாப்பா திரும்பி வந்ததும் உம்மா குற்றப் பத்திரிகை வாசித்தாள். "குடிகெட்டுப் போச்சு! மொய்தீனே! குடிகெட்டுப் போச்சு!"

"என்னது?"

"உற்றுப் பார்த்தான்! நான் அந்த வெள்ளவாரியிலே இருக்கும்போது உற்றுப்பார்த்தான். மொய்தீனே! கெடுத்தாயே கேடு!"

"யாரு?" வாப்பாவின் கண்கள் கோவைப் பழமாகச் சிவந்தன.

"அவன்."

''எவன்? அவன் கழுத்தை நான் இப்போதே வெட்டிவிடுகிறேன். ''எவன்?'' என்று வாப்பா பட்டாக் கத்தியை எடுத்துக்கொண்டு முற்றத்தில் இறங்கினார்.

''அவன்தான். எங்கிருந்தோ வந்து குடியிருக்கிற அந்தப் பக்கத்து வீட்டுப் பிள்ளையாண்டான்'' என்று உம்மா சொல்லி முடிப்பதற்குள், ''அஸ்ஸலாமு அலைக்கும்''[1] என்று சொல்லிக்கொண்டு நிஸார் அகம்மது வாசற் படியில் நின்றான். வாப்பா அவனுடைய கிராப்பையும் வலப் பக்கத்தில் கொசுவம் வைத்து உடுத்திருக்கும் முண்டையுந்தான் கவனித்தார். இருந்தாலும் கடுங் கோபத்துடன், ''ஆலைக்கும் ஸலாம்'' என்றார். அவன் தான் பேச ஆரம்பித்தான்.

நாங்களும் இந்த வீட்டுக்குப் பக்கத்தில்தான் குடியிருக்கிறோம். என் வீட்டிலும் ஒரு தாயும் தங்கையும் இருக்கிறார்கள்.''

''நீங்கள் முஸ்லிம்கள்தாமா, ஐயா?''

''ஆமாம்.''

''எப்பேர்ப்பட்ட முஸ்லிம்கள்?''

மத சம்பந்தமான விஷயங்களைப் பிறகு பேசுவோம். நாங்கள் யாராக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகிறோம். ஹிந்துவோ கிறிஸ்தவனோ எப்படி வேண்டுமானாலும் ஏதானாலும், இப்படி எங்கள் அருகே இருந்துகொண்டு....?''

''அப்படியிருந்தால் உற்றுப் பார்ப்பதுதான் உங்கள் வழக்கமோ?''

''வாப்பா!'' குஞ்சுப்பாத்துமா திடீரென்று உள்ளேயிருந்து கூப்பிட்டாள்.

''ஏன், மகளே?''

''உம்மா சொல்கிறது..'' என்று வாயெடுக்கும் போதே உம்மா அவள் வாயைப் பொத்திக்கொண்டு, நீ நாசமாய்ப் போக! என் மானத்தைக் காப்பாற்றடி! நான் உம்மா இல்லையா? யானை மக்காருடைய அருமைப் பெண்ணடி நான்!'' என்று புலம்பினாள். குஞ்சுப் பாத்துமா கையைப் பிடுங்கி உதறித் தன்னை விடுவித்துக் கொண்டாள். ''உம்மா சொல்கிறது பொய்!'' என்று உரக்கக் கத்தினாள்.

''கெடுத்தாளே குடியை! மொய்தீனே! இவளையும் நான்தானே பெற்றேன்?'' என்று உம்மா பிலாக்கணம் பாடத் தொடங்கிவிட்டாள்.

''குஞ்சுப்பாத்துமா, என் மகளே! உங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்ததடீ, பெரிய கொம்பனானை!'' என்று மேலும் உம்மா கதறினாள்.

''ஐயோ! இருந்தாலும் என்னால் பொய்ச்சாட்சி சொல்ல முடியாதும்மா!'' என்று பதிலுக்குப் பெண் கதறினாள்.

வாப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை. மகள் அழுது கொண்டே, "உம்மா சொல்வது பூராவும் பொய்! அவர், அவர்கள் வீட்டுத் தோட்டத்திலே இருந்தபடி,'ஹே!'ன்னு கூப்பிட்டார். அப்புறம்,'இப்படி எல்லாரும் உள்ளபோது கக்கூஸுக்கு இறங்கினது சரியா?' என்று கேட்டார். அதில் உம்மாவுக்குக் கோபம். அவ்வளவுதான் நடந்தது" என்றாள்.

உம்மா, ''இனி, போச்சு! இனி எனக்கு யாரும் கதியில்லை, மொய்தீனே!'' என்று அழுதாள்.

''ஏய்! உன்னை என்ன செய்ய வேணும் தெரியுமா? துண்டு துண்டாக வெட்ட வேணும்!'' என்று வாப்பா உம்மாவைப் பார்த்து உறுமினார்.

''அப்படியாவது என்னைக் கொல்லுங்கள். கழுத்தை வெட்டிவிடுங்கள், மொய்தீனே! கழுத்தை வெட்டுங்கள், பதரீகளே! கழுத்தை வெட்டுங்கள். எனக்கு யாரும் இல்லை!'' உம்மா தரையில் விழுந்து புரண்டு அழுதாள். வாப்பா தலையைக் குனிந்துகொண்டு வெளியே போய், நிஸார் அகம்மதிடம் தாழ்மையாக, "நாங்கள் ஏழைகள்! எங்களுக்குக் கதி ஏது?" என்றார்.

"நாங்களும் ஏழைதான். எங்களுக்கும் சொந்தமாக ஓரடி நிலங்கூடக் கிடையாது. நான் உழுது பயிரிட்டுத் தான் ஜீவிக்க வேண்டும்."

"உண்மை. இந்த வீடும் தோட்டமும் எங்கள் சொந்தந்தான். ஆனாலும் எனக்கு ஒரு வழியும் காணோம். நீயே பார்: இந்தத் தோட்டத்தில் எங்காவது மறைவு உண்டா? இந்தப் பக்கங்களில் எல்லாரும் வழக்கமாக வயல்வெளியைப் பார்த்துப் போகிறதுதான். அப்படி நம் பெண்சாதியும் மகளும் போக முடியுமா? நாங்கள் ஒரு காலத்திலே பரம்பரையும் பணமுமாக இருந்தவர்கள். முந்தி நம்மைக் கண்டால் எழுந்து நின்றவன் எல்லாம் இப்போது கண்டாலுங் காணாத மாதிரி கிடக்கிறான். நம் பெண்சாதியும் மகளும் அவர்களைப் போலவா..?"

"வயல்வெளி அதற்கென்று ஏற்படவில்லையே!"

"பின்னே என்ன செய்வது?"

"நான் செய்த மாதிரி செய்வது; அதிகப் பணம் செலவாகாது. ஏழெட்டுத் தென்னோலையும், கொஞ்சம் பனமரத் துண்டும் கயிறும் போதும். ஒரு மண்வெட்டிக்கு ஒரு மணி நேர வேலை. அப்புறம் ஒரு வருஷத்துக்குக் கவலையில்லை: ஏன் இதைச் செய்யக்கூடாது? பெரிய பட்டணமாக இருந்தாலும் இடம் இல்லாத குறை: இங்கே அதுவும் இல்லை. நான் கேட்ட சாமான்களை மாத்திரம் கொண்டுவாருங்கள்; .போதும்."

"அதற்குக் கஷ்டம் இல்லை."

"அப்படியானால் கொண்டு வந்த பிறகு கூப்பிடுங்கள்; வருகிறேன்" என்று சொல்லிவிட்டு நிஸார் அகமது போய்விட்டான். வாப்பாவும் வெளியே போய்விட்டார். உம்மா, உள்ளே படுத்தபடியே அழுதுகொண்டிருந்தாள்.

"நீ என் பெண் அல்லவடி!"

குஞ்சுப்பாத்துமா பதில் சொல்லவில்லை.

"உன்னை நான் பெறவே யில்லை."

மீண்டும் நிச்சபதம்.

"கேடு கெட்டவளே! உன் வாயில் என்ன?"

மறுபடியும் நிச்சப்தம்.

"உன் வாயைத் திறந்து பதில் சொன்னால், உன் கை வளை உடைந்து போகுமா?"

"என் கையில் வளையே இல்லையே உம்மா."

"உனக்கு உன்னுடைய அருமை உம்மா மேலோ அவன்மேலோடி?"

இதற்கு என்ன பதில் சொல்வது?

"நீ ஏன் அவன் பக்கம் சாட்சி சொன்னாய்?"

பதில் இல்லை. உம்மா மேலும், "உன் அருமை உம்மாவுடைய மானம் கப்பலேறினால் பரவாயில்லையா?", என்றாள்.

"என்னால் பொய்ச்சாட்சி சொல்ல முடியாது."

"ஏன் சொல்ல முடியாது? சொன்னால் கழுத்திலே சங்கிலி அறுந்து போகுமா?"

"என் கழுத்திலே சங்கிலியே இல்லை, உம்மா."

"பின்னே சொன்னால் என்ன வந்தது?"

"வாப்பா பட்டாக்கத்தியால் அவர் கழுத்தை வெட்டியிருந்தால்?"

"நமக்கென்ன?"

"அப்புறம் வாப்பாவைப் போலீஸ் பிடித்துக் கொண்டு போய்த் தூக்கு மாட்டினால்?" உம்மா வாரிச் சுருட்டிக்கொண்டு உட்கார்ந்தாள். கொஞ்ச நேரம் ஒன்றுமே பேசவில்லை. பிறகு, "ஆண்டவனே! காப்பாற்றி னாய்!" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு, தன் பெண் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் போனாள்; மகளின் கூந்தலை விரல்களால் கோதிக் கொடுத்தாள்.

"என் கண்ணே! நீ உன் குடும்பத்தைக் காப்பாற்றி னாயடி! ஆமாம்! என் மகளுக்கு என்ன, கொஞ்ச நாளாய் உடம்பு நன்றாக இல்லையே!"

"என் நெஞ்சில் ஒரு வேதனை, உம்மா."

"படைத்தோனே, காப்பாற்று. என் பெண்ணை ஏதோ இப்ரீத்தோ ஜின்னோ பிடித்துக்கொண்டு விட்டதே!"

# 9

# நெஞ்சில் ஒரு வேதனை

தனக்கு என்ன நேர்ந்துவிட்டதென்று குஞ்சுப் பாத்துமாவுக்கே தெரியவில்லை. வாப்பா நிஸ்காரப் பள்ளி 'கத்தீபி'டமிருந்து ஒரு மந்திரித்த சரடு வாங்கிக் கொண்டுவந்து அவளுடைய கழுத்தில் கட்டினார். அது போதாதென்று மந்திரவாதத்தில் பெயர் பெற்ற ஒரு முஸலியார் தயாராக்கிக் கொடுத்த தாயத்து வேறு. அது பார்ப்பதற்கு ஒரு ஸூட்கேஸ் மாதிரி இருக்கும். ஆனால் அவளைப் பிடித்த இப்ரீத் ஒன்றுக்கும் அசைவ தாகக் காணவில்லை.

ஒரு நாள் ஆயிஷா வந்தாள். "காக்கா ஒரு முக்கியமான செய்தி அனுப்பியிருக்கிறான்" என்றாள். குஞ்சுப்பாத்துமா காதைத் தீட்டி விட்டுக்கொண்டாள். கடைசியில் அது வெறும் கேலி. "காக்காவிடம் ஒரு சாமான் இருக்கிறது. அதைக் கொண்டு எப்பேர்ப்பட்ட சைத்தானையும் ஓட்டிவிடலாம். இப்ரீத்தென்றால் தண்ணீர் பட்ட பாடு! சும்மா கழுத்தில் கட்டிக்கொண்டால் போதும். அதென்ன தெரியுமோ? காக்காவுடைய பெரிய டிரங்குப் பெட்டி! என்ன, தூக்கிக்கொண்டு வரட்டுமா?"

"போ, லுட்டாப்பி! உனக்கு எப்போதும் கேலி தான்."

ஆயிஷா இப்போது விளையாடவில்லை. "உனக்கு என்ன செய்கிறதடி?"

"என் நெஞ்சுக்குள்ளே ஒரே வேதனை."

அது சாதாரணமான வேதனை யல்ல. சும்மா வந்து போய்க்கொண் டிருப்பதும் அல்ல. நிறைந்து முற்றிய மனவியாதி. சில சமயங்களில் நன்றாக உட்கார்ந்து அழ

வேண்டுமென்று தோன்றும்: உடனே அடக்க முடியாமல் சிரிப்பும் உல்லாசமும் தோன்றும். அழுகையைக் காட்டிலும் சிரிப்பது நல்லது. அதனால் அவள் சிரிப்பாள். உரக்க அல்ல. மனத்தின் வேதனையை வெளிக்குக் காட்டாத, சோகம் கலந்த சிரிப்பு அது. அடிக்கடி படுக்கையில் கிடந்து தேம்பித் தேம்பி அழுவாள்.

நிஸார் அகம்மதைக் காணும்போதெல்லாம் அவளுடைய கண்கள் ரத்தமேறிச் சிவக்கும். மார்பு படபட வென்று அடித்துக்கொள்ளும். அதோடு, 'என்னை ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்?' என்று கேட்கத் தோன்றும். ஆனால் அவன் பார்த்திருக்கவில்லையென்றால்? அவன் பார்வையில் ஒரு விசேஷம். ஒரு பொருளைக் காணும் போது அதைத்தான் பார்க்கிறான் என்று சொல்ல முடியாது. காணுமற் காணும் கலையில் அவன் நிபுணன். அவன் தன்னைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் அவளுக்கு உள்ளூற உண்டு. அவன் தன்னை எளிதில் காணக் கூடிய இடங்களில் அவள் நிற்பாள். "நான் இங்கே சுள்ளி பொறுக்க அல்லவா வந்திருக்கிறேன்?" என்று தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வாள். ஏதாவது ஒரு சாக்கில் அடிக்கடி அடுத்த வீட்டுக்குப் போவாள். அடுப்புப் பற்ற வைக்கத் தணல் வாங்குவது ஒரு முக்கியமான சாக்கு; உப்பு வாங்குவது அடுத்தபடி. இவை இரண்டும் இல்லையானால் ஆயிஷா இருக்கவே இருக்கிறாள். எந்தக் காரணத்தோடு போனாலும் நிஸார் அகம்மதை நிம்மதியாகக் காண இயலாது. ஒன்று, வீட்டையும் புறத்தையும் அலங்கரித்துக்கொண்டிருப்பான். இல்லாவிட்டால் தோட்டத்தில் தண்ணீர் ஊற்றுவான். முற்றத்தில் இதற்கு மேல் என்ன செய்ய இருக்கிறது? முற்றம் முழுவதும் தங்க மணல் பரப்பியாகி விட்டது. ஓரங்களில் விதவிதமான வர்ணங்களில் பூச் செடிகள் வைத்தாகிவிட்டது. இது ஒன்றும் இல்லாத நேரத்தில் படிப்பு! 'இவர் எதற்காக இவ்வளவு வாசிக்க வேண்டும்?' என்று அவள் தனக்குள் வியந்துகொள்வாள்.

அன்றொரு நாள் நிஸார் அகம்மது ஒன்றும் செய்யாமல் அதிசயமாக ஒரு மரத்தின் கிளையின்மேல் படுத்துக்கொண்டு, ஓய்வெடுத்துக்கொள்வதை அவள் கவனித்தாள். அவன் மடியில் அப்போதும் ஒரு புத்தகம் விரித்தபடி கிடந்தது. ஆனால் அவன் கவனம் அங்கே இல்லை. அவள் நெஞ்சு இளம் சூட்டோடு பாகாய் உருகத் தொடங்கியது. நிஸார் அகம்மதின் கண்கள் வானத்தை நோக்கியபடி இருந்தன. மேற்குத்திசையில் சூரியன் மறைவதற்கு இன்னும் சற்று நேரம் இருந்தது. மேகங்கள் பலபல வர்ணங்களில் ஒளிர்ந்தன. கூடு நோக்கிப் பறந்து செல்லும் பறவைகளின் உடல்களில் அந்த வர்ணங்கள் பட்டுச் சிதறின.

அன்று அவள் வெளுத்த ஆடைகள் உடுத்திருந்தாள். நீண்ட நாளாக உபயோகமின்றிப் பெட்டியில் கிடந்ததால் அவை முடமுடவென்று உடலோடு ஒட்டிக்கொண்டு கிடந்தன. தலையில் ஓர் அழகிய முட்டாக்குத் துணி. எதற்காக இவ்வளவு அலங்காரம் என்று அவளே வியந்துகொண்டாள். கண்ணாடியில் தெரிந்த தன் பிரதி பிம்பத்தைப் பார்த்தபடியே வெகு நேரம் மனோராஜ்யம் செய்துகொண்டிருந்தாள். அவளுடைய கறுத்த மறு, சாந்துப்பொட்டைப்போலப் பிரகாசித்தது. அவளுடைய மருண்ட இரு விழிகள் கண்ணாடியில் அவளைக் கேலி செய்தன. ஒரே சமயத்தில் சிரிப்பும் அழுகையும் பொங்கிக்கொண்டு வந்தன. முகத்தைத் துடைத்துக்கொண்டு, அவள் பக்கத்து வீட்டை நோக்கி நடந்தாள். அவளுடைய இருதயம் படபடவென்று துடிக்கத் தொடங்கியது. நிஸார் அகம்மதின் பிரியங் கலந்த பார்வை அவள்மீது லயித்திருந்தது.

அவள் உள்ளே போய்க் கரண்டியில் தணல் வாங்கிக்கொண்டாள். ஆனால் வழக்கம்போல ஆயிஷாவுடனோ அவளுடைய தாயுடனோ வார்த்தை பேசிக்கொண்டிருக்கவில்லை. உடனே திரும்பிவிட்டாள். வரும் வழியில் நிஸார் அகம்மது, ''கொஞ்சம் நில்!'' என்றான்.

அந்தக் குரலின் மூலம் அவளுடைய அந்தராத்மாவுக்குள் ஒரு மின்னல் பாய்ந்துவிட்டதோ என்று தோன்றியது. அதன்பின் அவளால் ஓரடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. அந்த ஒரு கணத்தில் நாணமும் அச்சமும் ஆச்சரியமும் ஆனந்தமும் எல்லாம் ஒருங்கே கலந்து அவளைத் தாக்கின, அவள் தன் மருண்ட விழிகளால் அவனை நோக்கினாள். நிஸார் அகம்மது, "எனக்குக் கொஞ்சம் தணல் வேண்டுமே!'' என்று அவளிடமிருந்து கரண்டியை வாங்கி ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான்.

''குஞ்சுப்பாத்துமா! நம்முடைய அந்தக் குருவி இருக்கிறது பார்? அது என்னிடம் வந்து, 'குஞ்சுப்பாத்துமா சௌக்கியமா?' என்று விசாரிக்கிறது. நான், 'ஏதோ ஓர் இபிலீஸை விரட்டுவதற்காக அவள் ஒரு ஸூட்கேஸைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு நடமாடுகிறாள்' என்று சொன்னேன். நான் சொன்னது சரிதானே?''

"கரண்டியைக் கொடுங்கள்.''

"குஞ்சுப்பாத்துமா!''

"ம்ம்....ம்.''

உனக்கென்ன உடம்பு?''

என் நெஞ்சில் வேதனை.''

"அதற்கு அந்த ஸூட்கேஸைக் கழுத்தில் மாட்டிக் கொண்டால் சரியாகிவிடுமா?''

"கரண்டியைக் கொடுங்களேன்.''

"நீ எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளவில்லையா?''

"எனக்குப் படிப்புச் சொல்லித்தரவில்லை.''

"நாளை முதல் ஆயிஷாவிடம் உனக்குப் படிப்புச் சொல்லித்தரச் சொல்லு. என்ன, சொல்வாயா?''

"என்னை லுட்டாப்பி கேலி பண்ணுவாளே.''

"அவள் உன்னைக் கேலி பண்ணினால் அவளை நான் என்ன செய்வேன், தெரியுமா? அவளை அப்படியே இரண்டாயிரம் துண்டாக....''

"வேண்டாம்! லுட்டாப்பியை ஒன்றும் செய்யாதீர்கள். கரண்டியைக் கொடுங்களேன்."

"சரி, நான் அவளிடம் சொல்கிறேன். சரிதானே?"

அவள் ஒருவிதமாகக் கரண்டியைத் திருப்பி வாங்கிக் கொண்டு நிலைமையைச் சமாளித்துக்கொண்டாள். அவளுக்கு அங்கிருந்து பறந்து ஓடவேண்டுமென்று தோன்றியது. ஆனால் நிதானமாகத்தான் நடந்து சென்றாள். உலகமே ஒரு புதிய ஒளி பெற்று நின்றது. எங்கும் அழகு கொஞ்சியது. எங்கும் அன்பும் ஆதாவும் நிரம்பியிருந்தன. ஒரு கட்டெறும்பு அவளைக் கடித்தது. அதைத் தழுவுவது மாதிரி எடுத்து அந்தப் பக்கம் விட்டு விட்டாள். அந்த இரவுக்குத்தான் எத்தனை அழகு! பக்கத்தில் உம்மாவும் வாப்பாவும் போட்டி போட்டுக் கொண்டு குறட்டை விட்டார்கள். குஞ்சுப்பாத்துமாவுக்கு மட்டும் ஏனோ உறக்கம் வரவில்லை. அவள் மனம் முழுவதையும் நிஸார் அகம்மது வியாபித்துக்கொண்டிருந்தான். அவளுடைய முகத்தில் ஓர் இளநகை; அவளை எப்பேர்ப்பட்ட இக்கட்டில் கொண்டு நிறுத்திவிட்டான்! பொய்க் கோபத்துடன் அவள் தலையணையைக் கிள்ளினாள்; 'வலிக்கிறதா?' இந்தக் கேள்வியோடு அவள் கண்கள் நிறைந்துவிட்டன. சற்று நேரத்துக்கெல்லாம் அந்த வீட்டில் யாரும் விழித்திருக்க வில்லை.

அடுத்த நாள் உச்சிவேளையில் குஞ்சுப்பாத்துமா வழக்கம்போலச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு புழைக்கடைப் பக்கம் வந்தாள். புளியமரத்தடியில் ஒரு கையில் சில புத்தகங்களும் மற்றொரு கையில் பிரம்புமாக ஆயிஷா நின்றாள். அவள் நின்ற மிடுக்கைப் பார்க்க வேண்டுமே! தோழி, அருகில் வந்ததும் ஆயிஷா பிரம்பினால் தரையில் ஒரு கோடு கிழித்தாள். "இந்த வரியின் மேல் நில்."

"ஏதுக்கு?" என்று கேட்டுக்கொண்டே குஞ்சுப்பாத்துமா நின்றாள்.

"வலக் கையை நீட்டு."

"ஏன்? என்னை அடிக்கப் போகிறாயா?"

"நீட்டு!"

குஞ்சுப்பாத்துமா கையை நீட்டினாள்: நீட்டிய கையின் மேல் ஒரு நோட்டுப் புத்தகத்தையும், பால பாடத்தையும், பென்ஸிலையும் வைத்தாள் ஆயிஷா. "நான் யார் தெரியுமா? இனிமேல் உன்னுடைய குரு! தெரிந்து கொள்!" குஞ்சுப்பாத்துமா சிரித்தாள். "எனக்குத் தெரியாத ஒரு ரகசியங்கூட என் சிஷ்யைக்கு இருக்கக் கூடாது. எல்லாவற்றையும் திறந்து சொல்லிவிட வேண்டியது. அதற்கப்புறந்தான் படிப்புச் சொல்லிக் கொடுக்கப்படும். என்ன?..சரி, இப்போது சொல்: என் அண்ணனாகிய அந்த மகானுக்கும் தங்களுக்கும் இடையே..என்ன சமாசாரம்?"

"சும்மா இரு, லுட்டாப்பி!"

"சொல்லப் போகிறாயா? இல்லை, அடிவேணுமா? அப்புறம் உன்னை நான் நாலாயிரம் துண்டாக வெட்டிப் போட்டுவிடுவேன், ஜாக்கிரதை!"

"போ, லுட்டாப்பி!"

"சொல்லமாட்டாய்?"

"என்னத்தைச் சொல்கிறது?"

"அதுதான், எங்கள் காக்காவுக்கும் உனக்கும் நடுவில்..?"

"ஊஹூம்!..நீ சும்மா இருக்கமாட்டாய்?"

ஆயிஷா சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை, அப்புறம். "ஏனடி! உனக்கு டான்ஸ் ஆடத் தெரியுமா?" என்றாள்.

"எனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது."

"அப்புறம் க்ஷவரம், சமையல், சித்திரம் எழுதுதல், துணி தோய்ப்பது எல்லாம் தெரியுமா?"

"சும்மா இரு, லுட்டாப்பி! கேலி பண்ணாதே; நீதான் எனக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்தால் என்ன?"

"ஓஹோ; அப்படி வா வழிக்கு! கேட்டுக்கொள்

முதல் பாடத்தை. இந்தத் துனியாவில் புருஷர்களைப் போலக் கண்கட்டு வித்தைக்காரர்கள் வேறு யாரும் கிடையாது."

"உனக்கு எப்பொழுதும் கேலிதான். அப்படி யெல்லாம் சொல்லாதே." இப்போது குஞ்சுப்பாத்துமா வுக்கு ஆயிஷாவின் கவனத்தை வேறு வழியில் திருப்ப ஒரு விஷயம் கிடைத்தது. செத்துப்போன ஓர் ஈயை இரண்டு மூன்று எறும்புகள் இழுத்துக்கொண் டிருந்தன. "லுட்டாப்பி. இதோ பார்த்தாயா? இப்போது ஷஜரத்துல் முத்தாஹாவின் ஒரு சின்ன இலை விழுந் திருக்கும்; இல்லையா?"

"போடி முட்டாள்! இப்போது நாம் ஒரு பெரிய விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண் டிருக்கிறபோது இப்படி அசடு மாதிரி அலட்டுகிருயே? சரி, இப்போது நான் உனக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டுமா, வேண்டாமா?"

"ஆமாம், படிக்கவேணும்."

"சரி, அப்படியானல் நான் கேட்கிறதற்குச் சரி யான பதில் சொல்ல வேண்டும். உனக்குக் காக்காவை எப்படித் தெரியும்?"

"எனக்கு எழுத்துச் சொல்லிக்கொடேன்."

"நீயும் நானுந்தானே முதலில் சிநேகமானது?"

"இல்லை, லுட்டாப்பி."

"என்னது?" ஆயிஷாவுக்கு ஒரே அதிசயம்; "என் ேைடு முதலில் இல்லையா?"

"இல்லை."

"அதென்ன கதை? சொல், கேட்போம்."

"நீங்கள் எல்லாம் வருகிறதுக்கு முந்தி ஒரு நாள் நான் உங்கள் வீட்டுக் கிணற்றிலே குளிக்க வந்தேன். அப்போது புளியமரத்திலே ஓர் ஆண்குருவி பெண்குருவி யைக் கொல்ல வந்தது. பெண்குருவி, அடிபட்டு, வெள்ள வாரியிலே விழுந்தது. அதை எடுக்கப்போன நானும் விழுந்துவிட்டேன். என் கையெல்லாம் அடிபட்டு ஒரே

ரத்தமாக வந்தது. அதில் கொஞ்சம் ரத்தம் அந்தக் குருவிக்குக்கூடக் கொடுத்தேன். அது கர்ப்பமாக இருந்தது. அப்போது, லுட்டாப்பியுடைய காக்கா...."

"யார், காக்காவா?"

"ஆமாம், அவர் அங்கே இருந்தார். இறங்கி வந்து, என் கைக்குக் கட்டுக் கட்டினார். நான் கரையேறி வந்து குளிக்கும்போது நனைக்க வேண்டாமென்று சொன்னார்."

"அந்தக் குருவி என்ன ஆச்சு?"

"அது பாட்டுக்குப் பறந்து போய்விட்டது!"

"அடேயப்பா!" ஆயிஷா தனக்குத் தானே, "இது தானா நீ செய்த வீரதீர பராக்கிரமம்!" என்று சொல்லிக் கொண்டாள்.

"ஏன், லுட்டாப்பி?"

"ஒன்றும் இல்லையடி யம்மா! இந்த ஆண் பிள்ளைகள் எல்லாம் கண்கட்டு வித்தைக்காரர்கள்."

"அப்படியெல்லாம் சொல்லக்கூடாது, லுட்டாப்பி."

"ஆமாம். சொல்லக்கூடாதுதான். சொன்னால் நீ என்னை அடிக்கக்கூட வருவாய். அப்படியும் நடக்கும். அப்புறம், 'அடிவாங்கிய ஆயிஷா பீபி அப்போது மந்த காச வதனத்தோடு காணப்பட்டாள் என்று உலகம் சொல்லும்!"

"இதெல்லாம் என்ன பேச்சு, லுட்டாப்பி?"

"சரி, சரி. நான் படிப்புச் சொல்லிக்கொடுக்கப் போகிறேன். கவனமாய்க் கேள்." ஆயிஷா மண்ணின் மேல், 'அ' என்று எழுதினாள். "இதோ பார். இதுதான் 'அ'னா. காக்காவுடைய பேரின் முதல் எழுத்து. இந்த ஜாதி எழுத்து இந்தப் புத்தகத்தில் இருக்கிறதா, கண்டு பிடி" என்று உத்தரவு இட்டுவிட்டு ஆயிஷா புல்தரையில் மல்லாந்து படுத்துக்கொண்டாள். குஞ்சுப்பாத்துமா புத்தகம் முழுவதும் தேடினாள். பிறகு அவளே அதிலிருந்து கண்டு பிடிக்கவும் பிடித்தாள்.

குஞ்சுப்பாத்துமாவின் அட்சராப்பியாசம் இப்படியாக ஆரம்பமாயிற்று. அவள் ராத்திரியும் பகலும் விழுந்து விழுந்து படித்தாள். வாப்பாவுக்கும் உம்மாவுக்கும் அவள் படிப்பதைப்பற்றி ஒன்றும் தெரியாது. உம்மாவுக்குத் தெரிந்தால் சத்தம் போடுவாள். உம்மாவுக்கு இப்போதெல்லாம் ஆண்டவன்மேல் பக்தி அதிகமாகிவிட்டது. எப்போது பார்த்தாலும் பிரார்த்தனையும் நேர்ச்சையுந்தான். தொழுகைப் பாயிலிருந்து எழுந்திருப்பதே இல்லை. குஞ்சுப்பாத்துமாதான் வீட்டுக் காரியத்தையும் பார்த்துக்கொண்டு, படிக்கவும் வேண்டும். அவளுக்குப் படித்ததிலெல்லாம் சந்தேகம். உடனுக்குடன் பக்கத்து வீட்டுக்குப் போய்த் தீர்த்துக்கொள்ள வேண்டும். அங்கே போகும்போதெல்லாம் அவளுடைய உடல் ஓர் அசாதாரண ஒளியுடன் மின்னும்.

ஒரு நாள் ஆயிஷாவின் உம்மா அவளிடம் ஏதோ ஒரு குருவியைப்பற்றி விசாரித்தாள். குஞ்சுப்பாத்துமாவின் முகத்தில் ரத்தம் ஜிவ்வென்று ஏறியது. ஆயிஷா, ''முகம் சிவக்கிறதைப் பார்'' என்று கேலி செய்தாள். குஞ்சுப்பாத்துமாவுக்கு அழுகையாக வந்தது. ஆயிஷாவின் உம்மா சிரித்துக்கொண்டே அவள் தலையை வருடினாள். ''நீ தலையை வாரிக்கொள்கிறதில்லையா?'' என்று கேட்டாள்.

''தலையை வாரிக்கொண்டால் காபிரிச்சி ஆகிவிடுவேன் என்கிறாள் உம்மா.''

ஆயிஷாவின் தாய் சிரித்தாள். பின்பு ஒரு சீப்பை எடுத்துக் குஞ்சுப்பாத்துமாவின் தலைக்கு நடுவே வகிடெடுத்து நன்றாக இழுத்து வாரிப் பின்னிக் கட்டிவிட்டாள். ஆயிஷா, தோட்டத்திலிருந்து கை நிறைய முல்லைப் பூக்களைப் பறித்துக்கொண்டு வந்து சரமாகக் கட்டி அவள் தலையில் சூட்டினாள். "இப்போது தலையில் இபிலீஸ் வந்து உட்கார்ந்துகொண்டால்.." அவளுக்கு இன்னும் சந்தேகந்தான். "என்ன செய்வதென்று உன் குருவியிடம் கேள்" என்று ஆயிஷா பதில் சொன்னாள்.

சொல்ல முடியாத நாணத்தோடும் இன்பத்தோடும் குஞ்சுப்பாத்துமா வீடு திரும்பினாள்.

உம்மா எடுத்தவுடனேயே கேட்டுவிட்டாள்: "இதென்னடி இது? உன் தலையில் என்ன?" குஞ்சுப் பாத்துமா மௌனம் சாதித்தாள். உம்மா எழுந்து அவள் கூந்தலைப் பிரித்துவிட்டுப் பூக்களை எடுத்தெறிந்தாள். "அவர்கள் எக்கேடு கெட்டுப்போனாலும் நீயும் அவர்களோடு கெட வேண்டியதில்லை. அந்தக் குட்டியுடைய தாத்தா ஒரு காளை வண்டிக்காரன்! நீ யானை மக்காருடைய அருமைப் பெண்ணுடைய அருமந்தப் பெண்ணடி! உங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்ததடி, யானை!"

அன்றே குஞ்சுப்பாத்துமா இன்னொரு விஷயமும் தெரிந்துகொண்டாள். அவளுடைய விவாகம் இதோ நெருங்கிவிட்டது. வாப்பா மாப்பிள்ளை பார்த்துக்கொண்டிருக்கிறார். அவள் நடுங்கினாள். அவளுடைய நாக்கு உலர்ந்து ஒட்டிக்கொண்டது. அவள் பதறிப்போய்க் கல்லாய்ச் சமைந்து நின்றாள். "இனிமேல் என் உத்தரவில்லாமல் இந்த வீட்டு எல்லையைத் தாண்டி, நீ வெளியிலே போகப்படாது. ஜாக்கிரதை!" அவளுடைய கண்கள் இருண்டன. காது பக்கென்று அடைத்துப் போயிற்று. "ஐயோ! ஆண்டவனே;" அவள் மூர்ச்சித்து விழுந்துவிட்டாள்.

"மொய்தீனே! மூத்த நபியே! என் கண்ணான பெண்ணுக்குக் கேடு வந்துவிட்டதே!" என்று உம்மா ஓடிவந்து தாங்கிக்கொண்டாள். வாப்பா முகத்தில் தண்ணீரை அடித்து, விசிறியால் வீசினார். ஒரே அமர்க்களம்! குஞ்சுப்பாத்துமா கண் விழித்தாள். வாப்பாவையும் உம்மாவையும் கண்ணிமைக்காமல் நோக்கியபடியே இருந்தாள். அவளுடன் கலந்துகொள்ளாமல் அவளுடைய விருப்பம் என்னவென்று தெரிந்துகொள்ளாமல் அவளுக்கு ஒரு கணவனைத் தேர்ந்தெடுத்தாகி விட்டது. "மகளே, உனக்கு என்னம்மா செய்கிறது?" - வாப்பாவின்

கவலை தோய்ந்த குரல். "என் கண்மணிக்கு என்ன கேடு?" உம்மாவின் கேள்வி. இரண்டுக்கும் பதில் இல்லை.

"மொய்தீனே! என் பெண்ணைச் சைத்தான் பிடித்துக்கொண்டானே!"

குஞ்சுப்பாத்துமா கடகடவென்று சிரித்தாள். சிரித்துக்கொண்டே இருந்தாள். பின்பு அழுதாள். வெந்து நீறுகிய அந்த நெஞ்சிலிருந்து வந்த அழுகை நிற்கவே இல்லை. அகாலமான இரவில் மற்ற எல்லாரும் நித்திரையில் ஆழ்ந்திருக்கும்போதுகூட அந்த அழுகை ஓயவில்லை. 'படுக்கையில் கிடந்தபடியே சாளரங்களின் வழியாக ஆகாயத்தில் மின்னிய நட்சத்திரங்களைக் கண்டாள். வானம் ஒரு பயங்கரமான சிலந்தி வலை. நட்சத்திரங்கள் அதனுள் அகப்பட்டுக்கொண்டு துடிக்கும் ஜீவன்கள்!

# 10

## கனவுகளின் காலம்

இரவும் பகலும் ஒன்றை ஒன்று தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. குஞ்சுப்பாத்துமாவுக்கு அது ஒன்றும் தெரியாது. ஊண் உறக்கம் ஒன்றும் இல்லை. அவள் ஏதோ சொப்பனம் காண்கிறாள். யார் யாரோ வருகிறார்கள். என்னவெல்லாமோ கேட்கிறார்கள். அவள் விழித்துக்கொண்டிருக்கிறாளா, இல்லை, தூங்குகிறாளா? திருப்பித் திருப்பி ஒரே கேள்வி. அவள் அதற்குப் பதில் சொன்னாள். பின்பும் அதே கேள்வி. அவள் மனம் நொந்து உரக்கக் கத்தினாள். "லுட்டாப்பி, என்னைக் கட்டிக் கொடுக்கப் போகிறார்கள்!" அவளுடைய கண்ணீர் சமுத்திரம் மாதிரி பெருகிக் கிடந்தது. அவள் அதில் மூழ்கிக் கிடக்கிறாள். இருண்டு கிடந்த உலகில் ஒரு மூலையில் செந்தீப் பிழம்பு ஒன்று தோன்றியது. ஒரு வேளை சூரியோதயம் ஆகி யிருக்குமோ? ஆனால் பட்சி ஜாலங்களின் சலசலப்பைக் காணோமே! ஏதோ பேச்சுக் குரல் கேட்கிறதே? ஆம், உம்மாவும் வாப்பாவும் பேசுகிறார்கள். அவர்களுடன் வேறு யாரோ ஓர் ஆள். ஆ! அவள் கண்டது சூரியோதம் அல்ல! முற்றத்தில் ஒரு குழியில் நெருப்பு வளர்த்திருக்கிறது. அதைச் சுற்றிலும் அகல் விளக்குகள். குஞ்சுப்பாத்துமாவை அதற்குமுன் ஒரு விசுப்பலகையில் உட்கார்த்தி வைத்திருக்கிறார்கள். அடுத்தாற்போலவே கையில் நீண்ட பிரம்புடன் கூடிய ஒரு மனிதன்! அவன்தான் பிசாசு ஓட்டும் முஸலியார்!

குஞ்சுப்பாத்துமாவுக்கு வாழ்க்கையில் முதல் தடவையாகக் கோபம் பொங்கி வந்தது. அதற்கு ஓர் அளவே இல்லை. அவளுக்கு யானையைப்போல அட்டகாசம் செய்ய வேண்டுமென்று தோன்றியது. அங்கும்

இங்கும் பாய்ந்து ஓடி, எல்லாவற்றையும் ஒரே குதருகக் குதறிவிட்டால் என்ன? நல்ல வாசனை வீகியது. முஸலியார் அவளுக்குத் திருஷ்டி சுற்றிப் போடுகிருர். நெருப்பில் என்னவெல்லாமோ பொருள்கள் எரிகின்றன; சாம்பிராணி, சந்தனம், கர்ப்பூரம் இன்னும் என்னவெல்லாமோ. "ஸுஹ், பல்ஹூல்!" என்று எல்லாம் மந்திரோச்சாடனங்கள். முஸலியாரின் பிரம்பு, பெயர் பெற்றது. எத்தனையோ இப்ரீத், ஜின், ரூஹானி இப்படிப் பூதங்களையும் பிசாசுகளையும் விரட்டியடித்துப் பெயர் வாங்கிய தாயிற்றே! அதைக்கொண்டு அவளை அடிப்பார்; தலை முடியைப் பிடித்துக்கொண்டு முதுகிலும் துடையிலும் அடிப்பார். அடித்து அடித்துத்தானே சைத்தானை விரட்ட வேண்டும்? அப்படியும் போகாமல் முரண்டு பண்ணிஞல் மிளகாய்ப் பழத்தை அரைத்துக் கண்ணில் தேய்ப்பார். நெருப்புக் கனலை உள்ளங்கையில் வைப்பார். 'ஸ்' என்று தோல் வேகும். தலை முதல் கால்வரையில் வேதனை எடுக்கும். எடுக்கட்டுமே? பரவாயில்லை! உம்மாவும் வாப்பாவும் அநுமதித்திருக்கிருர்கள்.

"வாப்பா! என்னை அடிக்க வேண்டாமென்று சொல்லுங்களேன்."

முஸலியார் ஒன்றும் சொல்லவில்லை. வாப்பாவும் உம்மாவும் வாயைத் திறக்கவில்லை. "லுட்டாப்பி! என்னை அடிக்கப் போகிருர்கள் என்று சொல்லேன்." இது அவளுடைய மனத்துக்குள் பேசிக்கொண்டது. யாரோடு முறையிடுவதற்காக ஆயிஷாவிடம் சொல்ல வேண்டும்? முஸலியார் கேள்வி கேட்கிருர்; "உம்! சொல்லு. யார் நீ, பிடித்திருக்கிருய்? சொல்லு!" என்கிருர்.

அதற்குப் பதில் இல்லை என்று கண்டதும் பிரம்பு பேசியது. அதற்குப் பின் என்ன நடந்ததென்று அவளுக்குத் தெரியாது. முஸலியார் பத்துப் பன்னிரண்டு தரம் பிரம்பால் அடித்தார். அவள் வாய்விட்டு அழுதாள் பிறகு அவள் பிரம்பைப் பிடித்து ஒடித்து நெருப்பில் வீசியது ஞாபகம் இருக்கிறது. எங்கேனும் ஓடிப்போய்

விட வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் ஓடவில்லை. அக்கினி ஜ்வாலை வீசுகிற மாதிரி கடுங் கோபத்தோடு அங்கே நிஸார் அகம்மது நின்றான்.

நிஸார் அகம்மது தானாக அவளைச் சேர்த்து வாரி யணைத்தானோ, இல்லை, அவளாக அவனருகே ஓடிப்போய் நின்றாளோ? எதானாலும், அவன் அவளை வாரிச் சுருட்டிக் கொண்டு வராந்தாவில் ஏறி, வீட்டுக்குள்ளே பாயில் கிடத்தினான். அதற்குப் பின் அவள் கண் திறந்தபோது நடுப்பகல். அடுத்தாற்போல் ஆயிஷாவும் அவளுடைய உம்மாவும் உட்கார்ந்திருந்தார்கள். அவளுடைய உம்மா ஏதோ மருந்தை அரைத்துக்கொண்டு வந்து, நெற்றியில் தடவினாள். நல்ல குளிர்ச்சி. அவளுடைய மூச்சு அவ ளுக்கே நெருப்பு மாதிரி தோன்றியது. வாப்பா அறைக் குள் வருகிறார். ஆயிஷாவும் அவள் தாயும் எழுந்து போனார்கள். "மகளே, கஞ்சி குடிக்கிறாயா?" அவளுக்கு ஒன்றும் வேண்டாம். அவளுக்குப் பசியோ தாகமோ ஒன்றும் இல்லை.

"எத்தனை நாளாயிற்றம்மா? நீ ஒன்றும் குடிக்கா மல்.." வாப்பா வருத்தப்பட்டுக்கொண்டார். எதற்காக அவர் வருத்தப்பட வேண்டும்? அவள் செத்துப்போகப் போகிறாள். காற்று வீசத் தொடங்கிவிட்டது. கிளைகள் ஒன்றோடு ஒன்று அடித்துக்கொள்கின்றன. இலைகள் இப் போது விழத் தொடங்கிவிடும். இனி நிஜமாகவே உலகம் அழியத்தான் போகிறது. இஸ்ராபீல் தேவதூதன் ஸூர் துந்துபியை எடுத்து ஊதிவிடுவான். இனி மரங்கள் மலை கள் எல்லாம் தவிடுபொடியாக வேண்டியதுதான் பாக்கி.

மழை பெய்கிறது. புது மண்ணின் மணம் வீசுகிறது. வெளியே யாரோ சிரித்துப் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் அறைக்குள்ளே ஒன்றும் கேட்காது; தெரியவும் தெரியாது. அவளால் ஓர் இம்மியளவுகூட நகர முடிய வில்லை. யாரோ அவளை அங்கம் அங்கமாக வெட்டிப் போடுவது மாதிரி வலி. ஒரு வேளை அவளைத் துண்டு துண்டாக வெட்டிக் கிளிகளுக்குப் போட்டு விடுவார்

களோ? அவை அவற்றை அப்படியே விழுங்கித் தின்று விட்டு ஓடிப் போய்விடுமே.

"குஞ்சுப்பாத்துமா?" யாரது? அவளுக்கு அதிசயம் தோன்றியது. நிஸார் அகம்மதின் வாப்பா! "ஏன், இந்த மாதிரி காற்றும் வெளிச்சமும் வராமல் அடைத்து வைத்திருக்கிறீர்கள்? அந்த ஜன்னலைக் கொஞ்சம் திறவுங்கள்" என்றார்.

"ஜன்னல் திறந்தது. ஒளி அவள் கண்ணைப் பறித்தது. அவர் அவளுடைய வாப்பாவோடு ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார். என்ன பேசுகிறார்களோ? கண்களைத் திறந்து பார்ப்பதற்குக்கூட அசதி. உறக்கம் ஒரு பெரிய கடல். அவள் அதில் ஆழ்ந்து போனாள். ஒரு கனவு: அவள் ஒரு பெரிய மரமாக மாறியிருக்கிறாள். ரோமங்கள் எல்லாம் வேர்கள். கைகால்கள் மரத்தின் கிளைகள். மரம் முழுவதும் பூக்களும் இலைகளும். அதில் இரண்டு பட்சிகள் கூடுகட்டப் போகின்றன. அவை என்ன பட்சிகள்?

"குஞ்சுப்பாத்துமா!" - யாரோ அவளைப் பிடித்துக் குலுக்கி எழுப்புகிறார்கள். யாரது? ஏதோ பழக்கப்பட்ட குரல் மாதிரி இருக்கிறதே? அசதியோடு அவள் கண்ணைத் திறந்தாள்—ஓ! நிஸார் அகம்மது! "கொஞ்சம் எழுந்திருந்து இதைக் குடி. கொஞ்சம் கசக்கும். ஆனாலும் இனிப்பென்று வைத்துக்கொள்."

மருந்து வேண்டாமென்று சொல்லத் தோன்றியது. அதற்குள் அவன் அவளைத் தாங்கிப் பிடித்து உட்கார்த்தி வைத்தாயிற்று. ஒரு பீங்கான் கிண்ணத்தில் கறுப்பாக ஏதோ மருந்து. அவன் என்ன என்னவோ சொல்லிக் கொண்டிருந்தான். அதற்கு அவள் பதில் சொல்லக்கூடவில்லை. அதற்குள் அவன் போய்விட்டான். உம்மா கஞ்சிப் பாத்திரத்துடன் வந்து நின்றாள்.

"ஆயிஷாவின் உம்மா கட்டுகிறமாதிரி தலையைக் கட்டித் தரட்டுமா?" - இதை உம்மாவா கேட்கிறாள்!

"நான் செத்துப் போகப் போகிறேன்."

"என் கண்ணுனை பெண் அல்லவா? அப்படிச் சொல்லாதே. உன் நிக்காஹெல்லாம் நிச்சயம் பண்ணியாச்சடி."

"எனக்கு இப்போது நிக்காஹ் வேண்டாம். நான் சாகப் போகிறேன்."

"ஏ முட்டாள்! நான் பிழைக்கப் போகிறேன் என்று சொல்." சிரித்துக்கொண்டே ஆயிஷா உள்ளே வந்தாள்; "மருந்து இனித்ததா?" என்று கேட்டாள்.

"போ, லுட்டாப்பி!"

"ஆமாம். எங்கள் குஞ்சுப்பாத்துமா ஓர் ஆள் மருந்து கொடுத்தால் மாத்திரந்தான் சாப்பிடுவாள்."

"சும்மா இரு, லுட்டாப்பி." அவள் அப்படியே கிடந்தாள். நெஞ்சில் தேன் ஊறியது. எங்கும் ஒரே இனிப்பு. ருசியும் பசியும் தாகமும் எல்லாம் உண்டாயின. இனி அவள் யாருடைய உதவியுமின்றி எழுந்திருக்கலாம். மெதுவாக நடக்கலாம். ஆயிஷா, "இந்தக் கள்ளியை யார் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறார்கள், தெரியுமா?" என்று கேட்டாள்.

"சும்மா இரேன், லுட்டாப்பி."

# 11

# புதிய தலைமுறை பேசுகிறது

அவர்கள் விவாகம் ஒரு நாள் ராத்திரி நடந்தது. மாலையில் பள்ளிவாசல் கத்தீபை அழைத்து வருவதற்காக வாப்பா போயிருந்தார். நிக்காஹைப்பற்றி ஊருக்கெல்லாம் அறிவித்திருந்தார்கள். ஆனால் விருந்துக்கு அதிக ஆட்கள் இல்லை. கோலாகலம் ஒன்றும் இல்லை. நிஸார் அகம்மதின் வீட்டார் அதெல்லாம் வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஏழெட்டுப் பேருக்கு மாத்திரம் புலவு தயாரித்தார்கள். மணப் பெண்ணின் கூறைச் செலவு வரையில் பிள்ளை வீட்டாருடையதுதான். என்னவெல்லாம் வாங்கியிருக்கிறார்கள் என்று குஞ்சுப்பாத்துமாவுக்குத் தெரியாது.

சீக்கிரமாய்க் குளித்துவிட்டுத் தயாராக இருக்க வேண்டுமென்று ஆயிஷா சொல்லிவிட்டுப் போனாள். அது கழிந்ததும் அவள் திரும்பியும் வந்து அழைத்துக் கொண்டு போனாள். வீட்டுக்குத் திரும்பி வந்தாள். இப்போது வெளியே போனாளே அந்தக் குஞ்சுப்பாத்துமா அல்ல. அவள் பாவாடை, ப்ளவுஸ், பாடிஸ், பச்சை ஸாரி இன்னும் என்னவெல்லாமோ அணிந்திருந்தாள். தலை நேர்த்தியாக வாரி விடப்பட்டுப் பூச்சூட்டியிருந்தது. புடைவைத் தலைப்பால் தலையை முட்டாக்கிட்டிருந்தது. இதெல்லாம் போதாதென்று காலில் செருப்பு வேறு. நூறு தரம் அறைக்குள் அவளை அங்கும் இங்கும் நடத்தி, நடை பழக்கிக் கொடுத்துத்தான் அவளை வெளியே அனுப்பினார்கள்.

"குனியாதே, நேராக நிமிர்ந்து தைரியமாக நட" என்று நிஸார் அகம்மது தைரியம் சொல்லித்தான் அனுப்பினான். வெளியே வந்த குஞ்சுப்பாத்துமா ரத்தி

னம் மாதிரி ஒளி வீசினாள். அவளுடைய கறுத்த மறு மின்னியது. அந்த அற்புதத்தைக் காண அங்கே ஒரு கூட்டம் சிறு பிள்ளைகள் நின்றுகொண்டிருந்தார்கள். உம்மா, வீட்டு முற்றத்தினருகில் நின்றாள். அங்கே ஒரு ரகளை நடந்திருந்த சின்னங்கள் காணப்பட்டன. ஏதேதோ வார்த்தைகள் அவள் காதிலும் விழுந்தன. ஆனால் அவளுக்கு ஒன்றும் சரியாகப் புரியவில்லை. உம்மாவுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் வாக்குவாதம்.

"என்னடா பிசாசுகளே!"

குஞ்சுப்பாத்துமாக்களும் குஞ்சுத்தாச்சுமாக்களும் அடிமைகளும் அடங்கிய அந்தப் பிள்ளைகள், "குளுகுளு" என்று சிரித்தன.

"சைத்தான்கள் என்ன சொல்கின்றன?"

பிள்ளைகள் மேலும், "லுல்லுல்லு" என்றன. உம்மாவுக்குக் கோபம் வரத் தொடங்கிவிட்டது.

"உங்களைப் பாம்பு பிடுங்க."

"மெம் மெம் மே."

"பன்றிகளே."

"பெப்பே பெப்பே!"

"உங்களை உலக்கையெடுத்து அடிப்பேன்."

குஞ்சுப்பாத்துமா தூரத்திலிருந்தே, "சும்மா இரும்மா. நீ ஏதாவது சொன்னால் அவர்கள் வாப்பாமார்களெல்லாம் வந்துவிடுவார்கள்" என்றாள்.

"வரட்டுமேடி!" உம்மா உச்சஸ்வரத்தில் நாடெல்லாம் கேட்கும்படி இரைந்தாள். "உன்னை அவர்கள் கொஞ்சம் பார்க்கட்டும். யானை மக்காருடைய அருமைப் பெண்ணின் அருமந்தப் பெண்ணை அவர்கள் பார்க்கட்டும். உங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்ததடி! பெரிய கொம்பனானை!"

"அது கொம்பனானை இல்லை! குழியானை யாக்கும்! குழியானை!" என்று மூக்குச்சளி வழிய, சொறிசிரங்கு பிடித்த கைகளோடு நிற்கும் ஒரு வாண்டு சொல்லிற்று: "குழியானை! குழியானை!"

குஞ்சுத்தாச்சுமா அதை எப்படிச் சகிப்பாள்? அதிவீர பராக்கிரமசாலியான சாட்சாத் யானைமக்காரின் சொத்தும், நாலு காபிர்களைக் கொன்ற சரித்திரமும் உள்ள அந்த யானை எங்கே? முற்றத்துச் சுவரில் குழியிடுக்குகளில் புதைந்துகொண் டிருக்கும் சிறிய குழியானை எங்கே? "யானை மக்காருடைய யானை குழியானை!.... குழியானை!.... குழியானை!" குஞ்சுத்தாச்சுமாவின் தலை சுழன்றது. அவளால் மூச்சே விட முடியவில்லை. ஒரு நொடிக்குள் தன் வாழ்வு முழுவதும் அவள் முன் தோன்றி மறைந்தது. இரு கைளாலும் தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு அவள் இருந்த இடத்திலேயே உட்கார்ந்துவிட்டாள். குஞ்சுப்பார்த்துமா அருகே சென்று குழந்தைகளை விரட்டினாள்.

"என்ன வேணும் உங்களுக்கு?"

"குளுகுளு, குளுகுளு."

"என்னது?"

"பெப்பே."

"என்னது?"

"குழியானை, குழியானை!"

"குழியானைக்கு என்ன?" அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒருவேளை குறும்புக்காரப் பிள்ளைகள் ஏதாவது குழியானை ஒன்றைப் பிடித்து உம்மாவின் காதில் விட்டார்களா? அவள் உம்மாவிடம் விசாரித்தாள்; "என்ன ஆச்சும்மா?" என்றாள்.

உம்மா ஒன்றும் சொல்லவில்லை. எதைச் சொல்வது? உலகமெல்லாம் அதோ, தகர்ந்து கிடக்கின்றது. இனி எதற்காக உயிர் வாழ வேண்டும்? குஞ்சுப்பாத்துமா மீண்டும் விசாரித்தாள்; "உங்கள் தாத்தாவுடைய கொம்பனானை....அது ஒரு குழியானையாமடி!.. ஒரு குழியானையாம்!" உம்மாவின் தொண்டை தழுதழுத்தது. கண்களில் நீர் வழிந்தது.

முற்றும்

★

# உருதுத் தொடர் விளக்கம்

1. ரப்புல் அல் அமீன் - உலகைப் படைத்தவர்.
2. குப்பாயம் - சட்டை.
3. ஹஜ் - மக்கா யாத்திரை.
4. நேர்ச்சை - பிரார்த்தனை.
5. நிக்காஹ் - கல்யாணம்.
6. ரஸூல் - நபிநாயகம்.
7. முத்தவல்லி - மசூதித் தர்மகர்த்தா.
8. முஸலியார் - முஸ்லிம் குரு.
9. ரஸூல் அல்லாஹ் (ஸல் லல்லாஹு) அலைஹிஸல் அமின் - அல்லாவின் திருத்தூதர் முகம்மது; அவர்கள்மீது சாந்தி உண்டாவதாக.
10. இப்ரீத், ஜின், மலக்கு - பூதங்கள் போன்ற கேடு செய்யும் சக்திகள்.
11. காக்கா - சகோதரன்.
12. பிஸ்மில்லா: (பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்) என்பதன் சுருக்கம் - அருளாளனும் அன்புடையோனுமான ஆண்டவன் திருநாமத்தால்.
13. மொய்தீன்: (முஹய்யதீன், முஹிய்யுத்தீன்) - இராக் நாட்டில் வாழ்ந்த ஓர் ஆத்மிக மெய்ஞ்ஞான குரு.
14. மவுத் ஆதல் - இறத்தல்.
15. ஸந்தோக்- சவப்பெட்டி.
16. லா இல்லாஹ் இல்லல் லாஹு - அல்லாஹ் தவிர வேறு இறைவன் இல்லை. முகம்மது அவருடைய திருத்தூதர்.
17. கபரிஸ்தான் - (கபருஸ்தான்) - சவங்களைப் புதைக்கும் இடம்.
18. தௌபா செய்தல் - இறைவனை வேண்டிப் பாவ மன்னிப்புத் தேடல்.
19. கித்தாப் - புத்தகம்; இங்கே குர்ஆன்.
20. பைத்து - கவிதையில் ஒரு கண்ணி.
21. கெஸ்ஸு (கிஸ்ஸா) - கதை, வரலாறு.